# முக்கிமலை ஊர்
# கோவை வாழ் மக்கள் நல மன்றம்

**(Welfare Association of Mukkimalai Villagers living in Coimbatore)**

(**பதிவு எண் :** SRG/Coimbatore North/139/2024 ; Dated 12.07.2024)

# பொது ஆவணத்தொகுப்பு
# (GENERAL DOSSIER)

## 2024 - 2025

# முக்கிமலை ஊர்
# கோவை வாழ் மக்கள் நல மன்றம்

**(Welfare Association of Mukkimalai Villagers living in Coimbatore)**

(**பதிவு எண் :** SRG/Coimbatore North/139/2024 ; Dated 12.07.2024)

# பொது ஆவணத்தொகுப்பு
# (GENERAL DOSSIER)

# 2024 - 2025

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## 2024-2025 நிதியாண்டின்
## ஆவணத் தொகுப்பு (DOSSIER)

## உள்ளடக்கம்


1. சங்கத்தின் BYE-LAWS (விதிமுறைகள்)
2. சங்கத்தின் பதிவு சான்றிதழ்
3. 2024-2025 வருடத்திய வரவு செலவு விவரங்கள்
4. 2024-2025 நடந்த நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்களும் தீர்மானங்களும்
   - 12-5-2024 - பூர்வாங்க கூட்டம் 1
   - 2-6-2024 - பூர்வாங்க கூட்டம் 2
   - 23-6-2024 - பூர்வாங்க கூட்டம் 3
   - 14-7-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 21-7-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 28-7-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 4-8-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 11-8-2024 - பொதுக்குழு கூட்டம்
   - 15-8-2024 - ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் கூட்டம்
   - 1-9-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 6-10-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 3-11-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 8-12-2024 - நிர்வாக குழு கூட்டம்
   - 12-1-2025 - நிர்வாக குழு கூட்டம்
   - 26-2-2025 - பொதுக்குழு மற்றும் நிர்வாக குழு கூட்டம்
   - 15-3-2025 - நிர்வாக குழு கூட்டம்

भारतीय गैर न्यायिक

भारत INDIA

रु. 500 FIVE HUNDRED RUPEES

पाँच सौ रुपये Rs. 500

सत्यमेव जयते

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU RS. 500/- AN 714064

M. DORAISWAMY "STAMP VENDOR" 10-A, STATE BANK ROAD, COIMBATORE - 641 018. L.No : 7333/B1/97-3

31.05.2024 MUKKIMALAI OOR COIMBATORE VAAZH MAKKAL NALA MANDRAM

COIMBATORE

## BY-LAWS OF THE ASSOCIATION
## RULES AND REGULATIONS

**NAME OF THE ASSOCIATION:**

The name of the association shall be **Mukkimalai Oor Coimbatore Vaazh Makkal Nala Mandram** (முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்)

**REGISTERED OFFICE OF THE ASSOCIATION:**

The Registered Address of the association shall be at **SF NO 131/2B1 AND 131/2C1, SITE NO 140, DOOR NO 4/645/25, SRI KANNIKA NAGAR, C M PALAYAM BILICHI, COIMBATORE NORTH – 641019.**

T. Chandran

PRESIDENT

## THE DATE OF FORMATION OF THE ASSICIATION:

The Association came into existence with effect from 2nd June 2024.

## JURISDICITION OF THE REGISTRAR:

The Registered office of the association is situated within the jurisdiction of the District Registrar of Societies, Coimbatore North.

## DEFINITIONS:

In the Bye-laws, unless the context otherwise requires both words and expressions have the following meaning.

**"ASSOCIATION"** means the Association established under the Memorandum of the Association of the **MUKKIMALAI OOR COIMBATORE VAAZH MAKKAL NALA MANDRAM.**

**"EXECUTIVE COMMITTEE"** means and includes the members of the Governing Body prescribed by the Articles to whom the Management of the association is entrusted.

**"OFFICE"** means office of Association.

**"MEMBERS OF THE COMMITTEE" or "COMMITEE MEMBERS"** shall mean Members appointed to the Committee in the manner prescribed by the Bye-laws from time to time.

**"PRESIDENT "**means the President of the Association.

**"VICE PRESIDENT"** means the Vice President of the Association.

**"TREASURER"** means the Treasurer of the Association.

**"JOINT TREASURER"** means the Joint Treasurer of the Association.

**"SECRETARY"** means the Secretary of the Association.

**"JOINT SECRETARY"** means the Joint Secretary of the Association.

The masculine gender used may please be read in feminine gender wherever necessary without repugnant to the context and meaning.

The singular terms wherever used may please be read suitably in plural terms wherever necessary without repugnant to the context and meaning.

J. Chandran

PRESIDENT

**BUSINESS HOURS:**

The working hours of the Association shall be from 10.00 AM to 5.00 PM on all working days expect on Sundays and Government Holidays.

**OBJECTIVES:**

1. To organize and conduct social, cultural and educational programmes and activities for the benefit of the Coimbatore based Mukkimalai villagers, Inmates of Mukkimalai village and others irrespective of caste and creed.

2. To foster a feeling of brotherhood, fellowship, welfare and harmony among the members.

3. To establish special funds for its activities such as helping the poor for their education, medical, housing, marriages, vocations, etc.

4. To organize fund raising programmes such as small saving schemes, benefits shows or such other activities.

5. To raise funds by way of subscriptions, donations from members and others and to establish, maintain & operate a **'Corpus Fund"** from such collections for the benefits of the members.

6. To take or receive any gift whether money, property and donations for the objectives of the association.

7. To associate with Government or other quasi government agencies or non-governmental charitable agencies for promoting social, scientific and developmental projects and activities.

8. To negotiate and enter into agreements with government or local bodies or other public, private bodies as may be seen conducive for the promotion or accomplishment of the objectives of the association in availing such grants, allowances etc.

9. To invest and deposit in banks, Government, quasi government institutions or otherwise deal with the funds of the association.

10. To organize welfare programmes for the members.

11. To organize educational, cultural, medical, sports, recreational and any other social activities for the benefits of the members.

T. Chandran

PRESIDENT

12. To organize such other activities of similar nature to attain the objectives of the association.

13. To buy, sell, lease, exchange or otherwise dispose off Association properties for such consideration as deemed fit by the Association; Any sale /purchase of assets or expenditure above Rs.50000/- shall be decided in AGM/EGM. In all other cases, the decision of the Executive Committee Meeting shall be final.

14. To do all such acts and deeds which are incidental and conductive to the attainment of the above objects or any of them;

15. The Association will function and act as per the provisions of The Tamil Nadu Societies Registration Act, 1975 and Rules 1978.

## ELIGIBILITY OF MEMBERS

Member of the association shall be a person who, having been admitted as a member in the Register of the Association according to the rules and regulations of the association.

Subsequent to the formation of the Association new membership shall be placed before the Executive Committee for attention and approval.

In the Executive Committee Meeting only the elected EC Members and office bearers shall have the right to attend and vote to pass resolutions. However in the General Body meeting and in the Extraordinary General Body Meeting the members and in their absence their authorized representatives with the authorization letters from the members shall have the right to attend and vote.

All the Members are bound by the Bye-laws of the Association.

## MAINTENANCE OF FUNDS:

The funds of Association may be raised by way of subscriptions from Members, Donations. Rents, Contributions, Deposits, Loans, etc., and from the Corpus Fund maintained and operated by the Association, as envisaged above to finance the object of the Association.

## EXECUTIVE COMMITTEE:

The administration of the Association is vested with the Executive Committee which shall have not more than 32 Members in all including the office bearers.

J. Chandran
PRESIDENT

The present executive committee shall consist of the following office bearers;

President: J. Chandran (Aadhar Number: 8686 2485 0733)

Vice President: K. Arasu (Aadhar Number: 9498 9475 6449)

Secretary: R. Subramani (Aadhar Number: 9993 0898 9569)

Joint Secretary: R. Sivakumar (Aadhar Number: 6212 1629 9578)

Treasurer: B. Sagadevan (Aadhar Number: 9823 6979 7438)

Joint Treasurer: J. Ganesh (Aadhar Number: 3177 0326 4255)

AND

Three Committee members:

K. Ramachandran (Aadhar Number: 4296 3407 5942)

B. Mohanraj (Aadhar Number: 8414 1177 9533)

M.R. Sivakumar (Aadhar Number: 2557 0508 6224)

The Executive committee may create any new posts in addition to the above office bearer posts or change the name of the posts.

**ELECTION OF EXECUTIVE COMMITTEE MEMBERS AND OFFICE BEARERS:**

The Executive Committee Members and Office bearers shall be elected by the General Body except the first Committee Members who are promoters to the Association.

Member of the Association shall only be eligible to hold a post of an Office Bearer or become Executive Committee Member.

Any person holding any post in political party shall not be eligible to become an executive committee member.

The members of Executive Committee can stand for re-election but shall not hold office either as Executive Members or any of the office bearers for more than three consecutive terms.

In case of interim vacancy in the office bearers due to resignation or any other reason, the EC may elect one among them for the post of Office Bearer. At any point of time, the number of members shall not fall below 7 (Seven). If number of EC members falls below 7 (Seven), the remaining members shall not do any act except call for Extra Ordinary General Meeting to elect new members for the EC.

J. Chandran

PRESIDENT

**TERM OF EXECUTIVE COMMITTEE MEMBERS AND OFFICE BEARERS:**

The term of Executive Committee members and Office Bearers shall be three years. However they shall continue to hold their responsibilities till the new Executive Committee and other office bearers are elected.

The Executive Committee has the power to remove any of the member/executive committee member or the office bearer if it considers that the activities of the member are prejudicial to the interest of the association. But for removal of members, approval is required from two-third of the members in the Executive Committee.

**MEETING OF EXECUTIVE COMMITTEE:**

The meeting of the Executive Committee shall be held on First Sunday of every month at a time convenient to Members or when President desires to call such meeting to discuss important matters.

The meeting shall normally be held at the office of the Association. However, they may also be held at such other convenient place as may be decided by the Executive Committee.

The quorum for the meeting of the Committee shall be one half of the Members of Committee.

Every question before Committee shall be decided by a majority of votes. In case of stalemate of votes, the same shall be considered again in the next meeting of the Committee. If the stalemate still persists, the same shall be referred to the General Body.

The proceeding of every Committee shall be recorded in a minute book kept for this purpose. Such minutes shall be confirmed by the Committee in its next meeting and initialed by the President or by the Presiding Officer.

All the decisions shall be displayed in the Notice Board for the benefit of Members.

Any EC Members/Office Bearers who fails to attend three consecutive monthly meetings without prior intimation may cease to be a Member of the E.C.

The funds generated by donations, gifts, collections, subscriptions etc., will be spent for the welfare of the members as directed by the Members.

**SUB-COMMITTEE(S):**

Executive committee may form one or more sub-committees for its smooth operation. Sub-committee may consist of either members or non-members. The term of sub-committee shall be decided by the executive committee.

PRESIDENT

**BANK ACCOUNTS:**

The funds collected will be kept in a bank and the transaction shall be carried out as set forth below.

**OPERATION OF THE BANK ACCOUNTS:**

The authorized signatories to operate SB/Current accounts of Association shall be the President, the Secretary and the Treasurer. Any two of these three office bearers can operate the SB/current accounts.

To invest, re-invest, renew or withdraw for re-investment purposes only in any deposit account a resolution shall be passed by the Executive Committee, whenever necessary, to such effect and produced along with the relevant application forms to make such investment, reinvestment, renewals and withdrawals for re-investment purpose with the signatures of the authorized signatories affixing the common seal of the Association under by-law duly endorsed by at latest two of the EC Members. If any deposit is currently in operation in any financial institution, a copy of this bye-law shall be given to the financial institution concerned in the manner aforesaid bringing into force the mandatory endorsements by the number of EC Members prescribed with the common seal of the Association.

All payment by the association exceeding the sum of Rs.5,000/-(Rupees Five Thousands Only) shall be paid through cheques only. However payment of wages to employees of the Association may be paid by cash. All vouchers shall be duly authorized by the President/Treasurer/Secretary (any two of the three) for these purposes.

**POWER AND DUTIES OF THE OFFICE BEARERS:**

**PRESIDENT:**

The President shall be the Effective Head of the Association. His advice will be taken in all matters pertaining to the administration of the Association. He shall preside over meeting of Executive Committee and the General Body.

**VICE-PRESIDENT:**

In the absence of the President, the Vice-President shall lead the Association and act on behalf of the President.

**SECRETARY:**

The Secretary shall perform all such activities/duties necessary for achieving the objectives of the Association.

J. Chandran

PRESIDENT

He shall conduct all correspondence, arrange meetings, record and maintain minutes of the Meetings.

He is under the general control of the Executive Committee. He is to watch over and carry out all administrative and executive works of the Association.

He shall maintain a membership register, files, correspondence and inventory of goods belonging to the Association.

He shall call for Executive Committee/General Body Meetings on the advice on the President or on request in writing by at least 25% of the total members of the Association.

He will issue notice to the Members on the advice of the Executive Committee regarding the meeting.

He shall prepare at the closures of year a report of the working of the Association showing the financial conditions, activities and programs. The draft report shall be subject to the approval of the Executive Committee before the presentation to the General Body.

He shall be responsible for submitting the statements, reports and other documents to be submitted/filled by the Associations with the concerned authorities.

The secretary shall wherever necessary or as so instructed by the Executive Committee, conduct, appoint and nominate Counsels, Advocates, Solicitors and Pleaders to advice or to represent in all legal bodies.

He shall have powers to act co-signatory with other office bearers.

He shall perform such other duties as may be incidental to the office of the secretary.

**JOINT SECRETARY:**

The joint secretary shall assist Secretary in his functions and also assume his role in his absence.

**TREASURER:**

He shall receive all the money payable to the Associations by the members towards membership, subscription, donation, gift etc.

He shall issue receipts for all such money and obtain necessary receipt/vouchers for all payments made from the Association fund.

He shall remit all amounts received by him to bank retaining with him a sum of Rs.10,000/. He shall send reports or statement of accounts of the Association to the Secretary or the President or the Executive Committee if they so desire.

T. Chandran

PRESIDENT

He will spend money backed by bills or vouchers countersigned by the Secretary or the President.

He shall operate the Association accounts along with the Secretary or the President and the will be assisted by a manager, if appointed by the Association as per needs.

**JOINT TREASURER:**

He shall assist the Treasurer of the Association in maintaining accounts under the guidance of the Secretary or the President.

**ACCOUNTS AND AUDIT:**

The accounting year of the Association shall be the period as per the Income Tax Act, 1961.

The Committee shall cause proper books of accounts to keep with respect to all sums of money received and spent by the Association and the Assets and Liabilities of the Association.

The books of accounts shall be kept at the office of the association and shall be open to inspection on a written request by any member during the office hours with prior approval from Secretary.

The Association shall at each Annual General Body Meeting appoint an Auditor to hold his office till the next Annul General Body Meeting and fix his remuneration.

The first Auditor shall be appointed by the Executive Committee.

The Accounts of every accounting year shall examined and the correctness thereof ascertained by the Auditor who shall make a Report to the Executive Committee of the Association on the accounts examined by him and lay the Balance Sheet and Income and Expenditure Accounts before the AGM during his tenure of the office.

**GENRAL BODY MEETING:**

**ANNUAL GENERAL BODY MEETING:**

At least one General Body meeting shall be held on in a year not later than six months from the close of accounting year. The following transactions will be transaction in the above meeting:

a) To review the report of the Committee on Balance Sheet and Auditors report of the preceding year.
b) To elect the Member of the Executive Committee:
c) To elect the Auditor and fix remuneration:

T. Chandran

PRESIDENT

d) To transact any other business which may be brought forward the committee or any Members with the leave of the president and /or which have been notified and placed on the Agenda by the Committee as herein before provided:

The quorum for the General Body Meeting shall be One-third of the members of the Association on role.

If the required quorum is not available within thirty minutes of the fixed time, the meeting shall be conducted after thirty minute with the members present on the same day and Venue.

Every question shall be decided by simple majority of votes cast by the members present and voting except for the question which requires a special resolution as mentioned hereafter. In case of stalemate in voting, the question shall be decided by drawing lots.

A member not able to attend the meeting shall nominate another person of his choice to attend and vote provided that such information is sent to the Committee in advance, in writing. A member is eligible to stand for election for only one post in an election.

**EXTRAORDINARY GENERAL BODY MEETING:**

The Executive Committee may at any time call for an Extraordinary General Body Meeting of the Association and shall conduct such a meeting within one month from the date of receipt of requisition from 25% of the Members of the Association on roll. Emergency General Body Meeting can be called within 24 Hours if so required on receipt of receipt of requisition from 25% of the Members of the Association on roll.

**NOTICE FOR THE ANNUAL GENARAL BODY MEETING:**

Notice of every such General Body Meeting shall be given to all Members with 21 clear days and the meeting itself shall be conducted within 30 days of notice.

The notice shall contain the date, time and venue of the meeting and also Agenda of the meeting and in case of amendment to the bye-laws or the objectives of the Association as contained in the Memorandum if intended to be proposed, shall contain a copy of every such amendment proposed. The notice of the general Body Meeting may be given to Members in one or more modes of the following ways;

a) By circulating the notice book and getting it signed by the Members.
b) By sending notices by certificate or posting;
c) By placing the notice on the notice board in the complex:
d) By using the electronic media.

The proceeding of the General Body Meeting shall not be invalid merely by reasons of irregularities in the services of the notice.

J. Chandran
PRESIDENT

**SPECIAL RESOLUTIONS:**

Special Resolution is a resolution passed by not less than two-third of the votes cast by members present at the meeting.

Special resolutions are required for the following subject:

a) To add/amend the objectives relating to the Memorandum of the Association;
b) To amend the bye-laws of the Association:
c) To expend the fund in cases of emergencies:
d) To change the name of the Society/Association

The resolution so passed shall come into effect from the date of passing of the resolutions; however the copy of the resolution shall be filed with the Registrar within three months.

**ACTIVITES OF THE ASSOCIATION:**

"The Executive Committee shall be empowered to form a Special-Committee for a specific task to be assigned for a specific period if the value of the job is estimated to rupees fifty thousand and above. Such Special-Committee may consist of a members chosen from among the Executive Committee and ordinary members from the General Body besides the Secretary and the President as the ex-officio members of the sub-Committee. The Special-Committee shall entertain quotations, scrutinize and award contracts. The tenure of the Special-Committee shall be decided by the EC.

**EXHIBITION OF REGISTERS:**

The Members register, minutes book and books of accounts shall be kept at the registered office of the Association during the working hours for inspection by Member on written request and prior approval of Secretary;

Any Member of the Association may at any mutually convenient time inspect the accounts of the Association either by himself or by an agent authorized by him in writing and with prior approval of Secretary. An extract of accounts can be had on payment of charges for making copies of the same with due prior approval.

**APPLICATION OF SOCIETIES ACT:**

For matters not mentioned specifically in the bye-laws the provisions of the Tamil Nadu Societies Registration Act 1975 and Rules made there under shall apply.

**MINUTES OF THE GENERAL BODY MEETING:**

The proceeding of the General Body meeting shall be recorded in a minute's book kept for this purpose. The Executive Committee shall consider the minutes, approve and get it initialed by the chairman of meeting.

T. Chandran

PRESIDENT

**MINUTES OF THE COMMITTEE MEETING:**

The proceeding of the Executive Committee meeting shall be recorded in the minute book kept for purpose. Such minutes shall be confirmed by the Committee at its next meeting by having them initialed by all the members present and by the Presiding officer.

**AMENDMNENT TO BYE-LAWS:**

No amendment or alteration or cancelation of a bye-law and no enactment of new bye-law shall be made except at a General Body meeting with special resolution passed by not less than two-third of the votes cast by members present in the meeting.

**SEAL OF THE ASSOCIATION:**

The Association shall have Common seal which shall be in the custody of the Secretary. It shall be affixed on all important and legal documents by the Secretary in the presence of any two Members of the executive Committee.

**SALE OF BYE-LAW COPY:**

Copy of bye-law, the receipts and expenditure accounts and the balance sheet if any required by any member shall be supplied to them at the cost of talking out copies of all or any of them.

**APPOINTMENT OF EMPLOYEES FOR THE ASSICIATION OFFICE:**

The Executive Committee shall prescribe from time to time the strength of the Association establishment, service conditions, scales of pay and allowances admissible to the employees subject to the budget allotment by the General Body.

**DISPUTES:**

All disputes either between Members and the Association or amongst the Members, if the disputes pertaining to any common services, shall be amicably settled by the Executive Committee, failing which they would be referred to the General Body for voting and decision. The General Body after a through debate shall settle the dispute by majority of votes by the Members present.

However, if any case is registered with the police department/court by the member/s against the association or any of the office bearers or executive committee members in respect of any dispute between member/s and the association, the executive committee shall appoint any legal advisor to represent the association or office bearers/committee members and fix the expenses including fee payable to the legal advisor related to the dispute between association and member/s.

PRESIDENT

the expenses including fee payable to the legal advisor related to the dispute between association and member/s.

**CORPUS FUND:**

The corpus fund should never be allowed to get depleted except in case of emergency. Money can be withdrawn from Corpus fund to meet emergency expenses with the approval of the EC/AGM. However the money so withdrawn from the Corpus Fund should be replenished.

**WE CERTIFY THAT THE ABOVE AS THE CORRECT COPY OF THE CONSTITUTION RULES AND REGULATIONS OF OUR ASSOCIATION.**

| SL. NO. | Name | Designation | Signature |
|---|---|---|---|
| 1 | J. CHANDRAN | President | J. Chandran |
| 2 | K. ARASU | Vice President | [signature] |
| 3 | R. SUBRAMANI | Secretary | [signature] |
| 4 | R. SIVAKUMAR | Joint Secretary | [signature] |
| 5 | B. SAGADEVAN | Treasurer | [signature] |
| 6 | J. GANESH | Joint Treasurer | [signature] |
| 7 | K. RAMACHANDRAN | Executive Committee Member | [signature] |
| 8 | B. MOHANRAJ | Executive Committee Member | [signature] |
| 9 | M.R. SIVAKUMAR | Executive Committee Member | [signature] |

Place: **Coimbatore**

Date: **02.06.2024**

J. Chandran

PRESIDENT

# FORM NO.II

(See Rule 8 of the Tamil Nadu Societies Registration Rules, 1978)

**CERTIFICATE OF REGISTRATION UNDER SECTION 10 OF THE TAMIL NADU SOCIETIES REGISTRATION ACT,1975 (TAMIL NADU ACT 27 OF 1975)**

**CERTIFICATE OF REGISTRATION OF SOCIETIES**

Sl. No. SRG/Coimbatore North/139/2024

I hereby certify that **MUKKIMALAI OOR COIMBATORE VAAZH MAKKAL NALA MANDRAM** has this day been registered under the Tamil Nadu Societies Registration Act,1975 (Tamil Nadu Act 27 of 1975).

Given under my hand at Coimbatore North this 12th day of July, 2024

Digitally Signed by Thiru/ Tmt/ Selvi Prabhavathi M

Date :12-Jul-2024

Station : Coimbatore North

Signature of the Registrar

Signature Not Verified

Digitally signed by
Date: 2024.07.12
12:01:10 IST

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## 2024- 2025 நிதியாண்டில் சங்கத்திற்காக பெறப்பட்ட பதிவு கட்டணம், வருட சந்தா, பொது நன்கொடை, மயானத்திற்கான நன்கொடை, மகா சிவராத்திரிக்கான நன்கொடை முதலான விவரங்கள்

### சங்க உறுப்பினர்களிடம் பெறப்பட்ட நன்கொடை விவரங்கள் (ரூபாயில்)

| எண் | பெயர் | வகை | பதிவு | சந்தா | பொது நன்கொடை | மயான நன்கொடை | மகா சிவராத்திரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | N சுகுமாரன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 4,55,000 | 60,000 | 26,000 | 5,42,700 |
| 2 | M N G மணி | அங்கத்தினர் | 500 | 1,200 | 4,55,000 | 60,000 | 25,000 | 5,41,700 |
| 3 | டாக்டர் N ராஜன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 50,000 | 60,000 | 10,000 | 1,21,700 |
| 4 | J சந்திரன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 50,000 | 5,000 | 2,000 | 58,700 |
| 5 | K சந்திரன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 27,000 | 5,000 | 3,000 | 36,700 |
| 6 | K ராமச்சந்திரன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 20,550 | 10,000 | 2,000 | 34,250 |
| 7 | B ஜோதி | அங்கத்தினர் | 500 | 1,200 | 22,000 | 5,000 | 2,000 | 30,700 |
| 8 | K மணி | அங்கத்தினர் | 500 | 1,200 | 22,000 | 5,000 | 2,000 | 30,700 |
| 9 | K நஞ்சுண்டன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 22,000 | 5,000 | 2,000 | 30,700 |
| 10 | B ஆனந்தகுமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 23,500 | 2,000 | | 27,200 |
| 11 | K அரசு | அங்கத்தினர் | 500 | 1,200 | 15,000 | 5,000 | 3,000 | 24,700 |
| 12 | R சிவக்குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 12,000 | 5,000 | 4,000 | 22,700 |
| 13 | J நகுலன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 12,000 | 5,000 | 2,000 | 20,700 |
| 14 | பார்வதி கணேசன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 7,000 | 5,000 | 3,000 | 16,700 |
| 15 | R சுப்பிரமணி | அங்கத்தினர் | 500 | 1,200 | 10,000 | 2,000 | 1,500 | 15,200 |
| 16 | R சுனில் குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 12,000 | | 1,500 | 15,200 |
| 17 | B பிரபு | அங்கத்தினர் | 500 | 1,200 | 10,000 | 2,000 | 1,000 | 14,700 |
| 18 | K K ராமன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 6,000 | 5,000 | 2,000 | 14,700 |
| 19 | B சிவப்பிரகாஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 12,000 | | | 13,700 |
| 20 | N ராஜேந்திரன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 7,000 | 2,000 | 2,500 | 13,200 |
| 21 | B ராஜேஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 10,000 | | 1,000 | 12,700 |
| 22 | B பீமன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 7,000 | 2,000 | 2,000 | 12,700 |
| 23 | R விக்னேஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 3,200 | 5,000 | 2,000 | 11,900 |
| 24 | R ஆனந்தகுமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 10,000 | | | 11,700 |
| 25 | R செந்தில்குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 10,000 | | | 11,700 |
| 26 | M ஸ்ரீபதி | அங்கத்தினர் | 500 | 1,200 | 7,000 | | 2,000 | 10,700 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | J B சண்முகம் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,000 | 2,000 | 1,000 | 9,700 |
| 28 | B மோகன்ராஜ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,900 | 1,000 | 500 | 9,100 |
| 29 | R ரமேஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,000 | | 1,000 | 7,700 |
| 30 | சரஸ்வதி பீமன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,000 | | 1,000 | 7,700 |
| 31 | B சகாதேவன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 3,000 | 1,500 | 1,000 | 7,200 |
| 32 | L பெள்ளி | அங்கத்தினர் | 500 | 1,200 | 4,000 | | 1,500 | 7,200 |
| 33 | A மகேஷ் குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,000 | | | 6,700 |
| 34 | J B சுரேஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | 5,000 | | | 6,700 |
| 35 | R வினோத் குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | | 5,000 | | 6,700 |
| 36 | M R சிவகுமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 2,000 | 2,000 | 500 | 6,200 |
| 37 | B தருமன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 2,000 | | 2,000 | 5,700 |
| 38 | B சுந்தரம் | அங்கத்தினர் | 500 | 1,200 | 3,300 | | 600 | 5,600 |
| 39 | பார்வதி ராமன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 2,900 | | 1,000 | 5,600 |
| 40 | B மணிவேலன் | அங்கத்தினர் | 500 | 1,200 | 2,000 | 300 | 500 | 4,500 |
| 41 | J B சிவகுமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | 2,000 | | | 3,700 |
| 42 | R பிரதீப் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | 1,000 | 2,700 |
| 43 | J B சகாதேவன் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | 500 | 2,200 |
| 44 | B சத்தியசீலன் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 45 | C சோமசுந்தரம் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 46 | டாக்டர் N சந்தோஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 47 | J கணேஷ் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 48 | J ராஜ்குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 49 | M R தினேஷ்குமார் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| 50 | R சிவனேசன் | அங்கத்தினர் | 500 | 1,200 | | | | 1,700 |
| | **மொத்தம் (அங்கத்தினர்)** | | **25,000** | **60,000** | **13,49,350** | **2,66,800** | **1,13,600** | **18,14,750** |

## சங்க ஆதரவாளர்கள் மற்றும் முக்கிமலை சகோதரிகளிடம் பெறப்பட்ட நன்கொடை விவரங்கள் (ரூபாயில்)

| எண் | பெயர் | வகை | பதிவு | சந்தா | பொது நன்கொடை | மயான நன்கொடை | மகா சிவராத்திரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | N லைலா சந்திரன் | ஆதரவாளர் | | | | | 5,000 | 5,000 |
| 2 | S. நரேஷ் (J.B. சுரேஷ்) | ஆதரவாளர் | | | 2,000 | | 500 | 2,500 |
| 3 | M. அம்பிகா மற்றும் M. தேவிகா (K. மணி) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 4 | B. முகேஷ் (B. பீமன்) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 5 | R பேபி (KK ராமன்) | ஆதரவாளர் | | | 1,000 | | | 1,000 |
| 6 | B. ஜெயந்தி (L பெள்ளி) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 7 | C. நிஷாந்தி (K. சந்திரன்) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 8 | R. சுதா மற்றும் சுவித் (K.K. ராமன்) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | B. தீபா மற்றும் B. ஸ்ரீதேவி (L பெள்ளி) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 10 | பிரமிதா உதயகுமார் (பார்வதி கணேசன்) | ஆதரவாளர் | | | 1,000 | | | 1,000 |
| 11 | B. சாந்தி (B. சுந்தரம்) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 12 | R. சோனா (M.R. சிவகுமார்) | ஆதரவாளர் | | | | | 1,000 | 1,000 |
| 13 | பேபி சுதா | ஆதரவாளர் | | | 1,000 | | | 1,000 |
| 14 | இத்தலார் மல்லு மம்மி (J நகுலன்) | ஆதரவாளர் | | | | | 500 | 500 |
| 15 | சிவனடியார் பாபுஜி | ஆதரவாளர் | | | 500 | | | 500 |
| 16 | S. ஸ்ருதி (J.B. சுரேஷ்) | ஆதரவாளர் | | | | | 500 | 500 |
| 17 | J ரவிக்குமார் | ஆதரவாளர் | | | 1 | | | 1 |
| | **மொத்தம்** (ஆதரவாளர்) | | | | **5,501** | **0** | **14,500** | **20,001** |
| | **மொத்தம்** (அங்கத்தினர் + ஆதரவாளர்) | | **25,000** | **60,000** | **13,54,851** | **2,66,800** | **1,28,100** | **18,34,751** |

## வரவு செலவு விபரங்கள் *2024-2025* நிதியாண்டு *(2-6-2024 – 31-3-2025)*

| எண் | வரவு | தொகை (ரூபாயில்) | எண் | செலவு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | பதிவு கட்டணம் | 25,000 | 1 | நிரந்தர வைப்பு நிதி | 15,00,000 |
| 2 | வருட சந்தா | 60,000 | 2 | மயானத்திற்கு பங்களிப்பு தொகை | 1,00,000 |
| 3 | பொது நன்கொடைகள் | 13,54,851 | 3 | கல்வி உதவித் தொகை - S ரினிதா | 5,000 |
| 4 | மயானத்திற்கான நன்கொடைகள் | 2,66,800 | 4 | மருத்துவ உதவித் தொகை - N ராஜேந்திரன் | 5,000 |
| 5 | மகா சிவராத்திரி நன்கொடைகள் | 1,28,100 | 5 | மருத்துவ உதவித் தொகை - B பீமன் | 5,000 |
| 6 | மாதாந்திர வட்டி | 1,708 | 6 | மருத்துவ உதவித் தொகை – K ராமச்சந்திரன் | 5,000 |
| 7 | சிவராத்திரி பொருட்கள் திரும்ப பெற்ற வகையில் | 2,700 | 7 | மருத்துவ உதவித் தொகை - MR சிவக்குமார் | 5,000 |
| 8 | ஆம்புலன்ஸ் கட்டணம் திரும்ப பெற்ற வகையில் | 500 | 8 | மருத்துவ உதவித் தொகை - K சந்திரன் | 5,000 |
| 9 | சிவராத்திரிக்கு சேர்ந்த காணிக்கை | 5,200 | 9 | மருத்துவ உதவித் தொகை - J நகுலன் | 5,000 |
| 10 | மகா சிவராத்திரி விழா சீரியல் செட் வாடகை வகையில் | 500 | 10 | மருத்துவ உதவித் தொகை - C சோமசுந்தரம் | 5,000 |
| | | | 11 | வண்டி வாடகை - குண்டியம்மாள் மறைவு | 3,500 |
| | | | 12 | வண்டி வாடகை - சங்க கூட்டம் - 12-1-2025 | 3,500 |
| | | | 13 | ஊர் - பொது செலவுகள் | 5,000 |
| | | | 14 | ஊர் - மயான செலவுகள் | 1,500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 15 | வண்டி வாடகை - கிண்ணகொரை ஜானகி அம்மாள் மறைவு | 10,000 |
| | | | 16 | மகா சிவராத்திரி பூஜை - நிரந்தர பொருட்கள் | 32,686 |
| | | | 17 | மகா சிவராத்திரி பூஜை – அலங்காரம் | 6,230 |
| | | | 18 | மகா சிவராத்திரி பூஜை - உணவு | 34,025 |
| | | | 19 | மகா சிவராத்திரி பூஜை - உணவு தயாரிப்பு | 22,500 |
| | | | 20 | மகா சிவராத்திரி பூஜை – பொது | 1,125 |
| | | | 21 | மகா சிவராத்திரி பூஜை - பூஜை சாமான்கள் | 7,235 |
| | | | 22 | மகா சிவராத்திரி பூஜை – போக்குவரத்து | 18,200 |
| | | | 23 | கோவில் பூஜாரி சன்மானம் | 1,000 |
| | | | 24 | மணியட்டி கும்பாபிஷேகம் | 500 |
| | | | 25 | N மாதன் ஈமச்சடங்கு -உணவு | 16,839 |
| | | | 26 | N மாதன் ஈமச்சடங்கு – மயானம் | 7,100 |
| | | | 27 | N மாதன் ஈமச்சடங்கு – வேலையாட்கள் | 1,600 |
| | | | 28 | N மாதன் ஈமச்சடங்கு - சிற்றுண்டி வகை | 3,120 |
| | | | 29 | N மாதன் ஈமச்சடங்கு – போக்குவரத்து | 5,800 |
| | | | 30 | வாகன செலவு - 15-3-2025 கூட்டத்தில் பங்கேற்க | 3,500 |
| | மொத்த வரவு (ரூபாயில்) | **18,45,459** | | மொத்த வைப்பு நிதி+செலவு | **18,24,960** |
| | குறைப்பு: சாமியானவுக்கு நேரடியாக கொடுத்தது (டாக்டர் N சுகுமாரன்) | **26,000** | | குறைப்பு: சாமியானவுக்கு நேரடியாக கொடுத்தது (டாக்டர் N சுகுமாரன்) | **26,000** |
| | வங்கி மூலம் செய்த பரிவர்த்தனை - வரவு | **18,19,459** | | வங்கி மூலம் செய்த பரிவர்த்தனை - வைப்பு நிதி+செலவு | **17,98,960** |
| | 1-4-2025 கணக்கிற்கு எடுத்துச் செல்லும் உபரித்தொகை | **20,499** | | | |

ஒப்பம்/ தேதி: 31-3-2025

திரு J சந்திரன்
சங்கத் தலைவர்

திரு K சந்திர கவுடர்
ஊர் தலைவர்

டாக்டர் N சுகுமாரன்
தலைவர், நிதி நிலை குழு

திரு R சுப்பிரமணி
சங்க செயலாளர்

திரு B சகாதேவன்
சங்க பொருளாளர்

திரு D போஜன்
உறுப்பினர், நிதி நிலை குழு

திரு L பெள்ளி
உறுப்பினர், நிதி நிலை குழு

திரு K அரசு
உறுப்பினர், நிதி நிலை குழு
& சங்க உப தலைவர்

டாக்டர் M N G மணி
தலைவர், சங்க மேலாண்மை குழு

# செலவினங்களின் வகைப்பாடு

*2024-2025* நிதியாண்டில், வைப்பு நிதி மற்றும் செலவினங்கள் வகையில் மொத்த தொகை **ரூபாய் *18,24,960*.** இதில் வைப்பு நிதியான **ரூபாய் *15* லட்சத்தை** தவிர்த்த செலவினங்கள் வகையில் மொத்த செலவு **ரூபாய்** *3,24,960*.

இந்த செலவினங்களை நமது சங்கத்தின் நோக்கங்களை முன்னிறுத்தி இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட செலவினங்கள், கல்வி ஊக்கத் தொகை, அவசர கால மருத்துவ உதவி தொகை, விழாக்கள் சம்பந்தப்பட்டவை, நிர்வாக குழு கூட்டங்கள் சம்பந்தப்பட்டவை, சொத்து வகையில் வாங்கப்பட்ட பொருட்கள், இதர செலவினங்கள் என்று வகைப்படுத்திய செலவினங்கள் கீழே வருமாறு:

| **எண்** | **செலவினங்களில் வகைப்பாடு** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| *1* | இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட செலவினங்கள் | ***1,54,459*** |
| *2* | கல்வி ஊக்கத் தொகை | ***5,000*** |
| *3* | அவசர கால மருத்துவ உதவி தொகை | ***35,000*** |
| *4* | விழாக்கள் சம்பந்தப்பட்டவை | ***90,315*** |
| *5* | நிர்வாக குழு கூட்டங்கள் சம்பந்தப்பட்டவை | ***7,000*** |
| *6* | சொத்து வகையில் வாங்கப்பட்ட பொருட்கள் | ***32,686*** |
| *7* | இதர செலவினங்கள் | ***500*** |
| | **மொத்தம்** | ***3,24,960*** |

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## முதல் பூர்வாங்க கூட்டம்

*12-5-2024* பெரியநாயக்கன்பாளையம்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம் ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட முதல் பூர்வாங்க கூட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீ ஆனந்தாஸ் ஹோட்டல் வளாகத்தில் நடந்தது. கூட்டத்தில் கீழ்க்கண்ட முக்கியமலை ஊர் கோவை வாழ் மக்கள் கலந்து கொண்டனர்.

திரு எம் பி பெள்ளன்
திரு கே நஞ்சுண்டன்
திரு கே மணி
திரு பி ஜோகி
திரு கே அரசு
திரு ஜே சந்திரன்
திரு எம் என் ஜி மணி
திரு ஏ பி சந்திரன்
திரு ஆர் சுப்பிரமணி
திரு ஆர் சிவகுமார்
திரு டி சிவக்குமார்
திரு பீ சகாதேவன்
திரு ஜே கணேசன்
திரு எம் ஆர் சிவகுமார்
திரு பி மகேஷ் குமார்
திரு டி பிரவீன்

மேலும் *8* முதல் *10* உறுப்பினர்கள் வேலை நிமித்தமாக வர முடியவில்லை என்றும் ஆரம்பிக்க இருக்கும் சங்கத்தில் தங்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளும் படியும் தொலைபேசி மூலம் தெரிவித்தனர்.

சங்கம் ஆரம்பிக்கும் யோசனையை *28-4-2024* அன்று திரு எம் பி பெள்ளன் அவர்கள் தலைமையில் முக்கிமலை அன்பர்கள் சிலர் பெரியநாயக்கன்பாளையத்தில் ஆலோசித்தனர். அதற்காக எம் பி பெள்ளன் அவர்களுக்கு *12-5-2024* கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் தங்களது நன்றியும் பாராட்டுதலையும் தெரிவித்தனர். அந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விஷயங்கள் *12-5-2024* அன்று நடந்த கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக திரு பி ஜோகி அவர்களும் திரு கே அரசு அவர்களும் உறுப்பினர்களால் முன் மொழியப்பட்டனர். அவர்கள் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டு கூட்டத்தின் செயல்பாடுகளை திறமையாக நிர்வகித்தனர். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கீழே பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

**சங்கத்தின் குறிக்கோள்கள்**
கூட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு உறுப்பினரிடமும் இந்த சங்கம் எந்த வகையில் செயல்பட வேண்டும் என்று அவர்கள் கண்ணோட்டத்தில் கருத்துக்கள் கேட்கப்பட்டது. அந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சங்கத்தின் ஐந்து வகை நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

***1. மருத்துவம்***: கோயம்புத்தூர் வாழ் முக்கிமலை ஊர் மக்கள் எவருக்கேனும் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் பொழுது இந்த சங்கம் அவர்களுக்கு உதவி செய்வதுடன், மருத்துவ ஆலோசனை வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது சங்கத்தின் ஒரு நோக்கமாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

***2. மரணம்***: சங்கத்தின் உறுப்பினர்கள் குடும்பத்தில் ஏதேனும் மரணம் நடக்கும் பொழுது அந்த குடும்பங்களுக்கு உதவி செய்து அந்த ஈமச்சடங்குகள் செய்வதற்கு சங்க உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது இரண்டாவது நோக்கமாக பரிந்துரைக்கப்பட்டது.

***3. கல்வி ஆலோசனை மற்றும் உதவிகள்:*** சங்கத்தின் உறுப்பினர்களின் குழந்தைகள் படிப்பதற்கு உதவி மற்றும் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி எங்கெல்லாம் உதவி கிடைக்க பெறும் வாய்ப்பு இருக்கின்றதோ அந்த ஆலோசனைகளையும் வழங்கி அவர்கள் கல்வி மேம்படுவதற்காக சங்கம் செயல்பட வேண்டும் என்பது மூன்றாவது குறிக்கோளாக பரிந்துரைக்கப்பட்டது.

***4. தொழில் ஆலோசனை:*** நான்காவது குறிக்கோள் என்பது தொழில் சம்பந்தப்பட்டது. நமது முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்களுக்கு தொழில் ரீதியாக ஏதேனும் உதவி தேவைப்பட்டால், தகுந்த ஆலோசனை வழங்கி உரிய தொழில் கிடைக்குமாறு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்பது அடுத்த குறிக்கோளாக வைக்கப்பட்டது.

***5. நமக்கு நாம்:*** ஐந்தாவது குறிக்கோள் என்பது நமது உறுப்பினர்கள் வண்டி வாடகைக்கு வாகனங்கள் வைத்திருக்கும் பொழுது அவற்றையே நாம் உபயோகப்படுத்தி அவர்கள் வாழ்வாதாரத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுபோன்ற மற்ற துறைகளிலும் நமக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சங்கத்தை பதிவு செய்தல்:**

சங்கத்தின் முதல் பணியாக "முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம் " என்ற பெயரில் சங்கத்தை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. சங்கத்திற்கான Bye Law மற்றும் வேண்டிய ஆவணங்களை தயார் செய்வதற்காக கீழ்க்கண்ட தற்காலிக நிர்வாக கமிட்டி தேர்வு செய்யப்பட்டது.

தலைவர்: திரு ஜே சந்திரன்
உப தலைவர்கள்: திரு எம் பி பாலச்சந்திரன், திரு கே அரசு
செயலாளர்: திரு ஆர் சுப்பிரமணி
இணை செயலாளர்: திரு டி சிவக்குமார்
பொருளாளர்: திரு பீ சகாதேவன்
இணைப்பொருளாளர்: திரு ஜே கணேசன்

சங்கத்தின் பிரதான குறிக்கோள்களை அடிப்படையாக வைத்து Bye Law தயாரித்து அதனை சங்க உறுப்பினர்களிடம் பகிர்ந்து அனைவரின் ஒப்புதலுக்கு பிறகு சங்கத்தை பதிவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு எவ்வளவு விரைவில் முடியுமோ அந்த அளவிற்கு துரிதப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**சங்கத்திற்கான வங்கி கணக்கு:**

சங்கத்தை பதிவு செய்த ஒரு சில நாட்களிலேயே சங்கத்திற்கான வங்கி கணக்கு துவங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எல்லாவிதமான பணப் பரிமாற்றங்களும் வங்கி கணக்கின் மூலமாகத்தான் நடக்க வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. வங்கி கணக்கு 3 பெயர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட வேண்டும். எல்லா காசோலைகளையும் பொருளாளர் மற்றும் செயலர் அல்லது தலைவர் என்ற அமைப்பில் இருவர் கையெழுத்திட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எந்த வங்கியில் சங்கத்திற்கான கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை நிர்வாக கமிட்டி வரும் நாட்களில் முடிவு செய்யும்.

**சங்கத்திற்கான நிதி: **

சங்கத்திற்கான நிதி நான்கு வகையில் திரட்டப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**உறுப்பினர் பதிவு கட்டணம்:** ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்தில் சேரும்பொழுது ரூபாய் 500 பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**மாத சந்தா:** ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் தலா 100 ரூபாய் சந்தாவாக சங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்று ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த மாத சந்தாவை வருட சந்தாவாகவோ அல்லது அரை வருட சந்தாவாக கூட செலுத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. பதிவு மற்றும் மாத சந்தாவில் வசூலிக்கப்படும் நிதியானது போக்குவரத்து, ஒவ்வொரு மாதமும் நடக்கக்கூடிய நிர்வாக குழு கூட்ட செலவுகள், வருடாந்திர சங்க கூட்ட செலவுகள் இவற்றிற்கு பிரதானமாக செலவிடப்பட வேண்டும்.

**உதவித்தொகை நிதி:** சங்கத்தின் உறுப்பினர்கள் தாங்கள் செலுத்தும் சந்தாவை தவிர எவ்வளவு முடியுமோ அந்த தொகையை சங்கத்தின் உதவித்தொகை நிதியில் செலுத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த உதவி தொகை நிதியில் கணிசமான நிதி திரட்டி இந்த நிதியை வைத்து மருத்துவ மற்றும் மரண நிகழ்வுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. நிர்வாக குழு பரிந்துரைப்படி இந்த நிதியை கல்வி செலவுகளுக்காகவும் அவ்வப்பொழுது பரிந்துரைக்கலாம் என்ற ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

**விழா நிதி:** மேற்கண்ட நிதி வகைகளை தாண்டி அவ்வப்பொழுது கோவை வாழ் முக்கிமலை மக்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கோயில்களுக்கோ அல்லது விழாவாக கொண்டாடுவதற்கோ ஏற்படும் செலவினங்களை நன்கொடை மூலம் பெற்று செலவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

****நிர்வாக குழு விவாதிக்க வேண்டிய விதிமுறைகள்***
இந்த சங்கம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், தொடர்ந்து நடக்கும் கூட்டங்கள் தேவையான அடித்தளம் ஏற்படுத்தும் என்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர். 12-5-2024 கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பரிந்துரையின் படி கீழ்கண்ட பரிமாணங்களில் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்துரையாடி அவர்களது பரிந்துரைகளை சங்கத்தில் பகிர்ந்து இறுதி தீர்மானம் எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

1. ஒருவர் நோய்வாய்ப்பட்டு இருக்கும் பொழுது எந்த அளவிற்கு உதவி தேவை கொடுக்க வேண்டும்?
2. மருத்துவமனையில் அனுமதி என்ற பொழுது எவ்வளவு நிதி கொடுக்க வேண்டும்?
3. குடும்பத்தில் மரணம் ஏற்படும் பொழுது கொடுக்கப்படும் நிதி எவ்வளவு?
4. கோயம்புத்தூரில் வசிக்கும் பொழுது அங்கத்தினர் ஆகி ஒரு அங்கத்தினர் வேறு இடத்திற்கு மாற்றலாகி சென்று செல்லும் பொழுது அவர் கோவை சங்கத்தில் அங்கத்தினராக தொடரலாம். அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கு எந்த விதமான உதவி செய்ய வேண்டும் மற்றும் உதவித்தொகை எவ்விதமாக அளிக்கப்பட வேண்டும்?

5. ஒரு குடும்பத்தில் அகால நிகழ்வுகள் நடக்கும் பொழுது அதை சங்கத்தினர் கோயம்புத்தூரில் அல்லது முக்கிமலையில் நடத்தும் பொழுது எந்தவிதமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்?

மேற்கண்ட கருத்துக்கள் இன்னும் விவரமாக விவாதிக்கப்பட்டு தக்க முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்ற படியால் வரும் கூட்டங்களில் இதைப்பற்றி நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் கொடுக்கும் பரிந்துரையின் பேரில் சங்க உறுப்பினர்கள் இறுதி முடிவு எடுப்பார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

***செய்தி பகிர்வு செயலி: ***

நிர்வாக உறுப்பினர்களுக்கான செய்தி பகிர்வு வாட்ஸ் அப் குரூப் தயார் செய்ய வேண்டும் என்றும் எல்லா உறுப்பினர்களையும் உள்ளடக்கிய இன்னொரு வாட்ஸ் அப் குரூப் தயார் செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. சங்கத்திற்கு சம்பந்தப்பட்ட மற்றும் நமது கோவை வாழ் மக்களின் குடும்பங்களில் நடக்கும் நிகழ்வுகள், பொதுவான தகவல்கள் இவை மட்டும் இந்த வாட்ஸ் அப் குரூப்பில் பகிரப்படும்.

***சங்கத்தின் பிரகடனம்: ***

முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல நற்பணி மன்றம் நமது முக்கிய மலை ஊரின் ஒற்றுமைக்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் என்றைக்கும் உறுதுணையாக இருக்கும் என்ற ஒருமித்த பிரகடனத்தை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எந்த காலகட்டத்திலும் எங்கிருந்தாலும் முக்கிமலை ஊரின் பெருமைக்கும் மாண்புக்கும் இந்த சங்கம் பாடுபடும் என்று உறுப்பினர்கள் பிரகடனம் செய்தனர்.

12-5-2024

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## இரண்டாவது பூர்வாங்க கூட்டம்

*2-6-2024 பெரியநாயக்கன்பாளையம்*

## தீர்மானங்கள்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் இரண்டாவது பூர்வாங்க கூட்டம் ஜூன் 2, 2024 அன்று நடந்தது. 12-5-2024 அன்று நடந்த கூட்டத்தில் நிர்வாக கமிட்டிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு எம் பி சந்திரன் தன்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டதன் படி அவர் விடுவிக்கப்பட்டு சங்கத்திற்காக சங்க அலுவலக வளாகத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்கண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெரியநாயக்கன்பாளையத்தில் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் ஜூன் 2, 2024 நடந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:**

திரு ஜே சந்திரன் - தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு ஜே கணேசன் – இணைப்பொருளாளர்
திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு பி மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு எம் ஆர் சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர்

**சிறப்பு அழைப்பாளர்கள்:**

கீழ்க்கண்ட முக்கிமலை ஊர் கோவை வாழ் மூத்தவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கூட்டத்தில் கலந்து கொண்டனர்

திரு எம் பி பெள்ளன்
திரு கே நஞ்சுண்டன்
திரு கே மணி
திரு பி ஜோகி
திரு எம் என் ஜி மணி
திரு என் சுகுமாரன்

கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் தலைமை வகித்தார். வரவேற்புரையை தொடர்ந்து உப தலைவர் திரு கே அரசு இந்த சங்கத்திற்காக ஆரம்பம் முதல் தங்களது ஆலோசனைகளை வழங்கி வந்த மூத்தவர்களுக்கு சங்கத்தின் சார்பாக

நன்றியை தெரிவித்துக் கொண்டு அவர்களை சங்கத்திற்கு புரவலர்களாக நியமிக்கலாம் என்ற ஆலோசனையை அனைவரும் ஏக மனதாக வரவேற்றனர்.

அதன்படி திருவாளர்கள் எம் பி பெள்ளன், ஜெ நஞ்சுண்டன், கே மணி, பி ஜோகி, எம் என் ஜி மணி மற்றும் என் சுகுமாரன் ஆகியோர் புரவலர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த அழைப்பை மேற்கண்ட ஆறு பேரும் ஏற்று சங்கத்திற்கு தங்களது ஆலோசனையை தேவைப்படும் பொழுது வழங்குவதாக தெரிவித்தனர்.

27-5-2024 அன்று இறைவனடி சேர்ந்த கோத்திபென் திரு அரசய்யா (நமது புரவலர் என் சுகுமாரனின் மாமனார்) அவர்கள் மறைவிற்கும், 28-5-2024 அன்று மந்தணை கிராமத்தில் வாழ்ந்த முக்கிமலை ஊர் மகள் திருமதி மல்லக்கா அவர்கள் மறைவிற்கும் சங்கத்தின் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. திரு சுகுமாரன் அவர்கள் சங்க உறுப்பினர்கள் நேரடியாக கோத்திபென் வந்து தனது மாமனார் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டமைக்கு சங்கத்திற்கு நன்றியை தெரிவித்தார்.

மே மாதம் 12ஆம் தேதி நடந்த பூர்வாங்க நிர்வாக குழு கூட்டத்தின் பரிந்துரைகள் படிக்கப்பட்டு ஒவ்வொரு தீர்மானத்தின் மீதும் விவாதம் நடைபெற்றது. அவற்றின் சாராம்சம் மற்றும் தீர்மானங்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

1. மே மாதம் 12ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தின் பரிந்துரைகளின் படி நமது சங்கத்தின் விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவை ஆடிட்டர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு நிர்வாக உறுப்பினர்களின் கையெழுத்திற்காக 2-6-2024 ஆம் தேதி நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சங்க உறுப்பினர்களின் கையெழுத்து பெற்று ஆவணங்கள் மீண்டும் ஆடிட்டர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும். சங்கத்தினை ஜூன் 10 முதல் 21 வரையிலோ அல்லது ஜூலை 5 முதல் 21 வரையிலோ பதிவு செய்ய பரிந்துரைக்கப்பட்டது. பதிவாளர் அலுவலகம் நமக்கு அளிக்கும் தேதியை பொறுத்து குறுகிய காலத்தில் உறுப்பினர்களை பதிவு அலுவலகத்திற்கு வரும்படியான அழைப்பு வரும்பொழுது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் அந்த நாளில் நேரடியாக வந்து சங்க பதிவு வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. சங்கம் துவக்கப்பட்டவுடன் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள ஐ சி ஐ சி ஐ (ICICI) வங்கியில் சங்கத்தின் வங்கிக் கணக்கு துவங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

3. உறுப்பினர்கள் சங்கத்திற்காக உருவாக்கப்பட்ட **Logo** மற்றும் **Letter Head** இவற்றை அங்கீகரித்தனர். சங்கத்தின் மையக்கருத்தாக **"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க"** என்ற வாசகம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

4. சங்கத்தின் பணிகள் நேர்த்தியாகவும் செம்மையாகவும் செயல்படுவதற்காக கீழ்க்கண்ட ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் தேவையான எண்ணிக்கையில் புரவலர்களும் நிர்வாகக் குழு அங்கத்தினர்களும் சேர்ந்து அந்தக் குழுவின் நிகழ்வுகளை நிர்வாக கமிட்டிக்கு பரிந்துரைப்பார்கள். எல்லா குழுக்களிலும் சங்கத்தின் தலைவர் ஜே சந்திரன் மற்றும் செயலாளர் ஆர் சுப்பிரமணி இருவரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இவர்களை தவிர மற்ற உறுப்பினர்கள் வருமாறு:

**சங்க மேலாண்மை குழு**: எம் என் ஜி மணி, கே அரசு, பீ சகாதேவன்
**உறுப்பினர் தொடர்பு குழு**: எம் பி பெள்ளன், கே ராமச்சந்திரன், பீ சகாதேவன், ஆர் சிவகுமார்
**சமுதாய தொடர்பு குழு**: கே மணி, பி ஜோகி, கே ராமச்சந்திரன், ஜே கணேசன், எம் ஆர் சிவகுமார்
**கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குழு**: என் சுகுமாரன், எம் என் ஜி மணி, ஜே கணேசன் , ஜேபி சகாதேவன்
**நிவாரண நிதி பரிந்துரை குழு**: கே நஞ்சுண்டன், என் சுகுமாரன், கே அரசு, பீ சகாதேவன்
**தொழில்நுட்பக் குழு**: எம் என் ஜி மணி, ஜே கணேசன், ஆர் சிவகுமார்
**நிதிநிலை தணிக்கை குழு**: என் சுகுமாரன், கே அரசு, பீ சகாதேவன்,

5. இந்தக் குழுவில் இருக்கும் அங்கத்தினர்கள் அல்லாமல் பொதுக்குழுவில் இருந்தும் தேவைப்பட்ட அங்கத்தினர்களை இந்த குழுக்கள் ஆலோசகர்களாக சேர்த்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

6. மே மாதம் 12ஆம் தேதி நடந்த பூர்வாங்க கூட்டத்தில் கீழ்கண்ட கருத்துக்கள் வரும் கூட்டங்களில் ஆராயப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

- ஒருவர் நோய்வோய்ப்பட்டு இருக்கும்போழுது எந்த அளவிற்கு உதவித்தொகை கொடுக்க வேண்டும்
- மருத்துவமனையில் அனுமதி என்ற பொழுது எவ்வளவு நிதி கொடுக்க வேண்டும்
- குடும்பத்தில் மரணம் ஏற்படும் பொழுது கொடுக்கப்படும் நிதி எவ்வளவு
- கோயமுத்தூரில் வசிக்கும் பொழுது அங்கத்தினர் ஆகி வேறு இடத்திற்கு மாற்றலாகி செல்லும் பொழுது எந்தவிதமான உதவி அளிக்க வேண்டும்
- குடும்பத்தின் அகால நிகழ்வுகள் நடக்கும் பொழுது அதை கோயம்புத்தூரில் அல்லது முக்கிமலையில் நடத்தும் பொழுது எந்தவிதமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்

மேற்கண்ட பட்டியலை நிர்வாக குழு உறுப்பினர்களும் புரவலர்களும் விவரமாக ஆராய்ந்து கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

7. சங்க உறுப்பினர்களின் தாய், தந்தை, கணவன் / மனைவி, குழந்தைகள் இவர்கள் எவரேனும் தீவிர சிகிச்சைக்காக ஐ சி யு (ICU) வில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெரும் பட்சத்தில் ஒருமுறை தொகையாக (One-time benefit) ரூபாய் 5 ஆயிரம் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் மருத்துவ உதவி அளிக்கும் நிறுவனங்களை தொடர்பு கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். இது தவிர மருத்துவர் குழுமம் நமது விழா மற்றும் பொதுக்குழு நிகழ்ச்சிகளில் பங்கேற்று இலவச ஆலோசனை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

8. சங்க உறுப்பினர்களின் தாய், தந்தை, கணவன் / மனைவி, குழந்தைகள் இவர்கள் எவரேனும் மரணம் எய்தும் பட்சத்தில் அவரது குடும்பத்திற்கு ரூபாய் 10,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது தவிர ஈமச்சடங்குகளில் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

9. கோயம்புத்தூரில் குறைந்தது மூன்று வருடம் வாழ்ந்து நம் சங்கம் ஆரம்பிக்க பட்ட பொழுது உறுப்பினராகி பின்பு மாற்றலாகி வெளியூர் செல்லும் பொழுது அவர்கள் தங்களது உறுப்பினர் சந்தாவை தொடர்ந்து செலுத்தி வரலாம். அந்த அங்கத்தினர்களுக்கும் மரண நிவாரண உதவி ரூபாய் 10,000 வழங்கப்படும். ஆனால் அவர்கள் வசிக்கும் இடத்தின் தூரம் கருதி சங்க உறுப்பினர்கள் ஈம சடங்குகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் இல்லாமல் போகலாம் என்பதையும் நிர்வாக குழு பதிவு செய்கிறது.

10. சங்க உறுப்பினர்களின் குடும்பங்களில் ஏற்படும் மரண ஈமச்சடங்குகள் கோவையில் நடைபெறும் பொழுது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு வேண்டிய மின் மயான விவரங்கள், ஆம்புலன்ஸ் வசதிகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வதற்கு சங்க உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. சங்க உறுப்பினர் ஈம சடங்குகள் முக்கிமலையில் செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கும் பொழுது **சம்பந்தப்பட்ட சங்க உறுப்பினர் பரிந்துரையின் பேரில்** சங்கத்தின் பிரதிநிதிகள் அந்த ஈமச்சடங்குகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

12. மந்தணை கிராமத்திற்கு திருமதி மல்லக்கா அவர்கள் ஈமச்சடங்கிற்கு நமது சங்க உறுப்பினர்கள் சென்றது போலவே முக்கிமலையில் பிறந்து திருமணம் ஆகி வேறு

ஊரில் வாழும் எந்த சகோதரி மறைந்தாலும் நமது சங்கத்தின் மூலமாக நேரடியாக அந்த ஊர்களுக்கு சென்று ஈமச்சடங்கில் பங்கேற்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

13. **சங்க உறுப்பினர் சேர்க்கை:** நமது சங்கம் பதிவு செய்யப்பட்ட பின் ப்திவு எண்ணுடன் கூடிய உறுப்பினர் சேர்க்கை தயார் செய்யப்படும். சங்கத்தின் உறுப்பினர் தொடர்புக்குழு முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்களை நேரில் தொடர்பு கொண்டு சங்க உறுப்பினர் சேர்க்கை படிவத்தில் **அவர்கள் விருப்பத்தின் பேரில்** கையொப்பம் வாங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எந்த காலகட்டத்திலும் எந்த உறுப்பினரையும் **சங்கத்தில் சேர்வதற்காக நிர்பந்தம் செய்யக்கூடாது** என்று திட்டவட்டமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

14. உறுப்பினர் நமது சங்கத்தில் சேரும்பொழுது சேர்ப்பு தொகையாக ரூபாய் 500, பின்பு மாத சந்தாவாக ரூபாய் 100 செலுத்த வேண்டும். ஒவ்வொருவரும் செலுத்தும் தொகைக்கு உடனடியாக சங்க பதிவு எண் இடப்பட்ட ரசீது கொடுக்கப்பட வேண்டும்.

15. சந்தா வசூலிக்கப்பட்ட நாள் முதல் இரண்டு நாட்களுக்குள் பணத்தை வங்கியில் செலுத்திவிட வேண்டும். உறுப்பினர்கள் **ஜிபே** (G-Pay) மற்றும் வங்கி பரிவர்த்தனை மூலமாக சந்தா மற்றும் சேர்ப்பு தொகையை கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

16. சங்கம் ஏற்றிருக்கின்ற மனிதாபிமான காரியங்களுக்கு நிதி தேவைப்படும் என்பதை சங்க உறுப்பினர்கள் வலியுறுத்தியதை தொடர்ந்து நமது சங்க உறுப்பினர்கள் அவர்களாக முன்வந்து நன்கொடைகள் கொடுக்கலாம் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

17. 2024 வது ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் சங்கத்தின் நிவாரண நிதிக்கு கணிசமான தொகை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இந்த தேதியை உறுப்பினர் தொடர்பு குழு முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்களை சந்திக்கும் பொழுது தெரியப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

18. இந்த நிவாரண நிதிக்கு முக்கிமலை ஊர் திரு எம் நஞ்சா கவுடர் குடும்பத்தினர் சார்பாக முதல் கட்டமாக ரூபாய் 5 லட்சம் நன்கொடை அளிப்பதாக தெரிவித்தனர். இதற்கு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அவர்களுக்கு நன்றி அறிதலை தெரிவித்துக் கொண்டனர்.

19. உறுப்பினர்கள் மனமுவந்து கொடுக்கும் இந்த நன்கொடையை வங்கிகளில் மட்டுமே செலுத்த வேண்டும் என்றும் பணமாக கொடுக்கக் கூடாது என்றும்

திட்டவட்டமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எந்த நன்கொடையானாலும் பான் கார்டு (PAN Card) விவரங்கள் பெறப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

20. கோயமுத்தூரில் வசிக்கும் பெரும்பாலான முக்கிமலை ஊர் மக்களின் வாழ்க்கைக்கு அடித்தளம் போட்ட முக்கிமலை ஆரம்பப்பள்ளி மற்றும் எடக்காடு மேல்நிலைப் பள்ளி இவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இனிவரும் ஆண்டுகளில் எடக்காடு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுக்கும் குழந்தைக்கு நமது சங்க சார்பில் ரூபாய் 5,000 பரிசளிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த பரிசினை சங்கம் பதிவு செய்யப்பட்டவுடன் இந்த வருடமே நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

21. வருடத்திற்கு ஒருமுறை சங்க உறுப்பினர்கள் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து விழா நடத்தவோ அல்லது ஒரு நாள் சுற்றுலா செல்லவோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கான செலவினங்களை நன்கொடை மூலம் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

22. **"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க"** என்ற மையக்கருத்தை சித்தாந்தமாக கொண்ட இந்த நல சங்கத்தின் மூலமாக நமது முக்கிமலை ஊரில் நடக்கும் எல்லா வளர்ச்சி பணிகளுக்கும் வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. குறிப்பாக கோயில் புனரமைப்பு வேலைகள், கோவில் வளாகத்தில் சோலார் விளக்குகள் நிறுவுதல், பூஜை புனஸ்காரங்கள் இது போன்ற கோயில் சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளுக்கும் பூஜைகளுக்கும் சங்க உறுப்பினர்களால் முடிந்த வரை உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

23. சங்கம் பதிவு செய்யப்பட்ட நாள் முதல் ஒரு மாத காலத்திற்குள் சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடத்த வேண்டும் என்றும் அதற்கு கோவையில் வாழும் முக்கிமலை ஊர் மக்கள் அனைவரையும் மற்றும் நமது முக்கிமலை ஊரில் வாழும் அனைத்து சகோதர சகோதரிகளையும் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்களுடன் கூட்டம் நிறைவிற்கு வந்தது. அடுத்த கூட்டம் ஜூன் 16, 2024 அன்று நடைபெறும். கூட்டம் நடைபெறும் இடம் பின்பு அறிவிக்கப்படும்.

2-6-2024

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

**மூன்றாவது பூர்வாங்க கூட்டம்**

*23-6-2024* பெரியநாயக்கன்பாளையம்

## தீர்மானங்கள்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் மூன்றாவது பூர்வாங்க கூட்டம் ஜூன் 23, 2024 அன்று பெரியநாயக்கன்பாளையத்தில் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது.

கீழ்க்கண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், புரவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

திரு ஜே சந்திரன் - தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு ஜே கணேசன் – இணைப்பொருளாளர்
திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு பி மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு எம் பி பெள்ளன் - புரவலர்
திரு கே நஞ்சுண்டன் - புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு பி ஜோகி - புரவலர்
திரு எம் என் ஜி மணி - புரவலர்
திரு என் சுகுமாரன்- புரவலர்



திரு எம் ஆர் சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர் தவிர்க்க முடியாத பணி நிமித்தம் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை.

கூட்டத்திற்கு வந்த உறுப்பினர்களையும்

அங்கத்தினர்களின் குடும்பத்தவரையும் சங்கத்தின் செயலாளர் திரு ஆர் சுப்பிரமணி வரவேற்றார். குறுகிய காலத்தில் அங்கத்தினர்களையும் அவர்கள் குடும்பத்தினர்களையும் அழைத்து இந்த கூட்டம் நடத்தலாம் என்ற திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நண்பர்களுக்கும் சங்கத்தின் சார்பில் ந்ன்றியறிதலை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் தலைமை வகிப்பார் என்றும் உப தலைவர் திரு கே அரசு இணைத்தலைவராக இருந்து கூட்டத்தை நடத்துவார்கள் என்றும் தெரிவித்தார்.



தொடர்ந்து பேசிய சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் சங்க நடவடிக்கைகள் கடந்த ஒரு மாத காலமாக சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் சங்க பதிவு விவரங்களை விரைவில் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா சங்க பதிவு வந்ததற்கு பின் ஏற்பாடு செய்யலாம் என்றும் ஆலோசனை தெரிவித்தார்.

சங்கத்தின் உப தலைவர் திரு அரசு அவர்கள் சங்க பதிவு விவரங்கள் எதிர்பார்த்து இருக்கின்ற இந்த தருணத்தில் அங்கத்தினர்களின் குழந்தைகள் சிறப்பான முறையில் கல்வி கற்கும் பொழுது ஊக்கத்தொகை கொடுக்கும் தீர்மானத்தை சங்க உறுப்பினர்கள்

பரிசீலிக்கலாம் என்று ஆலோசனை தெரிவித்தார்.



ஜூன் 23 அன்று நடந்த சங்க கூட்டத்திற்கும் மற்றும் குடும்பத்தினர் கலந்துரையாடலுக்கும் மொத்தம் 52 பேர் வந்திருந்தனர். அங்கத்தினர்களின் இந்த மேலான ஆதரவையும் ஊக்கத்தையும் கூட்டத்திற்கு வந்த அனைவரும் பாராட்டினர்.



இதுபோன்று வரும் காலங்களில் குடும்ப அங்கத்தினர் கலந்துரையாடலில் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் நிர்வாக குழு சார்பில் வைக்கப்பட்டது.

இந்த கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. ஏற்கனவே தீர்மானம் செய்தது போல சங்க நிர்வாகிகளின் பதவி ஏற்பு விழா சங்க பதிவு எண் கிடைத்ததற்கு பின்பு தான் நடைபெறும் என்பதை நிர்வாகக் குழுவினரும் அங்கத்தினர்களும் ஊர்ஜிதம் செய்தனர். ஜூலை மாதம் 15 ஆம் தேதிக்குள் சங்க பதிவு நிறைவேறும் பட்சத்தில் அந்த காலகட்டத்தில் பதவி ஏற்பு விழா ஏற்பாடு செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

2. சங்க பதிவு தாமதமாகும் தருணத்தில் ஜூலை மாதத்தில் அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு நாள் பயணமாக அருகில் உள்ள ஏதாவது கோயிலுக்கு சென்று தரிசனம் செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது பற்றிய விரிவான திட்டங்கள் இன்னும் இரண்டு வாரங்களில் அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது

3. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட தீர்மானத்தின்படி பதவி ஏற்பு விழாவிற்கு முக்கிமலை ஊரில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் அழைக்க வேண்டும் என்றும் அவர்கள் கலந்து கொள்வதற்காக வாகன வசதி ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது

4. நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த கலை நிகழ்ச்சிகளை நமது சங்கத்தின் தாய்மார்கள் முன்னின்று நடத்துவார்கள் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

5. இந்த சங்கத்தின் கூட்டத்திற்கு அழைப்பாளர்களாக பெருவாரியில் வந்த தாய்மார்களுக்கு நன்றியை தெரிவிப்பதுடன் அவர்கள் விருப்பத்தின் பேரில் பெண் அங்கத்தினர்களுக்கான ஒரு வாட்ஸ்அப் குரூப் வரும் காலங்களில் தயார் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

6. சென்ற கூட்டத்தில் முக்கிய மலை ஊர் பெண்கள் மறைவு ஏற்படும் பொழுது சங்க அங்கத்தினர்கள் அந்த ஊருக்கு சென்று ஈம சடங்குகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் முக்கிமலை ஊரின் மருமகன்கள் மறையும் பொழுது சங்க உறுப்பினர்கள் சார்பில் ஈம சடங்குகளுக்கு செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

7. "முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் நமது ஊரின் இறையாண்மைக்கும் பெருமைக்கும் உறுதுணையாக என்றைக்கும் இந்த சங்கம் மற்றும் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை உறுதிமொழி எடுக்கப்பட்டது.

8. வெளியூரில் வாழ்பவர்கள் கோவை சங்கத்தின் சித்தாந்தங்களை பாராட்டி இதில் தங்களையும் அங்கத்தினர்களாக சேர்த்து கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததை அங்கத்தினர்கள் ஆலோசித்தனர். நீண்ட ஆலோசனைக்கு பிறகு தற்போதைய நிலையில் இந்த சங்கம் கோவை வாழ் முக்கிமலை மக்களுக்காக தொடர வேண்டும் என்றும் வெளி இடங்களில் இருந்து சங்கத்தில் அங்கத்தினராக விரும்புவர்களுக்கு எந்த விதமான ஏற்பாடுகள் செய்யலாம் என்பதை பற்றி வரும் கூட்டங்களிலே விவரமாக ஆராயலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது

9. சங்கத்தின் கல்வி மற்றும் நிவாரண உதவித்தொகை குழுவின் பரிந்துரையில் பேரில் இந்த வருடம் மேல்நிலைப்பள்ளி தேர்வு எழுதி 600 க்கு 566 மதிப்பெண்கள் பெற்றிருக்கும் நமது சங்கத்தின் செயலாளர் திரு பி சுப்பிரமணி தம்பதியரின் மகள் செல்வி எஸ் ரினிதா அவர்களை சங்கத்தினர் அனைவரும் பாராட்டி அவருக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 5000 சங்கத்தின் சார்பில் அளிக்க வேண்டும் என்றும் இந்த ஊக்கத்தொகை சங்க நிர்வாகிகள் பதவியேற்கும் அந்த நாளில் கொடுக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது சங்கத்தின் சார்பில் ரினிதாவுக்கும் பெற்றோர்களுக்கும் வாழ்த்து சொல்லப்பட்டது.



நிர்வாக குழுவுடன் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்ட சங்கத்தின் இணைப்பொருளாளர் திரு கணேசன் அவர்களின் துணைவியார் திருமதி ஜெனிதா அவர்களின் பிறந்தநாள் ஜூன் 23 என்பதை தெரிந்து கூட்டத்திற்கு வந்த பெண் உறுப்பினர்கள் அவர்களது பிறந்த நாளை கொண்டாடுவதற்காக உடனடியாக ஏற்பாடு செய்ததை கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் பாராட்டினர். ஜெனிதாவிற்கு அனைவரின் சார்பிலும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தப்பட்டது.



இந்த நிர்வாக குழு மற்றும் அங்கத்தினர் கலந்துரையாடல் நிகழ்வானது உப தலைவர் திரு கே அரசு அவர்களின் நன்றி உரையுடன் இனிதாக முடிந்தது. அடுத்த கூட்டத்தின் தேதி பற்றி வரும் நாட்களில் தெரிவிக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது

24-6-2024

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## நிர்வாக குழு கூட்டம்

**14-7-2024** பெரியநாயக்கன்பாளையம்

## தீர்மானங்கள்

*முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் கூட்டம் 14-7-2024 அன்று பெரியநாயக்கன்பாளையம் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது.*

*கீழ்க்கண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், புரவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.*

திரு ஜே சந்திரன் - தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு கே நஞ்சுண்டன் - புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு பி ஜோகி - புரவலர்
திரு எம் என் ஜி மணி - புரவலர்

நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு கே ராமச்சந்திரன், திரு பி மோகன்ராஜ், திரு எம் ஆர் சிவகுமார் ஆகியோர் தவிர்க்க முடியாத பணி நிமித்தம் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை.

திரு என் சுகுமாரன் - புரவலர் பணி நிமித்தம் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை.

திரு எம் பி பெள்ளன் - புரவலர், சங்கத்தின் தலைவரிடமும் உப தலைவரிடமும் தனது பெயரை சங்க நிகழ்வுகளில் பயன்படுத்த வேண்டாம் என்று சொன்னதின் விளைவாக அவரது பெயர் புரவலர் பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டது. சங்கம் துவங்க ஆரம்ப காலத்தில் அவர் ஆற்றிய அரிய பணியை கருத்தில் கொண்டு அவர் எப்பொழுது வேண்டுமானாலும் சங்கத்தின் புரவலராக மீண்டும் தன்னை இணைத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் பி ஆனந்தகுமார், ஜெயவேல் நஞ்சுண்டன், திரு எம் சிவகுமார் மற்றும் ஜே பி சிவகுமார் ஆகியோர் பார்வையாளராக கலந்து கொண்டனர்

சங்கத்தின் செயலாளர் திரு ஆர் சுப்பிரமணி அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்று சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் அவர்களை கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு அழைப்பு விடுத்தார்.

திரு சந்திரன் அவர்கள் இறைவன் அருளால் நமது சங்கத்திற்கு 12/7/2024 அன்று தமிழ்நாடு அரசாங்கத்தால் தமிழ்நாடு சொசைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1975 படி அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது என்பதை தெரிவித்தார். நிர்வாக கமிட்டி உறுப்பினர்களும் புறவலர்களும் நன்றியுடன் சங்கம் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டதை பாராட்டி இது சங்க வளர்ச்சிக்கு மிகவும் உதவும் என்று எடுத்துரைத்தனர்.

**FORM NO.II**

(See Rule 8 of the Tamil Nadu Societies Registration Rules, 1978)

CERTIFICATE OF REGISTRATION UNDER SECTION 10 OF THE TAMIL NADU SOCIETIES REGISTRATION ACT,1975 (TAMIL NADU ACT 27 OF 1975)

CERTIFICATE OF REGISTRATION OF SOCIETIES

Sl. No. SRG/Coimbatore North/139/2024

I hereby certify that **MUKKIMALAI OOR COIMBATORE VAAZH MAKKAL NALA MANDRAM** has this day been registered under the Tamil Nadu Societies Registration Act,1975 (Tamil Nadu Act 27 of 1975).

Given under my hand at Coimbatore North this 12th day of July, 2024

Date :12-Jul-2024
Station : Coimbatore North

Digitally Signed by Thiru/ Tmt/ Selvi
Prabhavathi M
Signature of the Registrar

சங்கத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் பதிவிற்காக அரசாங்கத்திற்கு அளித்த அத்துணை ஆவணங்களின் நகல்களும் சங்க அலுவலக உபயோகத்திற்காக தலைவரிடமும் செயலாளரிடமும் அளிக்கப்பட்டது.



நமது சங்க நிர்வாக எண் SRG / Coimbatore North / 139 / 2024 கிடைத்ததற்கு பின்பாக நடக்கும் முதல் நிர்வாக குழு என்பது 12/7/2024 அன்று நடைபெற்ற கூட்டம். இந்த கூட்டத்தில், 23/6/2024 நடந்த நிர்வாகம் குழுவின் பூர்வாங்க கூட்டத்திலிருந்து இந்த கூட்டம் வரை சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிகழ்வுகள், வரும் காலங்களில் சங்க நிர்வாக வழிமுறைகள், அரசாங்கத்திற்கு ஒவ்வொரு வருடமும் அளிக்க வேண்டிய தரவுகள், சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா, நிர்வாக மற்றும் நிதி மேலாண்மை வழிகாட்டுதல்கள், உறுப்பினர் சேர்க்கை ஆகியவை விவாதிக்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்ட இந்த விவாதங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. நமது ஊரில் வாழ்ந்து 28 ஜூன் 2024 அன்று இயற்கை எய்திய மேல்கேரி

   திரு லிங்கா கவுடர் மகன் திரு எல். சந்திரன் அவர்களின் மறைவிற்காக நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். சங்கத்தின் சார்பில் 13 பேர் ஜூலை ஒன்றாம் தேதி முக்கிமலைக்கு சென்று அன்னாரின் குடும்பத்திற்கும் மற்றும் சகோதரர்கள் தருமன், ரஜாக் அவர்களுக்கும்

சகோதரிகளுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்ததை சங்கம் பதிவு செய்கின்றது.

2. கடந்த இரண்டு வாரங்களில் கோயமுத்தூரில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் மற்றும் சிகிச்சை பெற்று ஓய்வெடுக்கும் முக்கிமலை சொந்தங்களையும் நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் நேரடியாக சென்று நலம் விசாரித்தனர் என்பதையும் சங்கம் பதிவு செய்கின்றது.

3. சங்கம் பதிவு செய்த பின்பு நடக்கும் முதல் கூட்டம் என்றபடியால் சங்க பூர்வாங்க கூட்டங்கள் 1 (12-5-2024), 2 (2-6-2024) மற்றும் 3 (23-6-2024) ஆகியவற்றில் பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்களை இந்த கூட்டம் ஆமோதித்து அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்களில் வரும் காலங்களில் ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்தது.

4. வெளியூரில் வாழும் பல அன்பர்களும் முக்கிமலையில் வாழும் சொந்தங்களும் சங்கத்தின் சித்தாந்தங்களை பாராட்டி இந்த சங்கம் முக்கிமலையின் ஒற்றுமைக்கும் மற்றும் வளர்ச்சிக்கும் பணி செய்வ முனைந்திருப்பதால், இந்த செயல்பாட்டில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்ததை 23-6-2024 நடந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் பதிவு செய்தனர். அந்த பரிந்துரையை தீர ஆலோசித்து சங்கத்தின் இந்த கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

    - சங்கம் முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்களால் துவக்கப்பட்டது என்று இருந்தாலும் முக்கிமலையின் வளர்ச்சிக்காக இந்த சங்கத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள் என்ற பரந்த நோக்கம் இருப்பதால் கோவையில் வசிப்பவர்கள் அல்லாதவரும் இந்த சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்து கொள்வதில் சங்க நிர்வாக குழுவிற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

    - மேற்கண்ட தீர்மானத்தை மையமாக வைத்து வெளியூர்களில் வாழும் முக்கிமலை ஊர் அன்பர்கள் சங்கத்தில் அங்கத்தினர்களாக வரவேற்கப்படுவார்கள் என்பதன் அடிப்படையில் முக்கிமலையின் வளர்ச்சிக்காக சங்கத்தின் மூலம் உதவ நினைக்கும் முக்கிமலையில் பிறந்த அனைத்து மக்களும் சங்கத்தில் அங்கத்தினர் ஆகலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

    - கடந்த கூட்டங்களில் கோவை சங்க உறுப்பினர்களுக்கு மரணம், மருத்துவம், கல்வி ஆகியவற்றில் எந்த விதமான உதவி செய்ய வேண்டும் என்று முடிவு

செய்யப்பட்டதோ அந்த உதவிகள் சங்க உறுப்பினர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் குடும்பத்தினருக்கு செய்யப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

5. ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானத்தின் படி பெரியநாயக்கன்பாளையம் ICICI வங்கியில் சங்கத்தின் வங்கி கணக்கு துவங்குவதற்கு வரும் வாரத்தில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

6. வங்கி கணக்கு துவங்கியவுடன் சங்கத்தின் நலத்திற்காக நன்கொடை கொடுக்க முன்வந்தவர்கள், மேலும் வரும் காலங்களில் நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் வங்கி கணக்கில் தங்கள் நன்கொடைகளை அளிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

7. சங்கத்தின் நிதி மேலாண்மை வழிகாட்டுதல் எப்படி இருக்க வேண்டும் என்று சங்கம் தீர்மானித்து அந்த வழிகாட்டுதல் முறைகள் பட்டியலிடப்பட்டன. அவை இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

8. சங்கம் பதிவு செய்யப்பட்ட நிலையில் அரசாங்கத்திற்கு ஒவ்வொரு வருடமும் தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டு அறிக்கை அளிப்பதின் அவசியத்தை பற்றி விவரமாக ஆலோசனை செய்து அதற்கான வழி காட்டுதல் முறைகளும் முடிவு செய்யப்பட்டன. நிர்வாக வழி காட்டுதல் முறை இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

9. சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா ஆகஸ்ட் மாதம் 11-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வீரபாண்டியில் அமைந்துள்ள மீரா மகாலில் நடத்தலாம் என்று உத்தேசிக்கப்பட்டது. இந்த விழாவில் சங்க உறுப்பினர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது

10. சங்கத்தின் பதவி ஏற்பு விழாவிற்கு முக்கிமலை மற்றும் முக்கிமலை ஊர் கோவை மக்கள் குடும்பங்கள் அனைத்திற்கும் அவர்கள் பெயரைக் கொண்ட வரவேற்பு கடிதம் சங்கத்தின் மூலமாக அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

11. நிர்வாக குழு உறுப்பினர்கள் சங்கத்தின் வளர்ச்சி குறித்து தங்கள் திருப்தியை வெளிப்படுத்தி சங்கம் மேன்மேலும் வளர உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பிரகடனம் எடுத்துக் கொண்டனர்.

12. சங்கத்தின் அடுத்த நிர்வாக குழு கூட்டம் ஜூலை மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக சங்கத்தின் உப தலைவர் திரு கே அரசு நன்றி உரை நவில கூட்டம் இனிதே முடிந்தது.

## இணைப்பு 1

*Finance Management Guidelines*

**நிதி மேலாண்மை வழிகாட்டுதல்கள்**

1. சங்கத்தின் பேரில் தொடங்கப்படும் வங்கி கணக்கு நடப்பு கணக்காக (Current Account) இருக்க வேண்டும்.
2. சங்கத்தின் பேரில் (PAN) நம்பர் வாங்கி அதனை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.
3. கூடுமானவரை எல்லா பரிவர்த்தனைகளும் வங்கி மூலமாகவே இருக்க வேண்டும்.
4. நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும் பொழுது கையிருப்பு பணம், வங்கி பரிவர்த்தனை கணக்கு இது இரண்டும் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.
5. சங்கத்திற்கு நிதி செலுத்துவோர் கண்டிப்பாக வங்கி பரிவர்த்தனை மூலமாகத்தான் செலுத்த வேண்டுமே தவிர பணமாக கொடுக்கக் கூடாது.
6. வங்கி காசோலை புத்தகம் பொருளாளர் கையில் இருக்க வேண்டும்.
7. காசோலையில் குறைந்தது இரண்டு கையெழுத்து இருக்க வேண்டும். அதில் ஒன்று பொருளாளர் கையெழுத்தாக இருக்க வேண்டும். இன்னொரு கையெழுத்து தலைவர் அல்லது செயலாளர் இவர்களில் ஒருவராக இருக்க வேண்டும்.
8. நிர்வாகக் குழு அங்கீகரித்த செலவினங்களுக்கு மட்டுமே காசோலைகள் மூலம் பரிவர்த்தனை செய்ய வேண்டும்
9. நிதி அளிப்பவர்கள் கண்டிப்பாக அவர்களது PAN நம்பரை சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
10. நடப்பு செலவுக்கு பொருளாளர் ஐந்தாயிரம் ரூபாய் வரை கையில் வைத்திருக்கலாம். இந்த கையிருப்பு தொகைக்கு தகுந்த தரவுகளை சமர்ப்பித்து விட்டு மேலும் கையிருப்பு தொகை பெற்றுக் கொள்ளலாம்.
11. சங்கத்திற்கான GPay நம்பர் பெற வேண்டும்.
12. சந்தாதாரர்கள் வங்கி மூலமாக சந்தா செலுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும்.
13. நிர்வாக குழு அங்கீகரித்த உறுப்பினர்கள் மட்டுமே அங்கத்தினர்களிடம் சந்தா பெற வேண்டும். அந்த உறுப்பினர்களின் விவரம் சங்க கூட்டத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
14. சந்தாவை பணமாக அங்கத்தினர்கள் கொடுக்கும் பட்சத்தில் அதை 15 நாட்களுக்குள் வங்கியில் செலுத்தி விட வேண்டும்.
15. மரணம், மருத்துவம், கல்வி போன்ற நிகழ்வுகளுக்கு உதவித்தொகை கொடுப்பதற்கு நிதிக்குழுவின் பரிந்துரை அவசியம் இருக்க வேண்டும்.

## <u>இணைப்பு 2</u>

***Administrative Compliance Guidelines***

**நிர்வாக இணக்க வழிகாட்டுதல்கள்**

நமது சங்கம் தமிழ்நாடு அரசாங்கத்தால் தமிழ்நாடு சொசைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1975 படி அங்கீகரிக்கப்பட்ட நல சங்கம் என்ற படியால் சங்க நிகழ்வுகள் பற்றி ஒவ்வொரு ஆண்டும் பின்பற்றக்கூடிய விவரங்கள் வருமாறு.

1. சங்கத்தின் கூட்டம் மாதம் ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.
2. ஒவ்வொரு கூட்டத்திலும் வருகை பதிவேட்டில் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அங்கத்தினர்களின் கையொப்பம் பெற வேண்டும்
3. சங்க கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானம் தீர்மான புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
4. ஒவ்வொரு வருடமும் நிதிநிலை ஆண்டு (ஏப்ரல் 1) ஆரம்பிப்பதற்கு முன் வரும் நிதியாண்டிற்கு (ஏப்ரல் முதல் தொடரும் ஆண்டு மார்ச்சு வரை) உத்தேச பட்ஜெட் தயார் செய்து அதற்கு பொதுக்குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்
5. மாதாந்திர கூட்டங்களில் சங்கத்தில் அந்த காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகள் மற்றும் நிதிநிலை இவற்றைப் பற்றி ஆலோசனை செய்து தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்க வேண்டும். நிதி நிலையானது உத்தேச பட்ஜெட்டுக்கு எதிராக எவ்வளவு செலவினங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை குறிப்பிட வேண்டும்.
6. வருடம் ஒருமுறை வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்து அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
7. ஒவ்வொரு வருடமும் வருடாந்திர அறிக்கை தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.
8. வருமான வரி விலக்கு போன்ற சலுகைகள் பெறப்படும் பொழுது அதன் தரவுகளை அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
9. சங்கத்தின் எந்த ஒரு தீர்மானமும் சங்கத்தில் பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமாக இருந்து அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

தலைவர் மற்றும் நிர்வாக குழு

*15-7-2024*

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## நிர்வாக குழு சிறப்பு கூட்டம்

*21-7-2024* பெரியநாயக்கன்பாளையம்

## தீர்மானங்கள்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் கூட்டம் 21-7-2024 அன்று பெரியநாயக்கன்பாளையம் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது.

கீழ்க்கண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், புரவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

திரு ஜே சந்திரன் - தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு பி மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு கே நஞ்சுண்டன் – புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு பி ஜோகி - புரவலர்
திரு எம் என் ஜி மணி – புரவலர்
திரு என் சுகுமாரன் - புரவலர்

நிர்வாக குழு உறுப்பினர் திரு எம் ஆர் சிவகுமார் கலந்து கொள்ள முடியவில்லை. திரு பி ஆனந்தகுமார் மற்றும் திரு ஆர் பிரவீன் ஆகியோர் பார்வையாளர்களாக கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த சிறப்பு கூட்டத்தில் ஆகஸ்ட் 11ஆம் தேதி நடக்க இருக்கும் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்பு விழாவின் விவரமான நிகழ்ச்சி நிரலும் மற்றும் விழா மேற்பார்வை குழுக்களும் முடிவு செய்யப்பட்டன. அவை இணைப்பு ஒன்று மற்றும் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு 1 - விரிவான நிகழ்ச்சி நிரல்

*8:30 மணி முதல் 09.45 மணி வரை:* **அங்கத்தினர்களும் விருந்தினர்களும் வருகை, சிற்றுண்டி**

*10:00 மணி முதல் 11.00 மணி வரை:* **பஜனை பாடல்கள்**

**- நீலகிரி புகழ் திரு பெத்துவா ராமன் அவர்கள் குழுவினர்**

*11:00 மணி முதல் 11.20 மணி வரை:* **சங்கம் தொடங்குவதற்கான பூஜை**

**- நடத்துபவர் – திரு B. ஆனந்தகுமார்**

*11:20 மணி முதல் 01.20 மணி வரை:* **சங்க நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு**

- முக்கிமலை ஊர் பெரியவர்களும் சங்கத்தின் புரவலர்களும் சங்கத்தின் தலைவர் மற்றும் உப தலைவருக்கு பாரம்பரிய தலைப்பாகை அணிவித்து மற்ற நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு சால்வை அணிவித்து நமது பாரம்பரிய கோஷத்துடன் மேடைக்கு அழைத்து வருவார்கள்
- புரவலர்கள் சார்பில் **வரவேற்பு** - திரு *B.* ஜோகி
- **சங்கக் கோட்பாடுகளும் செயல் திட்டங்களும்** - விளக்க உரை - திரு *M N G* மணி
- **நிர்வாக குழு உறுப்பினர்களின் ஏற்புரை** -
  **சங்கத்தின் நிர்வாக அமைப்பு** - திரு *J.* சந்திரன் - தலைவர்
  **சங்கத்தின் அங்கத்தினர்கள்** - திரு *K.* அரசு - உப தலைவர்
  **நிர்வாக விதிமுறைகள்** - திரு *R.* சுப்பிரமணி - செயலாளர்
  **நிதிநிலை வரைமுறைகள்** - திரு *B.* சகாதேவன் – பொருளாளர்
  **வழிகாட்டு குழுக்கள்** - திரு *R.* சிவகுமார் - இணை செயலாளர்
  **சங்கத்தின் தொலைநோக்குப் பார்வை** - திரு *J.* கணேஷ் – இணைப்பொருளாளர்
  **அனைவரும் ஒன்றிணைவோம்** - திரு *K.*ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
  **இளைஞர் முன்னேற்றம்** - திரு *B.* மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்
  **கை கொடுக்கும் சங்கம்** - திரு *M R.* சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர்

- **பாராட்டுரை - முக்கிமலை பெரியவர்கள்**
- **சங்க புரவலர்கள்**
  திரு *K.* நஞ்சுண்டன் - புரவலர்
  திரு *K.* மணி - புரவலர்
  திரு *N.* சுகுமாரன்- புரவலர்

- **படிப்பில் சாதனையாளருக்கான பரிசு**

  **பரிசு பெறுபவர்: செல்வி** *S.* **ரினிதா** *(மேல்நிலைப்பள்ளி தேர்வில் 600 க்கு 566 மதிப்பெண்கள் பெற்ற சாதனையாளர்)*

*01:20 மணி முதல் 02.00 மணி வரை:* **மதிய உணவு**

*02:00 மணி முதல் 03.30 மணி வரை:* **பாடல்கள்: திரு பெத்துவா ராமன் அவர்கள் குழுவினர்**

*03:30 மணி முதல் 04.30 மணி வரை:* **சங்க உறுப்பினர் மற்றும் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி**

*04:30 மணி முதல் 05.00 மணி வரை:* **தேனீர்**

*05.00 மணி: விழா நிறைவு*

**நிகழ்ச்சி தொகுப்பாளர்:** *திரு B. ஆனந்தகுமார்*

## இணைப்பு 2 - விழா செயல்பாடுகள் பொறுப்பாளர்கள்

| | |
|---|---|
| **வரவேற்பு:** | *திரு K நஞ்சுண்டன், திரு K மணி, திரு B ஜோகி, திரு J சந்திரன், திரு K அரசு* |
| **உணவு பரிமாறுதல் மேற்பார்வை:** | *திரு N சுகுமாரன், K ராமச்சந்திரன், J B சுரேஷ்* |
| **மக்கள் தொடர்பு:** | *திரு R சுப்பிரமணி, திரு B சகாதேவன், திரு J கணேஷ், திரு M R சிவகுமார்* |
| **வாகனப் போக்குவரத்து:** | *திரு R சுப்பிரமணி, திரு B சகாதேவன், திரு J கணேஷ், திரு M R சிவகுமார்* |
| **புகைப்படம், வீடியோ:** | *திரு R பிரவீன், திரு A சுஜித்* |
| **மைக் சிஸ்டம் ஒருங்கிணைப்பு:** | *திரு R சிவகுமார்* |
| **கலை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:** | *திரு J கணேஷ், செல்வி M ராதிகா* |
| **சங்கத்திற்கு உறுப்பினர் சேர்க்கை:** | *திரு B சகாதேவன், திரு J கணேஷ்* |
| **பூஜை ஏற்பாடுகள்:** | *திரு B ஆனந்தகுமார், திரு A ஹரி, திரு N ஜெயவேல்* |
| **பாடல் குழுவினர் உபசரிப்பு:** | *திரு R சுப்பிரமணி* |
| **நிகழ்ச்சி நிரல் ஒருங்கிணைப்பு:** | *திரு M N G மணி, திரு B மோகன்ராஜ், திரு M சிவகுமார்* |
| **தகவல் தொடர்பு:** | *திரு M N G மணி, திரு J கணேஷ்* |

சங்க நிர்வாக குழு மற்றும் புரவலர்களின் அடுத்த கூட்டம் 28-7-2024 அன்று பதவி ஏற்பு விழா நடக்கும் வீரபாண்டி மீரா மஹாலில் காலை 10 மணிக்கு நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## சிறப்பு நிர்வாக குழு கூட்டம்

*28-7-2024* பெரியநாயக்கன்பாளையம்

## தீர்மானங்கள்

*நிர்வாகக் குழுவின் சிறப்பு கூட்டம் ஜூலை 28, 2024 தேதி வீரபாண்டியில் அமைந்துள்ள மீரா மஹாலில் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெற்றது. அன்றைக்கு பல அங்கத்தினர்கள் தொடக்க விழா அழைப்பு விடுப்பதற்காக முக்கிமலை ஊருக்கு செல்ல வேண்டி இருந்ததனால் நேரடியாக கலந்து கொள்ள முடியாவிட்டாலும் நிர்வாக குழுவில் எடுத்த முடிவுகளுக்கு ஒப்புதல் அளித்தனர்.*

***கூட்டத்தில் நேரடியாக கலந்து கொண்டவர்கள் விவரம் வருமாறு:***

*திரு ஜே சந்திரன் - தலைவர்*

*திரு கே அரசு - உப தலைவர்*

*திரு கே நஞ்சுண்டன் - புரவலர்*

*திரு கே மணி - புரவலர்*

*திரு பி ஜோகி - புரவலர்*

*திரு எம் என் ஜி மணி - புரவலர்*

*திரு என் சுகுமாரன் - புரவலர்*

***சங்கம் சார்பாக பணி நிமித்தமாக சென்ற நிர்வாக குழு உறுப்பினர்கள் வருமாறு:***

*திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்*

*திரு பீ சகாதேவன் – பொருளாளர்*

*திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்*

*திரு ஏ சுஜித் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர், குழு உறுப்பினர்கள் திரு கே ராமச்சந்திரன், திரு எம் ஆர் சிவகுமார், திரு வி மோகன்ராஜ் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.*

கடந்த ஜூலை 22 ஆம் தேதி இயற்கை எய்திய சங்க உறுப்பினர் பார்வதி கணேசன் அவர்களின் தந்தையார் திரு ராமா கவுடர் அவர்கள் ஆத்மா சாந்தி அடைய ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் விழா நடக்கும் மீரா மஹால் வளாகத்தை மேற்பார்வையிட்டு தொடக்க நாள் விழா பணிகள் நடப்பதற்காக ஆலோசனைகள் வழங்கினர். இதை தொடர்ந்து கூட்டம் நடந்தது.

**கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:**

1. பெரியநாயக்கன்பாளையம் ஐ சி ஐ சி ஐ (ICICI) வங்கியில் சங்கத்திற்கான கணக்கு தொடங்க விதிமுறைகள் அடங்கிய ஆவணங்கள் கூட்டத்தில் பகிரப்பட்டு அதற்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தனர். இந்த ஆவணங்கள் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டு வரும் வாரத்தில் வங்கி கணக்கு தொடங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

2. இந்திய அரசாங்கத்தின் தன்னார்வ தொண்டு நிறுவன பட்டியலில் சங்கத்தை சேர்ப்பதற்காக என்ஜிஓ தர்பன் (NGO DARPAN) என்ற இணையதளத்தில் சங்க விபரங்கள் பதிவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை சங்க நிர்வாகிகள் வரவேற்றனர்.

3. சங்கத்தில் அங்கத்தினர்கள் ஆவதற்கு சேர்ப்பு படிவம் பகிரப்பட்டு சில திருத்தங்களுடன் நிர்வாக குழு அங்கீகரித்தது. அங்கத்தினர்கள் மாத சந்தா, சேர்ப்பு தொகை, நன்கொடை முதலியவை அளிக்கும் பொழுது கொடுக்கப்பட வேண்டிய ரசீதுகளும் மற்றும் சங்க செலவினங்களுக்கான ரசீதும் அங்கீகரிக்கப்பட்டன.

4. சங்கத்திற்கான இணையதளம் உருவாக்கப்பட இருக்கின்றது என்பதை நிர்வாகிகள் வரவேற்றனர். இந்த இணையதள வேலைகள் முடிந்து அதை பதவியேற்பு விழாவில் தொடங்குவதற்காக முயற்சி செய்யலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

5. துவக்க விழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு நிர்வாகக் குழுவும் விழா பொறுப்பாளர்களும் வரும் நாட்களில் சிறப்பாக திட்டமிடல் வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
# நிர்வாக குழு கூட்டம்

### *4-8-2024* பெரியநாயக்கன்பாளையம்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் கூட்டம் *4-8-2024* அன்று பெரியநாயக்கன்பாளையம் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது.

கீழ்க்கண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், புரவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு கே நஞ்சுண்டன் – புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு பி ஜோகி - புரவலர்
திரு எம் என் ஜி மணி – புரவலர்
திரு என் சுகுமாரன் - புரவலர்

திரு ஜே சந்திரன் – தலைவர், திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர் ஆகியோர் தமது அத்தையின் ஈமச்சடங்குகளுக்கு செல்ல இருந்ததால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை. இருப்பினும் அவர்கள் கூட்டத் தீர்மானங்களுக்கு தங்களது முழு ஒப்புதலை அளித்தனர்

நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு கே ராமச்சந்திரன், திரு எம் ஆர் சிவகுமார், திரு பி மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ள முடியவில்லை. திரு பி ஆனந்தகுமார் பார்வையாளராக கலந்து கொண்டார்.

முன்னதாக முக்கிமலை திரு எம் பி பெள்ளா கவுடர் அவர்கள் மனைவி திருமதி மணியம்மாள் அவர்கள் மரணத்திற்கும், சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன், திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர் அவர்களின் அத்தை தங்காடு திருமதி ஜானகி அம்மாள் அவர்களின் மரணத்திற்கும் வருத்தம் தெரிவித்து அவர்களின் ஆத்மா சாந்தி அடைய உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். மேலும் இயற்கை எய்திய நீலகிரியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாஸ்டர் மாதன் அவர்கள் ஆத்மா சாந்தி அடையவும் அங்கத்தினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்த கூட்டத்தில் மரண நிகழ்வுகளுக்கு உதவி அளிப்பதில் சங்கத்தின் நிலைப்பாடு, சங்கத்தின் வளர்ச்சி நிதி மற்றும் நிர்வாக குழு பதவி ஏற்பு விழா ஏற்பாடுகள் ஆகிய மூன்று விஷயங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

முக்கிமலை ஊருக்கு சென்று அழைப்பிதழ் வழங்கிய திரு சுப்பிரமணி, திரு சகாதேவன், திரு கணேஷ், திரு சுரேஷ், திரு பிரவீன் மற்றும் இவர்களுடன் சேர்ந்து கோவை வாழ் பெண்கள், விருந்தினர்கள் ஆகியோருக்கு அழைப்பிதழ் கொடுத்த திரு ஆர் சிவக்குமார், திரு எம் ஆர் சிவகுமார் ஆகியோரை சங்கம் மனதார பாராட்டுகிறது.

முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றத்தின் முக்கியமான சேவை என்பது அங்கத்தினர்கள் குடும்பத்தில் அசம்பாவிதங்கள், குறிப்பாக மரணம் நடக்கும் பொழுது அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது என்பது. சங்கத்தின் தொடக்க நாள்களில் இந்த சங்கத்தில் கோவை வாழ் மக்கள் மட்டும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மரண நிகழ்வுகள் ஏற்படும்பொழுது அவர்களுக்கு ரூபாய் 10,000 நிவாரண நிதி அளிக்க வேண்டும் மற்றும் அந்த நிகழ்வுகளில் அங்கத்தினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பின்பு நடந்த ஆலோசனைக் கூட்டங்களில் முக்கிமலை ஊரில் பிறந்தவர்களையும் சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையின் பேரில் அங்கத்தினர் சேர்ப்பு முறை விரிவு படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மரண காலங்களில் சங்கத்தின் சேவை எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர விசாரித்து அதற்கு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த தீர்மானங்கள் சங்க நிர்வாகிகள் பதவியேற்ற நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

i. **கோவை வாழ் மக்கள் ஈமச்சடங்கு கோவையில் நடக்கும் பொழுது:**
   மயான செலவுகள், ஈமக்கிரியைக்கு வருபவர்களுக்கு உணவளிக்கும் செலவு, பூத உடலை ஐஸ் பெட்டியில் வைக்கும் பட்சத்தில் அதற்கான செலவு ஆகியவற்றை சங்கம் ஏற்கும். ஊரிலிருந்து இரண்டு வாகனங்கள் கோவை வந்து திரும்பி செல்லும் செலவினத்தையும் சங்கம் ஏற்கும்.

*ii.* **கோவை வாழ் மக்கள் ஈமச்சடங்கு முக்கிமலையில் நடக்கும் பொழுது:**
மயான செலவுகள், ஈமக்கிரியைக்கு வருபவர்களுக்கு உணவளிக்கும் செலவு ஆகியவற்றை சங்கம் ஏற்கும். கோயமுத்தூரில் இருந்து இரண்டு - வாகனங்கள் முக்கிமலை சென்று திரும்பி வரும் செலவினத்தையும் சங்கம் ஏற்கும். பூதவுடலை முக்கிமலைக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு அந்த குடும்பத்தினரை சாரும்.

*iii.* **முக்கிமலையின் அங்கத்தினர்கள் ஈமச்சடங்கு முக்கிமலையில் நடக்கும் பொழுது:**
மயான செலவுகள், ஈமக்கிரியைக்கு வருபவர்களுக்கு உணவளிக்கும் செலவு ஆகியவற்றை சங்கம் ஏற்கும். கோயமுத்தூரில் இருந்து இரண்டு வாகனங்கள் முக்கிமலை சென்று திரும்பி வரும் செலவினத்தையும் சங்கம் ஏற்கும்.

*iv.* **சங்க அங்கத்தினர்கள் குடும்பங்களில் ஈமச்சடங்கு முக்கிமலை மற்றும் கோவை அல்லாமல் பிற பகுதிகளில் நடக்கும் பொழுது:**
சில நேரங்களில் உறுப்பினர்கள் ஈம சடங்குகளை வெளியூர்களில் நடத்தும் சூழ்நிலை ஏற்படலாம். அந்த சடங்குகளில் அங்கத்தினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலையும் வரலாம். அந்த சூழ்நிலையில் சங்கத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.

**மொத்தத்தில் அங்கத்தினர் குடும்பங்களில் நிகழும் மரண ஈம சடங்குகளுக்கு சாவு வரியில்லாத மேற்கண்ட திட்டங்களை சங்கம் அங்கீகரிக்கின்றது.**

இந்தத் திட்டத்தை நமது சொந்தங்களுடன் பகிர்ந்து எதிர்காலத்தில் சாவு வரி இல்லாத ஒரு நிலை ஏற்பட வழி வகை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. துவக்க விழா அன்று இதைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்லவும் முடிவு செய்யப்பட்டது.

மேலே கண்ட வரிசையில் எண்கள் (ii) மற்றும் (iii) அமல்படுத்துவதற்கு முக்கிமலை கிராமத்தில் வசிக்கும் அங்கத்தினர்களின் ஆலோசனைகளும் தேவை. இவற்றை திட்டமிட வரும் கூட்டங்களில் முக்கிமலை ஊரில் இருக்கும் அங்கத்தினர்களின் பிரதிநிதிகளையும் அழைத்து பேசலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**சங்க வளர்ச்சி நிதி**

1. நடப்பு நிதி ஆண்டு 2024-25 இல் சங்க வளர்ச்சி நிதிக்காக ரூபாய் 15 லட்சம் திரட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதில் நவம்பர் 2024க்கு

முன் ரூபாய் 10 லட்சமும் டிசம்பர் தொடங்கி மார்ச் 2025 க்குள் மீதி 5 லட்சமும் நிதி திரட்டி அதை எந்த அளவிற்கு வங்கிகளின் மூலமும் நிதி நிறுவனங்களின் மூலமும் விருத்தி அடைய செய்யலாம் என்பதை சங்க நிதி மேலாண்மை குழு ஆராய்ந்து தகுந்த முடிவுகள் எடுக்கும்.

2. சங்கத்தின் வளர்ச்சி நிதி இலக்கான ரூபாய் 15 லட்சத்தை அடையும் வரை ஏதேனும் மரண நிகழ்வுகள் ஏற்பட்டால் அதன் செலவுகளை சங்க அங்கத்தினர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

3. 2025-26 நிதியாண்டில் மேலும் 10 லட்சம் நிதி திரட்ட வேண்டும் என்ற இலக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. ஒவ்வொரு நிதி ஆண்டில் பெறப்படும் வளர்ச்சி நிதியை வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் காப்பீடாக செலுத்தி அதற்கு பெரும் வட்டியை சங்கத்தின் நிகழ்வுகளுக்காக பயன்படுத்த வேண்டும்.

5. வைப்பு நிதியில் கிடைக்கும் வட்டியானது சங்க செலவினங்களான மரண நிகழ்வுகளில் ஏற்படும் செலவு, கல்வி ஊக்கத்தொகை, மாதாந்திர கூட்டங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள போதுமானதாக இல்லாத பட்சத்தில் அதிகமாக தேவைப்படும் தொகையை சங்க உறுப்பினர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக விரும்பி அளிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தேவைப்பட்டால் மாத சந்தாவையும் ஓரளவு உயர்த்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

6. சங்கத்தின் நிதிநிலை மேம்பாட்டு குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை சங்க கணக்குகளை சரி பார்த்து அவற்றை நிர்வாகக் குழுவில் சமர்ப்பித்து சங்க வளர்ச்சி நிதி பற்றி ஆலோசனை வழங்கும்.

**ஆன்மீகப் பயணங்கள்**

சங்கத்தின் உறுப்பினர்கள் இந்த நிதியாண்டின் கடைசிக்குள் பேரகணி, பெத்தளா, கீழ்குந்தா ஊர்களில் அமைந்துள்ள ஹெத்தை ஸ்தலங்களுக்கு சென்று நமது வழிபாட்டை செலுத்த வேண்டும் என்று ஆலோசனை சொல்லப்பட்டது. இதை சம்பந்தப்பட்ட ஸ்தலங்களின் பொறுப்பாளர்களிடம் பேசி தகுந்த பயணத்திட்டம் வகுத்து அதை வரும் கூட்டங்களில் மேலும் விரிவாக ஆலோசனை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

அவ்வப்பொழுது சங்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து அருகில் இருக்கும் சுற்றுலாத்தலங்களுக்கு ஒரு நாள் பயணமாக சென்று வரலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு ஆகும் செலவுகளை ஆரம்ப காலகட்டங்களில் சங்க உறுப்பினர்களே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இருந்தாலும் சங்கத்தின் நிதி நிலையை பொறுத்து இது போன்ற நிகழ்வுகளை சங்க நிதி மூலம் ஏற்பாடு செய்யலாமா என்பதை நிர்வாக குழு மற்றும் நிதி மேலாண்மை குழு ஆய்வு செய்து அந்த காலகட்டத்தில் தகுந்த முடிவுகளை பரிந்துரைக்கும்.

நமது முக்கிமலை கிராமத்தில் சிவன்ராத்திரி போன்ற முக்கியமான வழிபாடு தினங்களில் சிறப்பான பூஜை ஏற்பாடு செய்து எல்லா பக்தர்களும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம் என்றும் ஆலோசனை செய்யப்பட்டது. இந்த ஆன்மீக பயணங்கள் பற்றி வரும் கூட்டங்களில் விவரமாக திட்டமிடப்படும்.

**நிர்வாக குழு பதவி ஏற்பு விழா**

நிர்வாக குழு பதவி ஏற்பு விழாவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பொறுப்பாளர் குழுக்கள் அவர்களுக்குள் கலந்துரையாடி ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட துறையை எப்படி திறம்பட செயல்படுத்துவது என்பது பற்றி ஆலோசித்து திட்டமிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**சங்கத்தின் சேவை திட்ட செயல்பாடுகள்**

சங்கத்திற்கான விதிமுறைகள், கோட்பாடுகள், நிர்வாக அமைப்பு, பதிவு போன்ற அனைத்து வேலைகளும் முடிந்த நிலையில் இனிவரும் காலங்களில் என்ன சேவைகள் செய்யலாம் என்பதை பற்றி விரிவான திட்டம் வகுக்க வேண்டும். மருத்துவ முகாம்கள், கல்வி ஆலோசனை, வேலை வாய்ப்பு திட்ட வழிகாட்டுதல், குழந்தைகளுக்கான திறமைகள் வளர்ப்பு முகாம்கள் இவற்றையும் செய்யும் பொழுது சங்கம் மேலும் வலு பெறும். இதனை அடுத்த கூட்டத்தில் விரிவாக வரையறுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் அடுத்த கூட்டம் நடைபெறும் தேதி பின்பு அறிவிக்கப்படும். அந்தக் கூட்டத்தில் வரிசை எண்கள் *(ii)* மற்றும் *(iii)* பற்றியும், பதவி ஏற்பு விழாவை மீள்பார்வை செய்வதும், எதிர்கால சேவை திட்டங்களை வரையறுப்பதும் பிரதானமானதாக இருக்க வேண்டும் என்று நிர்வாக குழு பரிந்துரை செய்கின்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## முதலாவது பொதுக்குழு கூட்டம்

## *11-8-2024* * மீரா மஹால் வீரபாண்டி கோயம்புத்தூர்









*2-6-2024* முறைப்படி பதிவு செய்யப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகார சான்றிதழ் பெற்ற மன்றத்தின் முதல் பொதுக்குழு கூட்டம் சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழாவுடன் *11-8-2024* அன்று கோயமுத்தூர் வீரபாண்டியில் அமைந்துள்ள மீரா மகாலில் நடைபெற்றது. பூஜையுடன் ஆரம்பித்த இந்த பொதுக்குழு கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் முறைப்படி பதவியேற்பு நடைபெற முக்கிமலை ஊர் பெரியவர்கள் நேரடியாக வந்து முன்னின்று பதவி ஏற்பு விழாவினை நடத்தி வைத்து நிர்வாகிகளை ஆசீர்வதித்தனர்.







விழாமேடையை சங்க நிர்வாகிகளும் சங்கம் ஆரம்பிக்க ஊன்றுகோலாக இருந்த புரவலர்களும் சங்கத்தின் வளர்ச்சிக்காக தங்களையும் அங்கத்தினர்களாக இணைத்து கொண்ட முக்கிமலை சொந்தங்களின் தலைவரும் அலங்கரித்தனர். நிர்வாகிகளும் புரவலர்களும் சங்கத்தின் கொள்கைகள் பற்றியும் வருங்கால செயல்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்க அதை கரகோஷத்துடன் பொதுக்குழு ஆமோதித்தது. அந்த தீர்மானங்களின் சாராம்சம் வருமாறு:







1. சங்க தொடக்க விழா நாள் வரை சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட 48 அங்கத்தினர்கள் சங்கத்தின் பொதுக்குழு அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஆகஸ்ட் மாத இறுதிக்குள் தங்களை இணைக்கும் அங்கத்தினர்களும் பொதுக்குழு அங்கத்தினர்களாக சங்கம் அங்கீகரிக்கும். இது தவிர அவ்வப்பொழுது சங்கத்தில் சேர விரும்பும் உறுப்பினர்களை நிர்வாக குழு பொதுக்குழுவில் சேர்ப்பதற்கு பரிந்துரை செய்யும்.
2. சங்கம் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. தற்போதைய ஸ்தாபக சங்க நிர்வாகிகள் பதவிக்காலம் முடியும்பொழுது புதிய நிர்வாகிகள் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
3. சங்க நடவடிக்கைகளை நிர்வகிக்க தலைவர், உப தலைவர், செயலாளர், இணைச் செயலாளர், பொருளாளர், இணை பொருளாளர் மற்றும் 3 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் செயல்படுவார்கள்.
4. வரும் காலங்களில் அடுத்த தலைமுறை இந்த சங்கத்தை வழி நடத்த வேண்டும் என்பதற்காக நிர்வாக குழுவில் மூன்றில் இரண்டு பங்கினர் 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது உகந்தது.
5. இந்த குழுவிற்கு ஆலோசனை சொல்வதற்கு ஐந்து பேர் கொண்ட ஸ்தாபக புரவலர் குழுவும் செயல்படும்.



6. சங்கத்திற்கு உறுப்பினர்கள் என்பவர்கள் முக்கிமலை ஊரில் பிறந்து கோவையில் வாழ்பவர்கள், வெளியூரில் வாழும் முக்கிமலை அன்பர்கள், மற்றும் நமது ஊரில் வசிக்கும் சொந்தங்களும் இணையலாம் என்ற ஒரு விசால எண்ணத்துடன் அங்கத்தினர் சேர்க்கை மேற்கொள்ளப்படும்.
7. சங்கம் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றதால் அதற்கான நிர்வாக இணக்க விதிமுறைகள் பலமுறை ஆலோசனை செய்த பின்பு இயற்றப்பட்டிருக்கின்றன.



8. மாதாந்திர கூட்டங்களில் சங்கத்தில் அந்த காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகள் மற்றும் நிதிநிலை இவற்றைப் பற்றி ஆலோசனை செய்து தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்க வேண்டும். நிதி நிலையானது உத்தேச பட்ஜெட்டுக்கு எதிராக எவ்வளவு செலவினங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை குறிப்பிட வேண்டும்.

9. வருடம் ஒருமுறை வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்து அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.



10. ஒவ்வொரு வருடமும் வருடாந்திர அறிக்கை தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

11. சங்கத்திற்கு நிதி செலுத்துவோர் கண்டிப்பாக வங்கி பரிவர்த்தனை மூலமாகத்தான் செலுத்த வேண்டுமே தவிர பணமாக கொடுக்கக் கூடாது. நிதி அளிப்பவர்கள் கண்டிப்பாக அவர்களது PAN நம்பரை சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

12. சந்தாதாரர்கள் வங்கி மூலமாக சந்தா செலுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும்.



13. மரணம், மருத்துவம், கல்வி போன்ற நிகழ்வுகளுக்கு உதவித்தொகை கொடுப்பதற்கு நிதிக்குழுவின் பரிந்துரை அவசியம் இருக்க வேண்டும்.

14. சங்கத்திற்கு கணிசமான வைப்பு நிதி ஏற்படுத்தி அதில் இருந்து வரும் வட்டி மற்றும் வருட உறுப்பினர் கட்டணத்தை வைத்து சங்கத்தை திறம்பட நடத்தலாம்



15. சங்கத்தின் விதிமுறைகள் பின்பற்றி சங்கத்தின் நிர்வாகிகள் முழு ஒத்துழைப்புடன் இந்த சங்கம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று பணி செய்து வருகின்றனர்.

16. சரி பார்ப்பு சமநிலை (Check and Balance) அமைப்பு நமது சங்கத்தில் நடைமுறைப்படுத்துகின்றோம்.



17. நிர்வாக குழுவுக்கு அறிவுரை வழங்கி சங்க நிகழ்வுகளை வழிநடத்த ஆறு குழுக்கள் செயல்படுகின்றன.

18. ஒவ்வொரு குழுவிலும் புரவலர்களும் நிர்வாக குழு உறுப்பினர்களும் அங்கத்தினர்களாக இருந்து சங்க நிர்வாகத்தை வழிநடத்துகின்றனர்.



19. **சங்க மேலாண்மை குழு** சங்கம் அரசாங்க விதிமுறைகள் படி, மற்றும் சங்கம் எடுத்த தீர்மானங்கள் படி நடக்கின்றதா என்பதை அவ்வப்பொழுது ஆய்வு செய்யும். **உறுப்பினர் தொடர்பு குழு** சங்க உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு சங்கத்தை மேன்மேலும் எப்படி முன்னேற்ற பாதையில் அழைத்துச் செல்லும் என்பதை தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு பாலமாக செயல்படும். **சமுதாய தொடர்பு குழு** நமது சமுதாய பெரியவர்களிடமும் பொது ஜனங்களிடமும் சங்கத்தின் கொள்கைகளை பற்றி கூறி சங்கத்தின்





முன்னேற்றத்திற்கு ஆலோசனைகள் பெறும். **கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குழு** கல்வி மற்றும் தொழில் சம்பந்தமான வாய்ப்புகள் ஏற்படும் பொழுது அவற்றை நல்ல முறையில் உபயோகிக்க குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் அவ்வப்பொழுது அறிவுரை வழங்கும். **நிவாரண நிதி பரிந்துரை குழு** அங்கத்தினர்களின் குடும்பங்களில் ஏற்படும் அசம்பாவித நிகழ்வுகளான மரணம், மருத்துவம் இவற்றிற்கான நிவாரணத் தொகையை அளிப்பதற்கு நிர்வாக குழுவுக்கு பரிந்துரை செய்யும்.



**தொழில்நுட்பக் குழு** தொழில்நுட்ப பயன்பாட்டை சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் கருத்து பரிமாற்றத்திற்காகவும் எப்படி பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கும். **நிதிநிலை தணிக்கை குழு** சங்கத்தின் நிதி நிலையில் நேர்மைத் தன்மையும், வெளிப்படைத்தன்மையும், உண்மை தன்மையும் அவ்வப்பொழுது ஆய்வு செய்து ஆலோசனைகளும் வழங்கும்.



20. சங்க மேலாண்மை குழு, நிதிநிலைக்குழு, நிவாரணப் பரிந்துரை குழு ஆகியவை தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் மற்ற குழுக்களுக்கும் அங்கத்தினர்கள் வருங்காலத்தில் நியமிக்கப்பட்டு அந்த குழுக்களின் செயல்பாடுகள் திறம்பட நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.



21. வரும் 3 ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு ஆண்டறிக்கை, நிதிநிலை தணிக்கை அறிக்கை, சங்க செயல்பாடுகள் இவற்றை தெளிவாக எடுத்து கூறி நமது சங்கம் அடுத்த நிலையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாக மாற வேண்டும் என்பதே சங்கத்தின் கனவு.



22. வரும் காலங்களில் நமது சங்கம் தன்னார்வ தொண்டு நிறுவனமாக மாறும்பொழுது தொழில் நிறுவனங்களுடனும் அரசாங்கத்துடனும் இணைந்து பல்வேறு நலத்திட்டங்களை சமுதாயத்திற்கு நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பம் கண்டிப்பாக ஏற்படும்.
23. "முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்பதன் சித்தாந்தமே நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே. அப்படிப்பட்ட சிந்தாந்தத்தில் உருவானது தான் இந்த சங்கம்.

24. வரும் காலங்களில் சங்கத்தின் மூலம் இளைஞர் மேம்பாட்டுக்கு சில திட்டங்கள் இயற்ற வேண்டும்.
25. எந்த விதமான நல்லது கெட்டது நிகழ்ச்சிகள் ஒரு குடும்பத்தில் நடந்தாலும் மறுகணம் நாங்கள் இருக்கின்றோம் என்று ஒவ்வொருவருக்கும் கை கொடுக்கும் சங்கத்தில் நமது கைகளையும் இணைத்து கொள்ள வேண்டும்.

## நன்றியறிதல் தீர்மானங்கள்



சங்கம் ஆரம்பித்த பின்பு நடக்கக்கூடிய முதலாவது பொதுக்குழு கூட்டம் என்று இருந்தாலும் நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா என்பதை முன்னிறுத்தி இந்த நிகழ்வானது ஒரு விழாவாகவே கொண்டாடப்பட்டது. விழாவிற்கு திரளாக வந்து நிர்வாகிகளை ஆசீர்வதித்த முக்கிமலை ஊர் சொந்தங்களுக்கும் தலைவர் திரு கே சந்திரா கவுடர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பிலும் புரவலர்கள் மற்றும் நிர்வாக குழு சார்பிலும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.



சங்கத்தின் அழைப்பை ஏற்று கோவையில் வாழும் முக்கிமலை ஊர் பெண்கள், மருமகன்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தார்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.



மேல்நிலைப்பள்ளி தேர்வில் 600க்கு 566 மதிப்பெண் பெற்று சாதனை படைத்த செல்வி S. ரினிதாவிற்கு சங்கத்தின் சார்பில் ரூபாய் 5000 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது. ரினிதாவிற்கு வாழ்த்துக்கள் கூறுவதுடன் வரும் காலத்தில் மற்ற குழந்தைகளுக்கு தம்மை போல சாதனையாளராக வேண்டும் என்ற ஊக்கமளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது

சிறப்பான பூஜை செய்து சங்கத்திற்கு நல்லதோர் ஆரம்பத்தை ஏற்படுத்திய திரு ஆனந்தகுமார் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



சிறப்பு இசை நிகழ்ச்சிக்கு சங்கத்தின் அழைப்பை ஏற்று எத்தை அம்மன் புகழ் பாடி சிறப்பான ஒரு இசை நிகழ்வை அளித்த பெத்துவா திரு ராமன் குழுவினருக்கு பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



அனைவரும் எதிர்பார்த்ததை விட சிறப்பான முறையில் நடந்தேறிய சங்க உறுப்பினர்கள், குழந்தைகள், குடும்ப அங்கத்தினர்கள் கலை நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து குழந்தைகளின் கலையை வெளிப்படுத்த உறுதுணையாக இருந்த செல்வி ராதிகா மணி அவர்களுக்கு ஏகோபித்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.
















கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விழாவிற்கு மகுடம் சூட்டியது போல நாங்கள் சாதிக்க வல்லவர்கள் என்றபடி தங்களது திறமைகளை வெளிப்படுத்திய குழந்தைகள், அங்கத்தினார்கள், பெற்றோர்கள் மற்றும் விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்தின் ஆணிவேர் போன்றவர்கள் என்றிருந்தாலும் அத்தனை உறுப்பினர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் சங்கம் ஆரம்பிக்க ஆலோசனை நடந்த நாள் முதல் பக்க பலமாக இருந்து கடினமான சவால்களை மேற்கொண்டு சங்கத்தின் சித்தாந்தத்தை குறிக்கோளாக கொண்டு சங்கத்தின்










இரும்பு தூண்களாக மாறிவரும் அத்தனை சொந்தங்களுக்கும் புரவலர்கள் மற்றும் சங்க





நிர்வாக குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.










வரும் காலங்களில் சங்க நிர்வாக குழு விரிவுபடுத்தும் பொழுது









அதில் மகளிருக்கான பிரதிநிதித்துவம் அவசியம் அளிக்க வேண்டும் என்ற உறுதி





மொழியுடன் ஒவ்வொரு வருடமும் இது போன்ற ஆண்டு விழா விமரிசையாக கொண்டாடப்பட வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு நன்றியை செலுத்தி விழா இனிதே நிறைவுற்றது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் கூட்டம்

### *15-8-2024 * உதகமண்டலம்*

*15 ஆகஸ்ட் 2024 அன்று உதகையில் திரு ஆர் சுகுமாரன் எழுதிய மண்ணின் மைந்தர்கள் - பகுதி 7 புத்தக வெளியீடு விழாவில் கலந்து கொள்ள வந்த முக்கிமலை ஊரில் வாழும் சங்கத்தின் அங்கத்தினர்களும் கோவையில் இருந்து சென்ற சங்கத்தின் நிர்வாகிகளும் விழா முடிந்த பிறகு ஒருங்கிணைப்பு திட்டங்கள் பற்றியும், ஊரில் விசேஷங்கள் நடத்தும் செயல்பாடுகள் குறித்தும் விவரமாக விவாதித்தனர். கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.*

**முக்கிமலைவாழ் உறுப்பினர்கள்**

*கே சந்திரன் - தலைவர்*

*கே கே ராமன்*

*டி போஜன்*

*பி பீமன்*

*எல் பெள்ளி*

*ஜே நகுலன்*

*பி. சுந்தரம்*

*பி சத்தியசீலன்*

*ஆர் சுகுமாரன்*

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

*திரு ஜே சந்திரன் – தலைவர்*

*திரு கே அரசு - உப தலைவர்*

*திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்*

*திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்*

*திரு எம் என் ஜி மணி – புரவலர்*

*திரு என் சுகுமாரன் - புரவலர்*

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு கீழே பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்கள் பட்டியலிடப்பட்டு இவற்றை 1-9-2024 அன்று கோயமுத்தூரில் நடைபெறக்கூடிய சங்கத்தின் நிர்வாக குழு கூட்டத்தில் சமர்ப்பித்து இறுதியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. அந்த பரிந்துரைகள் கீழே பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

1. முக்கிமலையில் வாழ்பவர்களும் கோவையில் வாழ்பவர்களும் என்று மொத்தம் 48 குடும்பங்கள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

2. சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடைபெறும் விசேஷங்கள் முக்கிமலையிலும் நடைபெறலாம் மற்றும் கோவையிலும் நடைபெறலாம். ஊரில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அங்கத்தினர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே முன்னிலை வகிப்பார். அதேபோன்று கோவையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு சங்கத்தின் தலைவர் முன்னிலை வகிப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. முக்கிமலையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு திரு கே சந்திரன் கவுடர் அவர்கள் தலைமை தாங்குவார். திரு சந்திரன் கவுடர் அவர்கள் வெளியூரில் இருந்து வர முடியாத சூழ்நிலை ஏற்படும் பொழுது அவரது ஸ்தானத்தில் திரு கே கே ராமா கவுடர் அவர்கள் தலைமையேற்று நிகழ்வுகளை வழி நடத்துவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

4. முக்கிமலை ஊரில் நடக்கும் திருவிழா மற்றும் கோயில் சம்பந்தப்பட்ட விசேஷங்களில் கோவை வாழ் அங்கத்தினர்களும் பெருவாரியாக கலந்து கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

5. அசம்பாவித நிகழ்வுகள் முக்கிமலையில் நடக்கும் போது அதை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட ஏற்பாடுகள் முன்னதாகவே செய்ய வேண்டும் என்றும் அதற்கு தேவையான நிதியை சங்கமே ஏற்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

   - ஒரு லோடு விறகு (உபயோகப்படுத்திய பின் மீண்டும் இருப்பில் வைக்க வேண்டும்)
   - 20 டயர்கள் (எந்த காலகட்டத்திலும் இருப்பில் இருக்க வேண்டும்)
   - ஈம சடங்குகளில் உபயோகப்படுத்தும் சீலை, சால்வை, பண்ண பட்டே, சின்னதா அண, தலை அக்கி கத்தி, ஓலை கத்தி, ஓலை மூக்குத்தி, ஒணக்கைதண்டு, பூக்காசு மற்றும் தேவைப்பட்ட பொருட்கள்

6. முக்கிமலை ஊருக்கு பொதுவாக இருக்கும் சமையல் பாத்திரங்கள், அடுப்பு, சவ ஊர்தி, இருக்கைகள் முதலியவற்றை சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடக்கும் நிகழ்வுகளிலும் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த பொருட்களையும் தாண்டி வேறு ஏதாவது அவசரகதியில் தேவைப்படும் பொழுது அவற்றை வாடகைக்கு எடுக்கலாம் என்ற தீர்மானமும் பரிந்துரைக்கப்பட்டது. அப்படிப்பட்ட செலவினங்களையும் சங்கம் ஏற்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

7. முக்கிமலை ஊரின் பெண் மற்றும் மருமகன் மரண நிகழ்வுகளுக்கு முக்கிமலை ஊரிலிருந்தும் கோவையில் இருந்தும் அங்கத்தினர்கள் நேரடியாக செல்ல வேண்டும் என்ற தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இத்துடன் அங்கத்தினர் மனைவியின் பெற்றோர்கள் ஈமச்சடங்குகளுக்கு செல்வதற்கு ஒரு வாகனத்திற்கான செலவினங்களை சங்கம் ஏற்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

8. முக்கிமலை அங்கத்தினர்கள் குடும்பங்களில் நடக்கும் மரண நிகழ்வுகள் செலவினங்களை சங்கம் ஏற்கும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேல் சகோதரர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அந்த நிகழ்வினால் ஏற்படும் செலவினங்களை சங்கம் அளிப்பது சாத்தியம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

9. சங்கத்தில் மொத்தம் 48 குடும்பங்கள் அங்கத்தினர்களாக இருந்தாலும் முக்கிமலை ஊரின் அமைப்பில் கூட்டுக்குடும்பகளாக பார்க்கும் பொழுது மொத்தம் 30 என்று கணக்கிடலாம். முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் அதற்கு சம்பந்தப்பட்ட குடும்பங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தொகையை கோவில் பூஜை பொறுப்பாளரிடம் அளிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த அமைப்பில் ஒவ்வொரு குடும்பமும் வருடம் இருமுறை பூஜை செலவுகளை ஏற்கும்படியான தற்போதைய சூழ்நிலை இருப்பதையும் அங்கத்தினர்கள் நினைவு கூர்ந்தனர்.

10. ஊரில் மார்கழி பஜனை, கோவில் விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சங்கத்தின் அங்கத்தினர்கள் எப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யலாம் என்பதை வரும் கூட்டங்களில் விவாதிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. சங்கத்திற்காக நன்கொடைகள் பெறப்பட்டு கொண்டிருக்கின்றன என்றும் முதல் கட்டமாக 5 லட்சம் ரூபாய் வைப்பு நிதியாக வங்கியில் உள்ளது என்ற தகவலையும் அங்கத்தினர்கள் விவாதித்தனர். மேலும் 5 லட்சம் கூடிய விரைவில் வைப்பு நிதியில் சேர்க்கப்படும் என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டது. அங்கத்தினர்களை தொடர்புகொண்டு நன்கொடைகளை அதிகப்படுத்தியும் மற்றும் துரிதமாக அவற்றை பெரும் முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்று பரிந்துரைக்கப்பட்டது. ரூபாய் 15 லட்சம் வைப்பு நிதியில் சேரும் வரை சங்கத்தில் ஏற்படும் செலவினங்களை அங்கத்தினர்களே நன்கொடை மூலமாகவும் தங்கள் பங்களிப்பு என்ற முறையிலும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

12. மண்ணின் மைந்தர்கள் - ஏழாம் பகுதி புத்தக வெளியீட்டு விழாவில் நாக்குபெட்டா தலைவர், உதகை எம் எல் ஏ திரு கணேசன், பிரபல உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு பொப்ளி, பல சீமை தலைவர்கள், விருந்தினர்கள் என்று சுமார் 100 பேர் கலந்துகொண்டு திரு சுகுமாரன் ஆராய்ச்சிகள் பற்றி பேசியது முக்கிமலை ஊரின் குடிமகன் என்ற விதத்தில் முக்கிமலைக்கு பெருமை சேர்ப்பதாக இருந்த தருணங்களை அந்த விழாவில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் உணர முடிந்தது. திரு சுகுமாரனுக்கு பாராட்டுதல்களை தெரிவித்த அங்கத்தினர்கள் சங்க சார்பில் வரும் நிகழ்வுகளில் அவரை கௌரவிக்கவும் பரிந்துரை செய்தனர்.

*********

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாக குழு கூட்டம்

### *1-9-2024 பெரியநாயக்கன்பாளையம்*

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் கூட்டம் 1-9-2024 அன்று பெரியநாயக்கன்பாளையம் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது. சங்க தொடக்க விழாவிற்கு பின்பு நடந்த இந்த முதல் நிர்வாக குழு கூட்டத்தில் முக்கிமலையில் வாழும் அங்கத்தினர்கள் தலைவர் திரு கே சந்திரா கவுடர் அவர்கள் தலைமையில் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**முக்கிமலைவாழ் உறுப்பினர்கள்**
கே சந்திரன் - தலைவர்
கே கே ராமன்
டி போஜன்
பி பீமன்
எல் பெள்ளி
டாக்டர் என் ராஜன்
ஜே நகுலன்
பி. சுந்தரம்
ஆர் சுகுமாரன்
ஆர் சுனில்
ஆர் தினேஷ்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**
திரு ஜே சந்திரன் – தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்

திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு எம் ஆர் சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு கே நஞ்சுண்டன் – புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு பி ஜோகி - புரவலர்
திரு எம் என் ஜி மணி – புரவலர்
திரு என் சுகுமாரன் - புரவலர்

நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர், திரு பி மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ள முடியவில்லை. திரு ஜே பி சண்முகம், திரு ஏ சுஜித், திரு ஆர் பிரவீன் குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று *11-8-2024*



அன்று விமரிசையாக நடைபெற்ற தொடக்க விழாவை நினைவு கூர்ந்தார். அவர் முக்கிமலை ஊரிலிருந்து திரளாக வந்த சொந்தங்களையும் முக்கிமலை ஊர் கோவை வாழ் பெண்கள் அவர்கள் குடும்பங்கள் அத்தனை பேருக்கும் நன்றியை தெரிவித்த பின் சங்க செயலாளர் திரு சுப்பிரமணி **செயலாளர் அறிக்கை**யை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

- *11-8-2024* அன்று எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசீர்வாதத்துடன் சங்கத்தின் தொடக்க விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது. மண்டபத்தின் தகவல் படி ஏறக்குறைய *300* பேர் விழாவில் கலந்து கொண்டிருக்கின்றனர். அந்த விழா நிகழ்வுகள் அனைவராலும் பாராட்டப்பட்டு முக்கிமலை முன்னேற்றத்திற்கு நமது சங்கம் ஆணிவேராக இருக்கும் என்று விழாவிற்கு வந்தவர்களும் தெரிவித்தனர்.
- சங்க பதவியேற்பு விழா தெய்வீகமான அடிப்படையில் இருந்தது என்பதை கூட்டத்தில் கலந்து கொண்ட அத்துணை பேரும் உணர்ந்தனர்.

- செல்வி ரினிதாவுக்கு கல்வி ஊக்கத்தொகை கொடுத்தது பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது.
- மாலையில் நடைபெற்ற குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சி என்பது எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக நடைபெற்றது என்றே சொல்ல வேண்டும்.
- விழாவின் அனைத்து ஏற்பாடுகளும் நன்கொடையாளர்கள் உதவியுடன் நடந்தேறி இருக்கின்றது.
- தொடக்க விழா வீடியோவை 600 க்கு மேற்பட்டோர் இதுவரை பார்த்திருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சியான செய்தி.

செயலாளர் அறிக்கையை தொடர்ந்து சங்கத்தின் பொருளாளர் திரு பி சகாதேவன் **பொருளாளர் அறிக்கையை** கூட்டத்தில் சமர்ப்பித்தார். அந்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- சங்கத்தின் வங்கி கணக்கு நடைமுறைக்கு வந்த 8-8-2024 முதல் இந்த அறிக்கை தயார் செய்த 6-9-2024 வரை வங்கி பரிவர்த்தனை மூலமாக பெறப்பட்ட நிதி ரூபாய் 11,34,601.
- தொடக்க விழா அன்று பணமாக பெறப்பட்டு வங்கியில் செலுத்தப்பட்டது ரூபாய் 23,200, ஆக மொத்தமாக பெறப்பட்ட நிதி ரூபாய் 11,57,801 .
- இதுவரை சங்க நிதியிலிருந்து செய்த செலவு என்பது செல்வி ரினிதாவுக்கு கல்வி ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்ட ஐந்தாயிரம் மட்டுமே.
- 10 லட்சம் ரூபாய் ஐசிஐசிஐ வங்கியில் வைப்பு நிதியாக செலுத்தப்பட்டிருக்கின்றது. எனவே இன்றைக்கு வங்கியில் இருப்பு ரூபாய் 1,52,801.
- இதுவரை (6-9-2024) நமது சங்கத்திற்கு சேர்ந்த நிதி வருமாறு:

| *No* | *Name of Donor* | *Amount (In Rupees)* |
|---|---|---|
| 1 | K. Chandran ( Kundanna ) | 26,700 |
| 2 | K. Nanjundan | 21,700 |
| 3 | K. Mani | 21,700 |
| 4 | B. Joghee | 10,000 |
| 5 | Dr M N G Mani | 451,700 |
| 6 | Dr N. Sugumaran | 451,700 |
| 7 | J. Chandran | 1,700 |
| 8 | K. Arasu | 11,700 |
| 9 | Mrs. Saraswathy Bheema Gowder | 1,700 |
| 10 | K. Ramachandran | 21,700 |
| 11 | Mohanraj B S/O Belli | 2,600 |

| | | |
|---|---|---|
| 12 | B. Sivaprakash | 600 |
| 13 | Dr. N. Rajan | 51,700 |
| 14 | Parvathi Ganesh | 6,700 |
| 15 | R. Vignesh S/O Rajendran | 1,500 |
| 16 | R. Pradeep S/O K. Ramachandran | 1,700 |
| 17 | N. Mathan | 1,000 |
| 18 | A. Mageshkumar | 1,700 |
| 19 | C. Somasundaram | 1,700 |
| 20 | B. Sathiya Seelan | 600 |
| 21 | B. Dharuman | 600 |
| 22 | K.K. Rama Gowder | 5,700 |
| 23 | J Ravikumar | 1,700 |
| 24 | J Rajkumar | 1,201 |
| 25 | B Sundaram | 1,500 |
| 26 | B. Bheeman | 6,700 |
| 27 | L Belli | 3,700 |
| 28 | R Senthilkumar | 500 |
| 29 | R. Anandakumar | 500 |
| 30 | B. Rajesh | 1,700 |
| 31 | R. Sunil kumar | 500 |
| 32 | Baby Sudha Raman | 1,000 |
| 33 | Baby Raman | 1,000 |
| 34 | Pramit Udayakumar | 1,000 |
| 35 | Sivnadiyar Babuji | 500 |
| 36 | N. Rajendran | 2,600 |
| 37 | R. VinothKumar S/O Rajendran | 1,100 |
| 38 | B.Manivelan | 500 |
| 39 | B. Prabhu | 11,700 |
| 40 | J.B. Shanmugam | 6,700 |
| 41 | R. Ramesh | 1,100 |
| 42 | R. Sivanesan | 1,100 |
| 43 | J. Ganesh | 1,700 |
| 44 | J. Nagulan | 11,700 |
| 45 | Dr N. Santhosh | 1,700 |
| | TOTAL (6-9-2024 வரை) | 1,157,801 |

- வரும் டிசம்பர் மாதத்திற்குள் சங்கநிதிக்கு உறுப்பினர் சேர்க்கை, மாத சந்தா மற்றும் நன்கொடை மூலமாக ரூபாய் 13,04,801 அளிப்பதாக அங்கத்தினர்கள் ஏற்கனவே ஒப்புதல் அளித்திருக்கின்றனர். ஒப்புதல் அளிக்கப்பட்ட எல்லா நிதியும் பெறப்பட்ட பின்பும் நமது ஆரம்ப இலக்கான 15 லட்சம் நிதி சேர்ப்பதற்கு ஏறக்குறைய 2 லட்சம் நிதி திரட்ட வேண்டி உள்ளது. அங்கத்தினர்கள் மனமுவந்து இந்த இலக்கை அடைவதற்கு மேலும் நிதி அளிக்கும் பட்சத்தில் நமது உன்னத திட்டம் எதிர்காலத்திலும் சிறப்பாக செயல்படும் என்பது நிச்சயம்.

- இந்தக் கூட்டத்தினை தொடர்ந்து சங்கத்திற்கு பல்வேறு வழிகளில் நிதி அளித்த அத்தனை நண்பர்களுக்கும் பொருளாளர் கையொப்பமிட்ட ரசிது வாட்ஸ் அப் மூலம் அனுப்பப்படும்.
- வங்கி பரிமாற்றம் மிகவும் எளிதான முறையில் இருப்பதால் சங்கத்திற்கு நிதியளிப்பவர்கள் ரொக்கமாக கொடுக்காமல் வங்கி பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்ந்து சங்கத்தின் உப தலைவர் திரு கே அரசு அவர்கள் *15-8-2024* அன்று உதகமண்டலத்தில் சங்க உறுப்பினர்கள் மற்றும் முக்கிமலை சொந்தங்கள் **ஒருங்கிணைப்பு கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்களை** மேலும் விவரமாக ஆலோசித்து தகுந்த தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்விற்கு திரு சந்திரா கவுடர் முன்னின்று விவாதங்களை வழி நடத்தினார்.

விவரமாக விவாதிக்கப்பட்ட இந்த நிகழ்வுக்கு பின் கீழ் கண்ட **தீர்மானங்கள்** நிறைவேற்றப்பட்டன.

1. சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடைபெறும் விசேஷங்கள் முக்கிமலையிலும் நடைபெறலாம் மற்றும் கோவையிலும் நடைபெறலாம். ஊரில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அங்கத்தினர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே முன்னிலை வகிப்பார். அதேபோன்று கோவையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு சங்கத்தின் தலைவர் முன்னிலை வகிப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. முக்கிமலையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு திரு கே சந்திரன் கவுடர் அவர்கள் தலைமை தாங்குவார். திரு சந்திரன் கவுடர் அவர்கள் ஊரில் இல்லாத சமயங்களில் அவரது ஸ்தானத்தில் திரு கே கே ராமா கவுடர் அவர்கள் தலைமையேற்று நிகழ்வுகளை வழி நடத்துவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



3. அசம்பாவித நிகழ்வுகள் முக்கிமலையில் நடக்கும் போது அதை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் முன்னதாகவே செய்ய வேண்டும் என்றும் அதற்கு தேவையான நிதியை சங்கமே ஏற்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

4. முன்னேற்பாடாக இரண்டு லோடு விறகு இருப்பில் வைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. திரு ஆர் சுகுமார் தனது தோட்டத்தில் இருக்கும் மரத்தை இதற்கு உபயோகப்படுத்தலாம் என்றதன் பேரில் செப்டம்பர் 10ஆம் தேதிக்குள் திரு ஜே நகுலன், திரு எல் பெள்ளி, திரு பி சுந்தரம், திரு ஆர் சுகுமார் ஆகிய நான்கு பேர் உதவியுடன் தேவையான மரங்கள் வெட்டப்பட்டு இருப்பில் வைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. டாக்டர் ராஜன் தேவையான டயர்களை இருப்பில் வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்.

5. ஈம சடங்குகளில் உபயோகப்படுத்தும் குடைகள், சால்வை, சின்னதா அண, தலை அக்கி கத்தி, ஓலை கத்தி, ஓலை மூக்குத்தி, ஒணக்கைதண்டு, பூக்காசு மற்றும் தேவைப்பட்ட பொருட்களை டாக்டர் ராஜன், திரு எல் பெள்ளி, திரு பி சுந்தரம், திரு ஆர் சுகுமார் மற்றும் திரு பி பீமன் அடங்கிய குழு செப்டம்பர் 15ஆம் தேதிக்குள் 2 செட் பெற்று அதில் ஒரு செட் திரு பி சுந்தரத்திடம் முக்கிமலையில் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இரண்டாவது செட் சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் வசம் கோயமுத்தூரில் இருக்க வேண்டும். எதிர்பாராத விதமாக மழை வரும் பொழுது பொருட்களை பாதுகாப்பதற்கு இரண்டு தார்பாலின் வாங்கி ஊரில் இருப்பில் வைக்கப்படும்.



6. முக்கிமலை ஊருக்கு பொதுவாக இருக்கும் சமையல் பாத்திரங்கள், அடுப்பு, சவ ஊர்தி, இருக்கைகள் முதலியவற்றை சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடக்கும் நிகழ்வுகளிலும் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த பொருட்களையும் தாண்டி தேவைப்படும் பொழுது சாமியான (*Shamiana*), நாற்காலிகள் முதலான பொருட்களை வாடகைக்கு எடுக்கலாம் என்ற தீர்மானமும் பரிந்துரைக்கப்பட்டது. வாடகைக்கு எடுக்கும் விதமாக இரண்டு சிலிண்டர்களும் தயார் நிலையில் திரு பி பீமன் அவர்கள் வசம் இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்து பொருட்களையும் வாடகைக்கு எடுக்கும் பொழுது அதன் செலவினங்களை சங்கம் ஏற்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

7. முக்கிமலை ஊரின் பெண் மற்றும் மருமகன் மரண நிகழ்வுகளுக்கு முக்கிமலை ஊரிலிருந்தும் கோவையில் இருந்தும் அங்கத்தினர்கள் நேரடியாக செல்ல வேண்டும் என்ற தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இத்துடன் அங்கத்தினர் மனைவியின் பெற்றோர்கள் ஈமச்சடங்குகளுக்கு செல்வதற்கு ஒரு வாகனத்திற்கான செலவினங்களை சங்கம் ஏற்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

8. முக்கிமலை அங்கத்தினர்கள் குடும்பங்களில் நடக்கும் மரண நிகழ்வுகள் செலவினங்களை சங்கம் ஏற்கும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேல் சகோதரர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அந்த நிகழ்வினால் ஏற்படும் செலவினங்களை சங்கம் அளிப்பது சாத்தியம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

9. சங்கத்தில் மொத்தம் 49 குடும்பங்கள் அங்கத்தினர்களாக இருந்தாலும் முக்கிமலை ஊரின் அமைப்பில் கூட்டுக்குடும்பகளாக பார்க்கும் பொழுது மொத்தம் 32 என்று கணக்கிடலாம். முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் அதற்கு சம்பந்தப்பட்ட குடும்பங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தொகையை கோவில் பூஜை பொறுப்பாளரிடம் அளிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த அமைப்பில் ஒவ்வொரு குடும்பமும் வருடம் இருமுறை பூஜை செலவுகளை ஏற்கும்படியான தற்போதைய சூழ்நிலை இருப்பதையும் அங்கத்தினர்கள் நினைவு கூர்ந்தனர். எந்தெந்த குடும்பங்கள் எப்பொழுது பூஜை ஏற்பாடுகளுக்கான செலவினங்களை ஏற்க வேண்டும் என்று வரும் வாரங்களில் தெளிவாக பட்டியலிட்டு அதனை சங்க அங்கத்தினர்கள் இடையில் பகிர வேண்டும், மேலும் அதை இணையதளத்திலும் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது



**சங்கத்தின் எதிர்கால திட்டங்கள்** என்பது பற்றி டாக்டர் எம் எம் ஜி மணி அவர்கள் ஆரம்பித்து வைக்க அங்கத்தினர்கள் விரிவான கலந்துரையாடல் மேற்கொண்டனர். சங்கத்தின் முன்னோடி திட்டங்களான "வரியில்லா இறுதியாத்திரை", "கல்வி மேம்பாட்டு ஊக்க திட்டம்" மற்றும் "எதிர்பாரா மருத்துவ உதவி திட்டம்" ஆகியவை வாழையடி வாழையாக எப்படி சங்கத்தினால் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆலோசனைகள் பெறப்பட்டன.

இந்த திட்டங்கள் இப்பொழுது ஆரம்பித்தாலும் தொய்வின்றி நமது சந்ததியர்கள் காலத்திலும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்கு ஏற்ப காலத்தின் மாற்றங்களிலும் நேர்த்தியாக நிறைவேறும் விதத்தில் திட்டத்திற்கான விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று அனைவரும் விருப்பம் தெரிவித்தனர். அதனை கருத்தில் கொண்டு நடந்த நீண்ட விவாதத்திற்கு பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

10. சங்கத்திற்கு நன்கொடை கொடுப்பவர்கள் தங்களது நன்கொடையில் 90 சதவீதம் வரியில்லா இறுதியாத்திரை திட்டத்திற்கும், 5 சதவிகிதம் கல்வி மேம்பாட்டு ஊக்கத்திட்டத்திற்கும், 5 சதவிகிதம் எதிர்பாரா மருத்துவ உதவி திட்டத்திற்கும் செலவிடலாம் என்று ஒப்புதல் தெரிவிக்கும் பொழுது இதற்கென்று திரட்டப்படும் நிதியானது வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும்.

11. பிற்காலத்தில் ஏதோ ஒரு சூழ்நிலை கருதி சங்கம் நன்கொடையை "வரியில்லா இறுதியாத்திரை திட்டம்", "கல்வி மேம்பாட்டு ஊக்கத்திட்டம்," "எதிர்பாரா மருத்துவ உதவி திட்டம்" தவிர வேறு திட்டத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்றால் அதற்கு தற்போதைய நன்கொடையாளர்கள் அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட சந்ததியினரோ ஒப்புதல் கொடுத்தால் மட்டுமே இந்த நிதியை மாற்றுத் திட்டங்களுக்கு உபயோகப்படுத்த முடியும்.

12. நன்கொடையாளர் அல்லது அவரது சந்ததியினர் ஒப்புதல் இல்லாமல் பிற்காலத்தில் இந்த நன்கொடை வேறு திட்டங்களுக்கோ செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட்டால் நன்கொடையை திருப்பி கேட்கும் உரிமை நன்கொடையாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

13. இந்த நிதியை நெறிப்படுத்த புரவலர் குழுவில் இருந்து டாக்டர் என் சுகுமாரன் அவர்களும் முக்கிமலை ஊர் சங்க அங்கத்தினர்கள் சார்பாக திரு எல் பெள்ளி மற்றும் திரு டி போஜன் அவர்களும் சங்கத்தின் முதல் நிர்வாகக் குழுவின் சார்பில் திரு ஜே சந்திரன், திரு கே அரசு இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு இந்த நன்கொடை நிதி *(Endowment Fund)* பற்றிய முடிவெடுக்க அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிதிக்குழுவிற்கு டாக்டர் என் சுகுமாரன் தலைவராக இருந்து வழி நடத்துவார் என்றும் அங்கத்தினர்கள் ஒரு மனதாக முடிவு செய்தனர். இந்த ஐந்து பேர் கொண்ட குழுவில் காலியிடம் ஏற்படும் போது அதற்கான நபரை நன்கொடை நிதிக்குழு அந்தக் காலகட்டத்தில் பதவி வகிக்கும் நிர்வாக குழுவிடம் பேசி நியமனம் செய்யலாம்.

14. இந்த நிதி குழுவிற்கு நிரந்தர அந்தஸ்து கொடுக்கும் பொழுது சங்கத்தின் நிதி மேம்பாட்டு முறை சீராக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு இந்த நிரந்தர அந்தஸ்துக்காக பொதுக்குழுவில் தீர்மானம் ஏற்ற சங்கத்தின் நிர்வாக குழு பரிந்துரை செய்கின்றது.

15. சங்கத்தின் முதல் இலக்கான பதினைந்து லட்சம் ரூபாய் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு குறுகிய காலகட்டத்தில் திரட்ட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே நன்கொடை கொடுத்த அங்கத்தினர்கள் மற்றும் நன்கொடை அளிக்காத அங்கத்தினர்கள் ஆகிய அனைவரையும் தொடர்பு

கொண்டு அவர்களது பங்களிப்பு சங்க நன்கொடை நிதிக்கு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும்.

16. சங்க உறுப்பினர் சேர்ப்பு மற்றும் மாத சந்தா இவற்றை நினைவூட்டி நிலுவைத் தொகை பெறுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை திரு பி சகாதேவன், திரு ஜே கணேஷ் மற்றும் திரு கே பிரவீன் குமார் ஆகியோர் மேற்கொள்வார்கள். டாக்டர் சுகுமாரன் அங்கத்தினர்களுக்கு நன்கொடை பற்றிய நினைவூட்டல் செய்து தேவையான நிதி விரைவில் சங்கத்திற்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்வார்கள்.

17. சங்கத்தின் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளராக திரு ஆர் பிரவீன் குமார் ஒருமனதாக நியமிக்கப்பட்டார். இவர் சங்க உறுப்பினர்களின் *WhatsApp* அட்மின் ஆகவும் சங்கத்தின் இணையதளம், *YouTube* ஆகியவற்றை கண்காணிப்பதிலும் நிர்வாக குழுவிற்கு தகுந்த ஆலோசனைகள் அளித்து அவற்றை நடைமுறைப்படுத்தவும் பணியாற்றுவார்.

18. மண்ணின் மைந்தர்கள் - ஏழாம் பகுதி புத்தக வெளியீட்டு விழாவில் நாக்குபெட்டா தலைவர், உதகை எம் எல் ஏ திரு கணேசன், பிரபல உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு பொப்ளி, பல சீமை தலைவர்கள், விருந்தினர்கள் என்று சுமார் *100* பேர் கலந்துகொண்டு திரு சுகுமாரன் ஆராய்ச்சிகள் பற்றி பேசியது முக்கிமலை ஊரின் குடிமகன் என்ற விதத்தில் முக்கிமலைக்கு பெருமை சேர்ப்பதாக இருந்த தருணங்களை அந்த விழாவில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் உணர முடிந்தது. திரு சுகுமாரனுக்கு பாராட்டுதல்களை தெரிவித்த அங்கத்தினர்கள் சங்க சார்பில் அவரை கௌரவித்தனர்.



கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் சமீபத்தில் முக்கிமலை ஊர் பெண்கள் இருவர் குடும்பங்களில் நடந்த துயர சம்பவத்திற்கு அனுதாபங்கள் தெரிவித்தனர். திரு போஜ பெள்ளி கவுடர் மகள் சித்ராவின் கணவர் தேனாடு சிவராஜ் அவர்கள் மறைவிற்கும், திரு போக்க நஞ்சா கவுடர் மகள் ஷீலாவின் கணவர் கிண்ணக்கொறை திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவிற்கும் அங்கத்தினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

சங்கப் புரவலர் திரு பி ஜோகி அவர்கள் நன்றியுரைடன் கூட்டம் இனிதே முடிந்தது. அடுத்த கூட்டம் அக்டோபர் மாதம் முதல் வாரம் நடைபெறும். அதைப் பற்றிய விவரங்கள் வரும் நாட்களில் தெரிவிக்கப்படும்.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாக குழு கூட்டம்

*6-10-2024* பெரியநாயக்கன்பாளையம்

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நிர்வாக குழுவின் கூட்டம் *6-10-2024* அன்று பெரியநாயக்கன்பாளையம் பேராசிரியர் காலனியில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் நடந்தது.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**முக்கிமலைவாழ் உறுப்பினர்கள்**

கே ராஜூ கவுடர்

டி போஜன்

எல் பெள்ளி

ஆர் சுகுமாரன்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு ஜே சந்திரன் – தலைவர்

திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்

திரு பீ சகாதேவன் – பொருளாளர்

திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர்

திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்

திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்

திரு பி மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்

திரு எம் ஆர் சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர்

திரு கே நஞ்சுண்டன் – புரவலர்

திரு கே மணி - புரவலர்

திரு எம் என் ஜி மணி – புரவலர்

திரு என் சுகுமாரன் - புரவலர்

திரு கே அரசு - உப தலைவர், திரு பி ஜோகி – புரவலர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

செயற்குழு விவாதங்களை தொடங்குவதற்கு முன்பாக *3-10-2024* அன்று நமது ஊரில் இறைவனடி சேர்ந்த காலம் சென்ற திரு *S.* லிங்கா கவுடர் மனைவி திரு சென்னையம்மாள் அவர்களுக்கு அங்கத்தினர்கள் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். அன்னார் ஆத்மா சாந்தியடைய சங்கத்தின் சார்பில் பிரார்த்தனை செய்யப்பட்டது.

சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று சங்கத்தில் அங்கத்தினர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் சிறப்பான முறையில் இருக்கின்றன என்று பதிவு செய்தார்.



சங்க செயலாளர் திரு சுப்பிரமணி **செயலாளர் அறிக்கை**யை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

- *1-9-2024* அன்று நடைபெற்ற கூட்டத்தில் முக்கிமலையில் அசம்பாவித நிகழ்வுகள் நடக்கும் போது அதை மேற்கொள்வதற்கு முன்னேற்பாடாக இரண்டு லோடு விறகு இருப்பில் வைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பணி அக்டோபர் மாத இறுதிக்குள் செய்து முடிக்கப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

- ஈம சடங்குகளில் உபயோகப்படுத்தும் குடைகள், சால்வை, சின்னதா அண, தலை அக்கி கத்தி, ஓலை கத்தி, ஓலை மூக்குத்தி, ஒணக்கைதண்டு, பூக்காசு மற்றும் தேவைப்பட்ட பொருட்களை *2* செட் பெற்று அதில் ஒரு செட் முக்கிமலையிலும் இரண்டாவது செட் கோவையிலும் பாதுகாப்புடன் உள்ளது. இதற்கு தேவையான

நன்கொடை அளித்த டாக்டர் ராஜன் அவர்களுக்கு சங்கம் நன்றி அறிதலை பதிவு செய்தது.

- முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் எந்தெந்த குடும்பங்கள் எப்பொழுது பூஜை ஏற்பாடுகளுக்கான செலவினங்களை ஏற்க வேண்டும் என்று பட்டியலிட்டு அதனை சங்க அங்கத்தினர்கள் இடையில் பகிரப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலின்படி பூஜைகள் நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

- 11-8-2024 அன்று நடைபெற்ற சங்க தொடக்க விழா வீடியோவை 740 க்கு மேற்பட்டோர் இதுவரை பார்த்திருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சியான செய்தி.

- சென்ற மாதத்தில் 1-9-2024 நடந்த செயற்குழு கூட்டத்தினை சேர்த்து சங்கம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை நடந்த அத்தனை கூட்டங்களின் தீர்மானங்களும் நமது சங்கத்தின் இணையத்தளமான www.mmcbesociety.com இல் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

செயலாளர் அறிக்கையை தொடர்ந்து சங்கத்தின் பொருளாளர் திரு பி சகாதேவன் **பொருளாளர் அறிக்கையை** கூட்டத்தில் சமர்ப்பித்தார். அந்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் வங்கி கணக்கு நடைமுறைக்கு வந்த 8-8-2024 முதல் இந்த அறிக்கை தயார் செய்த 4-10-2024 வரை பெறப்பட்ட நிதி ரூபாய் 12,66,300. இதில் 12 லட்சம் ரூபாய் ஐசிஐசிஐ வங்கியில் வைப்பு நிதியாக செலுத்தப்பட்டிருக்கின்றது. எனவே இன்றைக்கு வங்கியில் இருப்பு ரூபாய் 51,300. இதுவரை நமது சங்கத்திற்கு சேர்ந்த நிதி மற்றும் செலவினங்களின் விபரங்கள் வருமாறு:

| S.No | Transaction in favour of | Regn | Mem-ber | Donation | Total |
|---|---|---|---|---|---|
| 1 | MNG MANI | 500 | 1,200 | 450000 | 451,700 |
| 2 | N SUGUMARAN | 500 | 1,200 | 450000 | 451,700 |
| 3 | K NANJUNDAN | 500 | 1,200 | 20000 | 21,700 |
| 4 | PARVATHY GANESAN | 500 | 1,200 | 5000 | 6,700 |
| 5 | K CHANDRAN | 500 | 1,200 | 25000 | 26,700 |
| 6 | K MANI | 500 | 1,200 | 20000 | 21,700 |
| 7 | B MOHNANRAJ | 500 | 1,200 | 900 | 2,600 |
| 8 | DR. N RAJAN | 500 | 1,200 | 50000 | 51,700 |
| 9 | K ARASU | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 10 | A MAHESHKUMAR | 500 | 1,200 | 5000 | 6,700 |
| 11 | SARASWATHY BHEEMAN | 500 | 1,200 | 3000 | 4,700 |
| 12 | K RAMACHANDRAN | 500 | 1,200 | 20000 | 21,700 |
| 13 | R PRADEEP | 500 | 1,200 | 0 | 1,700 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | B JOGHEE | 500 | 1,200 | 18300 | 20,000 |
| 15 | J CHANDRAN | 500 | 1,200 | 25000 | 26,700 |
| 16 | C SOMASUNDARAM | 500 | 1,200 | 0 | 1,700 |
| 17 | B PRABHU | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 18 | J B SHANMUGAM | 500 | 1,200 | 5000 | 6,700 |
| 19 | B BHEEMAN | 500 | 1,200 | 5000 | 6,700 |
| 20 | B RAJESH | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 21 | KK RAMAN | 500 | 1,200 | 4000 | 5,700 |
| 22 | L BELLI | 500 | 1,200 | 2000 | 3,700 |
| 23 | J. RAVIKUMAR | 500 | 1,200 | 0 | 1,700 |
| 24 | J. GANESH | 500 | 1,200 | 0 | 1,700 |
| 25 | J. NAGULAN | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 26 | Dr. N. SANTHOSH | 500 | 1,200 | 0 | 1,700 |
| 27 | R. SUBRAMANI | 500 | 1,200 | 0 | 1,700 |
| 28 | B. SAGADEVAN | 500 | 1,200 | 0 | 1,700 |
| 29 | R. SENTHILKUMAR | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 30 | R. ANANDAKUMAR | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 31 | R. SIVAKUMAR | 500 | 1,200 | 10000 | 11,700 |
| 32 | M.R. SIVAKUMAR | 500 | 1,200 | 0 | 1,700 |
| 33 | M.R. DINESHKUMAR | 500 | 1,200 | 0 | 1,700 |
| 34 | J.B. SAGADEVAN | 500 | 1200 | 0 | 1,700 |
| 35 | B. ANANDAKUMAR | 500 | 1200 | 10500 | 12,200 |
| 36 | R RAMESH | 500 | 600 | 0 | 1,100 |
| 37 | R. SIVANESAN | 500 | 600 | 0 | 1,100 |
| 38 | N MATHAN | 500 | 500 | 0 | 1,000 |
| 39 | R VIGNESH | 500 | 500 | 500 | 1,500 |
| 40 | B SATHYASEELAN | 500 | 100 | 0 | 600 |
| 41 | B DHARUMAN | 500 | 100 | 0 | 600 |
| 42 | R VINOTHKUMAR | 500 | 100 | 500 | 1,100 |
| 43 | B.SIVAPRAKASH | 500 | 100 | 0 | 600 |
| 44 | N RAJENDRAN | 500 | 100 | 2000 | 2,600 |
| 45 | B SUNDARAM | 500 | 0 | 1000 | 1,500 |
| 46 | B MANIVELAN | 500 | 0 | 0 | 500 |
| 47 | R. SUNILKUMAR | 500 | 0 | 0 | 500 |
| 48 | J.B. SURESH | 0 | 0 | 0 | 0 |
| 49 | J.B. SIVAKUMAR | 0 | 0 | 0 | 0 |

***Other Contributions***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Baby Sudha Raman | | | | 1000 |
| | Baby Raman | | | | 1000 |
| | J. Rajkumar | | | | 1201 |
| | Pramitha Udayakumar | | | | 1000 |
| | Sivanadiyar Babuji | | | | 500 |
| | ***Half-Yearly Interest - 30-6-2024*** | | | | 699 |
| | ***Total Mobilised*** | **23,500** | **44,700** | **1,192,700** | **1,266,300** |

***Payments and Deposits***

| | | | | |
|---|---|---|---|---|
| *ICICI Bank Fixed Deposit* | | | *1200000* | |
| *S. Rinitha - Education Fund* | | | *5000* | |
| *N. Rajendran Medical Care* | | | *5000* | |
| *B. Bheeman Medical Care - Yet to be debited* | | | *5000* | |
| ***Total*** | | | ***1215000*** | |
| ***Usable Balance in Bank - 4-10-2024*** | | | | ***51,300*** |

நிதி அளித்த அத்தனை நண்பர்களுக்கும் பொருளாளர் கையொப்பமிட்ட ரசிது வாட்ஸ் அப் மூலம் அனுப்பபப்பட்டுள்ளது. கூட்டம் நடந்த 6-10-2024 அன்று ரசீதுகள் நேரடியாகவும் கொடுக்கப்பட்டன.

## கேஸ் மயானம் நிறுவும் திட்டத்திற்கு நமது பங்களிப்பு



எடக்காடு - முக்கிமலை சாலையில் நிறுவப்பட இருக்கின்ற கேஸ் மயானம் குறித்து 2-10-2024 எடக்காடு ஊர் சார்பாக நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் நமது முக்கிமலையின் அங்கத்தினர்கள் மற்றும் சங்கம் சார்பாக திரு டி போஜன் மற்றும் திரு ஆர் சுகுமார் அவர்கள் கலந்து கொண்டனர்.



அங்கு நடந்த கலந்துரையாடலையும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் நிர்வாக குழு கூட்டத்தில் திரு போஜன் அவர்களும் திரு சுகுமார் அவர்களும் விரிவாக எடுத்துரைத்தனர். தொடர்ந்து ஆலோசனை செய்த சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள் சங்கம் சார்பில் நமது பங்களிப்பு எந்த வகையில் இருக்க வேண்டும் என்பதையும் இந்த கேஸ் மயானம் மூலமாக இறுதியாத்திரை எந்த அளவிற்கு எளிதாக்கப்பட முடியும் என்பது பற்றியும் விவரமாக ஆலோசனை செய்தனர். நீண்ட கலந்துரையாடலுக்கு பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்தத் திட்டத்தில் முக்கிமலை மற்றும் கோவை வாழ் சங்க உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும் என்று ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது.

2. இந்த திட்டத்திற்கு நமது குழு சார்பில் ரூபாய் ஒரு லட்சம் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று எடக்காட்டில் நடந்த கூட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த தொகையை நம் சங்கத்தில் இருக்கும் வைப்பு நிதியிலிருந்து எடுக்காமல் சங்க அங்கத்தினர்கள் அவர்களால் முடிந்த நன்கொடை

அளித்து அதைக் கொண்டு இந்த திட்டத்தில் நாம் பங்கேற்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

3. *12-10-2024* தேதியிட்ட ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை சங்கத்தின் சார்பில் திரு டி போஜன் மற்றும் ஆர் சுகுமார் அவர்களிடம் அளித்து இதனை கேஸ் மயான திட்டத்திற்கு நமது பங்களிப்பாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.



4. நமது சங்க அங்கத்தினர்கள் இந்த திட்டத்திற்கு வேண்டிய தொகையை தங்களது பங்களிப்பு மூலம் *11-10-2024*க்குள் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்த கோரிக்கையை உடனடியாக வாட்ஸப் மூலம் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

5. இந்தத் திட்டத்திற்காக திரட்டும் நிதியானது ஒரு லட்சத்தையும் தாண்டும் பொழுது அந்த உபரி தொகையை நமது சங்கத்தின் "வரியில்லா இறுதியாத்திரை" திட்டத்தில் சேர்த்து நமது இலக்கான *15* லட்சம் ரூபாயை விரைவில் எட்ட முயற்சிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

6. இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக எடக்காடு ஊர் சார்பில் அமைக்கப்படும் கமிட்டியில் நமது சங்கம் சார்பில் ஒரு பிரதிநிதி அங்கத்தினராக இருந்து செயல்பட வேண்டும் என்ற பரிந்துரையை ஏற்று திரு ஆர் சுகுமார் அவர்கள் பிரதிநிதியாக செயல்படுவார் என்று ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

7. இந்த மயானம் நிறுவும் திட்டம் மற்றும் செயல்பாடுகள் பற்றி அவ்வப்பொழுது நமது சங்க உறுப்பினர்களுக்கு தேவையான அறிக்கைகள் கொடுக்கப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இதர தீர்மானங்கள்

8. சங்கத்தின் டிசம்பர் மாதாந்திர கூட்டமானது *1-12-2024* அன்று முக்கிமலை ஊரில் நடைபெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு நிர்வாக குழு உறுப்பினர்களையும் தாண்டி நமது சங்க அங்கத்தினர்களும் கலந்து கொள்ளுவது சிறப்பாக இருக்கும் என்றபடியால்

அவர்களுக்கு இந்த கூட்டம் பற்றி இப்பொழுதே தகவல்களை பகிர வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

9. முக்கிமலையில் டிசம்பர் மாதம் நடைபெறும் இந்த கூட்டத்திற்கு முன்பாக சங்கத்தின் "வரியில்லா இறுதி யாத்திரை" திட்டத்திற்கான நமது இலக்கான 15 லட்சம் ரூபாயை திரட்டி விட வேண்டும் என்ற பரிந்துரையும் வைக்கப்பட்டது.

10. இதற்காக ஏற்கனவே நன்கொடை அளிக்க முன்வந்த அன்பர்களையும், மற்ற அங்கத்தினர்களையும், நன்கொடை கொடுத்தவர்கள் இன்னும் இந்த திட்டத்திற்கு உதவி செய்ய முன்வரும் பட்சத்தில் அவர்களையும் ஊக்குவித்து நமது இலக்கை அடைவது சிறப்பாக இருக்கும் என்று அனைவரும் பதிவு செய்தனர். எனவே அனைத்து உறுப்பினர்களும் இந்த இந்த இலக்கை அடைவதற்கு தங்கள் மேலான ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட நமது ஊரின் மூத்தவர் திரு K. ராஜு கவுடர் அவர்கள் சங்கத்தின் குறிக்கோள்கள், அதன் நிர்வாகம், சங்கம் ஏற்றுக் கொண்டுள்ள உன்னத திட்டங்கள், சங்க உறுப்பினர்களின் ஒற்றுமை மற்றும் தொலைநோக்கு இவற்றை வெகுவாக பாராட்டி இன்றைக்கு நாம் வகுக்கும் திட்டங்கள் நமது தலைமுறைக்கு பெரிய உதவியாக இருக்கும் என்பதை எடுத்துரைத்தார். அவர் சிரமம் பாராமல் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு அங்கத்தினர்களை ஊக்குவித்ததற்கும் தகுந்த ஆலோசனை அளித்ததற்கும் சங்கம் சார்பில் நன்றியறிதல் பதிவு செய்யப்பட்டது.

சங்கப் புரவலர் திரு கே நஞ்சுண்டன் அவர்கள் நன்றியுரைடன் கூட்டம் இனிதே முடிந்தது. அடுத்த கூட்டம் நவம்பர் மாதம் முதல் அல்லது இரண்டாவது வாரம் நடைபெறும். அதைப் பற்றிய விவரங்கள் வரும் நாட்களில் தெரிவிக்கப்படும்.



# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
# நிர்வாக குழு கூட்டம்

## *3-11-2024* * முக்கிமலை

முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றத்தின் நவம்பர் மாத நிர்வாக குழு கூட்டம் 3-11-2024 அன்று முக்கிமலையில் அமைந்துள்ள திரு எம் நஞ்சா கவுடர் இல்லத்தில் நடந்தது.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**முக்கிமலைவாழ் உறுப்பினர்கள்**

திரு கே சந்திர கவுடர் - தலைவர்
திரு கே கே ராமா கவுடர்
திரு டி போஜன்
திரு எல் பெள்ளி
டாக்டர் என் ராஜன்
திரு ஜே நகுலன்
திரு என் விக்னேஷ்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு ஜே சந்திரன் – தலைவர்
திரு கே அரசு - உப தலைவர்
திரு ஆர் சுப்பிரமணி - செயலாளர்
திரு பீ சகாதேவன் – பொருளாளர்
திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்
திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு பி ஜோகி – புரவலர்
திரு கே மணி - புரவலர்
திரு எம் என் ஜி மணி – புரவலர்
திரு என் சுகுமாரன் - புரவலர்

திரு ஆர் சிவகுமார் - இணை செயலாளர், திரு பி மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர், திரு எம் ஆர் சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர், மற்றும் திரு கே நஞ்சுண்டன் – புரவலர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.



முன்னதாக செயற்குழு உறுப்பினர்களும், உறவினர்களும் மற்றும் முக்கிமலை சொந்தங்களும் சங்கத்தின் இணைப்பொருளாளர் திரு கணேஷ் அவர்கள் புதல்வி செல்வி வைஷாலியில் பூப்புனித நன்னீராட்டு விழாவில் கலந்து கொண்டு அவர்களை வாழ்த்தினர். விழா சிறப்பாக நடைபெற்றது.



கோவை மற்றும் ஊர் வாழ் சொந்தங்கள் ஒன்றாக இணைந்து ஊரில் நடத்தும் முதல் விழா என்ற வகையில் இனி வரும் காலங்களில் நடத்தப்படும் விழாவிற்கு நல்லதொரு ஒத்திகையாகவே திரு கணேஷ் அவர்களின் இல்ல விழா அமைந்தது. இந்த அனுபவம் மூலம் வரும் காலங்களில் எந்த ஒரு நிகழ்வானாலும் இணைந்து எப்படி சிறப்பாக நடத்த வேண்டும் என்பதற்கு நிறைய அனுபவங்களும் இந்த விழா மூலம் கிடைத்ததாக அனைத்து அங்கத்தினர்களும் தெரிவித்தனர். தனது புதல்வியின் விழாவில் கலந்து கொண்ட அத்தனை சொந்தங்களுக்கும் திரு கணேஷ் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

விழாவினைத் தொடர்ந்து சங்கத்தின் மாதாந்திர நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு ஜே சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று சங்கத்தின் வளர்ச்சி தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பதை நினைவு கூர்ந்தார்.

ஊர் தலைவர் திரு கே சந்திர கவுடர் அவர்கள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் வரும் காலங்களில் செயல்படும் பொழுது சங்கம் ஒரு அசைக்க முடியாத சக்தியாக வளரும் என்று தெரிவித்தார். தனி நபர் முறையில் மனஸ்தாபங்கள் ஏதாவது இருந்தாலும் அவற்றையெல்லாம் களைந்து இனிவரும் நிகழ்வுகளில் ஏகோபித்த ஒற்றுமை உணர்வை பிரதிபலிக்க வேண்டும் என்ற எல்லோரது விருப்பத்தை சங்க அங்கத்தினர்களிடம் ஒரு கோரிக்கையாக வைத்தார்.



தொடர்ந்து சங்க செயலாளர் திரு சுப்பிரமணி **செயலாளர் அறிக்கையை** சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

- நமது சங்கம் எடக்காடு ஊர் முன்னெடுப்பில் தொடங்கப்பட்டுள்ள கேஸ் மயான திட்டத்தில் சேர வேண்டும் என்ற பரிந்துரையை தொடர்ந்து நமது பங்களிப்பாக ரூபாய் ஒரு லட்சம் இந்தத் திட்டத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. திரு *R.* சுகுமாரன் நமது பிரதிநிதியாக இந்த திட்டத்திற்கான கலந்துரையாடல் கூட்டங்களில் கலந்து கொண்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கி வருகின்றார்.

- எடக்காடு ஊர் மக்கள் மற்றும் இந்த மயான நிறுவும் கமிட்டியின் சார்பில் அங்கத்தினர்கள் கோவை வந்து மயானத்திற்கு வேண்டிய பொருட்களை பார்வையிட்ட பொழுது அதில் நமது புரவலர் திரு *M N G* மணி அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி இருக்கின்றார். இந்தத் திட்டம் வரும் வாரங்களில் துரிதமாக செயல்படுத்தப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக தாராளமாக நன்கொடை வழங்கிய அனைத்து சொந்தங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

- சங்கத்தில் முந்தைய தீர்மானம் படி சங்க உறுப்பினர் அல்லது அவர் குடும்பத்தினர் மருத்துவ தேவைக்காக ஐசியூவில் அனுமதிக்கப்படும் பொழுது ஒரு முறையாக ரூபாய் 5000 வழங்கலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். நிர்வாக குழு உறுப்பினர்கள் இந்த வரிசையில் அறுவை சிகிச்சையும் சேர்க்கலாம் என்றும் நமது சங்க கணக்கு ஆரம்பித்த மற்றும் நிர்வாக குழு பதவி ஏற்ற ஆகஸ்ட் இரண்டாம் வாரம் முதல் அறுவை சிகிச்சை செய்திருந்த சொந்தங்களுக்கு இந்த

உதவியை வழங்கலாம் என்ற தீர்மானம் கலந்துரையாடல் மூலம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தை இந்த நிர்வாக குழு கூட்டம் மீண்டும் அங்கீகரித்தது. அதன்படி திரு கே ராமச்சந்திரன் அவர்களின் மனைவி திருமதி சரோஜா மற்றும் திரு எம் ஆர் சிவக்குமார் அவர்களின் மனைவி திருமதி சங்கீதா ஆகியோரின் அறுவை சிகிச்சைக்காக இந்த அங்கத்தினர்களுக்கு சங்கம் தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கியிருக்கின்றது.

- இனிவரும் காலங்களில் சங்க உறுப்பினர்கள் இந்த மருத்துவ உதவியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறுவை சிகிச்சை செய்யும் தகவலை சங்கத்திற்கு தெரிவித்து தேவையான தரவுகளையும் சங்க குறிப்புக்காக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஏற்கனவே சங்கத்திற்கு நன்கொடை அளிக்க ஒப்புதல் அளித்தவர்களை தொடர்பு கொண்டும், மற்ற அங்கத்தினர்களை நன்கொடை அளிக்க ஊக்குவித்தும், நிலுவையில் இருக்கும் சந்தா தொகையை செலுத்தும் படி அங்கத்தினர்களை கேட்டுக் கொள்வதன் மூலமாகவும் வரும் தொகையைக் கொண்டு நமது இலக்கான பதினைந்து லட்சம் நிரந்தர வைப்பு நிதியை விரைவில் எட்ட முடியும் என்ற நம்பிக்கையும் சங்கத்தில் இருப்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

செயலாளர் அறிக்கையை தொடர்ந்து சங்கத்தின் பொருளாளர் திரு பி சகாதேவன் **பொருளாளர் அறிக்கை**யை கூட்டத்தில் சமர்ப்பித்தார். அந்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் வங்கி கணக்கு நடைமுறைக்கு வந்த *8-8-2024* முதல் இந்த அறிக்கை தயார் செய்த *31-10-2024* வரை பெறப்பட்ட நிதி ரூபாய் *15,59,600*. இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| *1.* சங்க உறுப்பினர்கள் *50* பேர் தலா ரூபாய் *500* வீதம் செலுத்திய பதிவு கட்டணம் | .. | *25,000* |
| *2.* சங்க உறுப்பினர்கள் *50* பேர் செலுத்திய வருட சந்தா கட்டணம் | .. | *54,800* |

*(சந்தா வகையில் மொத்தம் பெறக்கூடிய கட்டணம் ரூபாய் 60,000.*
*45 உறுப்பினர்கள் முழுமையாக ரூபாய் 1200 வீதம் சந்தா*
*செலுத்தியதன் வகையில் பெறப்பட்ட கட்டணம் ரூபாய் 54,000.*
*மீதி 5 உறுப்பினர்களில் மூன்று பேரிடம் பெறப்பட்ட பகுதி கட்டணம்*
*ரூபாய் 800. இன்னும் பெறக்கூடிய நிலுவைத் தொகை*
*கட்டணம் ரூபாய் 5,200. இதுவும் விரைவில் பெறப்படும்*
*என்று எதிர்பார்க்கப்படுகிறது)*

| | | |
|---|---|---|
| 3. 31 அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட்ட பொது நன்கொடை | .. | 12,07,900 |
| 4. 25 அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட்ட மயானத்திற்கான நன்கொடை | .. | 2,66,500 |
| 5. பொதுமக்கள் அளித்த நன்கொடை மற்றும் வங்கி அரை வருட வட்டி | .. | 5,400 |
| **மொத்தம் பெறப்பட்ட சந்தா மற்றும் நன்கொடை தொகை** | .. | **15,59,600** |

**வைப்புத் தொகை மற்றும் செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| ICICI வங்கியில் இருக்கும் நிரந்தர வைப்பு தொகை | .. | 14,00,000 |
| கேஸ் மயானத்திற்கு நமது பங்களிப்பு | .. | 1,00,000 |
| செல்வி R. ரினிதாவுக்கு வழங்கிய கல்வி ஊக்கத்தொகை | .. | 5,000 |
| திரு N. ராஜன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு B. பீமன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு K. ராமச்சந்திரன் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு M.R. சிவக்குமார் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| **மொத்த வைப்பு தொகையும் செலவினங்களும்** | .. | **15,25,000** |
| **சங்கத்தின் தற்போதைய இருப்பு தொகை** | .. | **34,600** |

## இதர தீர்மானங்கள்:

பொருளாளர் அறிக்கையை தொடர்ந்து கேஸ் மயானம், மகளிர் மற்றும் ஊர் சொந்தங்களுக்கு சங்கம் பற்றிய விளக்க நிகழ்ச்சி, எதிர்காலத்தில் ஊரில் நடக்க இருக்கின்ற நிகழ்வுகளுக்கான முன்னேற்பாடுகள் போன்றவை விவாதிக்கப்பட்டு அதற்கு கீழ்கண்ட தீர்மானங்களும் பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட்டன.

- **கேஸ் மயானம்** நிறுவுவதில் நமது சங்கம் மற்றும் ஊர் சொந்தங்கள் சார்பில் முழுமையான ஒத்துழைப்பை அளித்து இந்த திட்டம் சிறந்த முறையில் நிறைவேறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் தங்களது விருப்பத்தை முன் வைத்தனர். இந்த திட்டமானது மயானம் என்பதையும் தாண்டி எடக்காடு மற்றும் நமது ஊர் சொந்தங்கள் இடையில் பரஸ்பர உறவை மேம்படுத்தும் என்றபடியால் இனி வரும் காலங்களில் எடக்காட்டில் நடக்கும் நிகழ்வுகளில் நமது சொந்தங்களும் தவறாது பங்கெடுத்து நம் ஊரில் நடக்கும் நிகழ்வுகளுக்கு எடக்காட்டில் இருந்து சொந்தங்களையும் அழைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

- **சங்கத்தின் மூலமாக மருத்துவ முகாம் நடத்துவது** பற்றி விவாதிக்கப்பட்டது. நல்ல மருத்துவமனைகளுடனும், இலவச ஆலோசனை வழங்க முன் வரும் மருத்துவர்களுடனும் சங்கம் இணைந்து மருத்துவ முகாம் நடத்துவதற்கு

தயாராக இருந்தாலும், இந்த முகாம்களில் ஆலோசனை பெற குறைந்தது 50 அன்பர்களாவது இருக்க வேண்டும். இப்படிப்பட்ட அமைப்பு சங்கத்திற்கு சாத்தியம் இல்லாத காரணத்தினால் மருத்துவ முகாம் நடத்துவது தற்போது அவசியம் இல்லை என்று அங்கத்தினர்கள் கருதினர். அதே நேரத்தில் மருத்துவ உதவி தேவைப்படும் நமது சங்க உறுப்பினர்கள் நம்முடன் இணைந்து செயல்பட ஒப்புதல் அளித்த மருத்துவர்களிடம் சென்று இலவச ஆலோசனை பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தற்பொழுது மூட்டு வலி, கை கால், பிரச்சனைகள் போன்ற மருத்துவ உதவிக்கு சிவானந்த காலனியில் செயல்படும் டாக்டர் மேஜர் கமலநாதன் அவர்களையும் காது சம்பந்தப்பட்ட மருத்துவ உதவிக்கு லாலி ரோட்டில் செயல்படும் டாக்டர் ஆனந்த நாதன் அவர்களையும் தொடர்பு கொண்டு நமது சங்க உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை தேவைப்படும்போது அவர்களை சந்திப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். வரும் காலங்களில் மற்ற மருத்துவ ஆலோசனைகள் இலவசமாக கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இந்த திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும், மருத்துவ உதவிக்கு செல்லும் சங்க உறுப்பினர்களுக்கு எந்த விதமான அடையாள அட்டை வழங்க வேண்டும் போன்ற ஏற்பாடுகளை வரும் வாரங்களில் செய்து இந்த திட்டம் டிசம்பர் அல்லது ஜனவரி மாதம் முதல் செயல்பாட்டுக்கு வர தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



- நமது சங்கம் ஆரம்பித்து கடந்த சில மாதங்களில் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தாலும் சங்க அங்கத்தினர்களின் குடும்ப உறுப்பினர்கள் சங்கத்தின் சித்தாந்தம், அதன் சேவைகள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்வது சிறப்பாக இருக்கும் என்ற ஆலோசனையின் படி டிசம்பர் மாதத்தில் முக்கிமலையில் நடக்கும் நிர்வாகக் குழு கூட்டத்தினை தொடர்ந்து எல்லா உறுப்பினர்களுக்கும் கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

- **டிசம்பர் மாதத்தில் முக்கிமலையில் நடக்கும் நிர்வாக குழு** கூட்டமானது ஒரு சித்தாந்த மற்றும் செயல் விளக்க கூட்டமாகவும், ஒரு குடும்ப விழாவாகவும்



இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு கோயமுத்தூரில் இருந்து அங்கத்தினர்கள் கலந்து கொள்வதற்காக தேவையான வாகன வசதியும் செய்யலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. எத்தனை பேர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள் என்பதை முன்னதாக தீர்மானித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த சிறப்பு நிர்வாக குழு கூட்டம் மற்றும் செயல் விளக்க கூட்டம் டிசம்பர் மாதம் 8ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணி முதல் நடைபெறும். எதிர்பாராதவிதமாக பருவ மழை அந்த தருணத்தில் இருக்கும் பட்சத்தில் குறுகிய கால அறிவிப்பின் பேரில், தேவைப்பட்டால் அந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்படும் என்பதையும் நிர்வாகம் குழு முன்வைக்கின்றது. இந்த சிறப்பு நிகழ்வு பற்றிய விரிவான தகவல்கள் வரும் வாரங்களில் சங்க அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

- இனி வரும் காலங்களில் **சங்க அங்கத்தினர்களின் குடும்ப விழா** முக்கிமலை ஊரில் நடைபெறும் பொழுது அதைப் பற்றிய தகவல்கள் ஊரில் உள்ள சொந்தங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தால் சங்க அங்கத்தினருக்கு உதவும் வகையில் முன்னேற்பாடுகள் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று அங்கத்தினர்கள் கருதினர். இந்த கருத்தை மையமாகக் கொண்டு இனி நடத்தப்படும் விழாக்கள் பற்றிய தகவல்கள் முடிந்த வரையில் எல்லா அங்கத்தினர்களுக்கும் தகுந்த அவகாசம் கொடுத்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்ற பரிந்துரையும் முன் வைக்கப்பட்டது.

சங்க உப தலைவர் திரு கே அரசு அவர்கள் நன்றியுரைடன் கூட்டம் இனிதே முடிந்தது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாக குழு கூட்டம்

## *8-12-2024 ** பெரியநாயக்கன்பாளையம்

*சங்கத்தின் டிசம்பர் மாத நிர்வாக குழு கூட்டம் 8-12-2024 அன்று கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் மாலை 2 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.*

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

*திரு D. போஜன்*
*திரு B. சுந்தரம்*
*திரு N. ராஜன்*

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

*திரு J. சந்திரன் – தலைவர்*
*திரு K. அரசு - உப தலைவர்*
*திரு B. சகாதேவன் – பொருளாளர்*
*திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர்*
*திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்*
*திரு B. மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்,*
*திரு K. நஞ்சுண்டன் – புரவலர்*
*திரு B. ஜோகி – புரவலர்*
*திரு K. மணி - புரவலர்*
*திரு M N G மணி – புரவலர்*
*திரு N. சுகுமாரன் - புரவலர்*
*செல்வி M. ராதிகா – பார்வையாளர்*

*திரு R. சுப்பிரமணி – செயலாளர், திரு R. சிவகுமார் - இணை செயலாளர், திரு M.R. சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.*

சங்க செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல் நடைபெறுவதற்கு முன்பாக சமீபத்தில் முக்கிமலை ஊரில் இயற்கை எய்திய திரு B. போஸ் கவுடர் அவர்களுக்கும் இத்தலார் கிராமத்தில் வசித்து வந்த முக்கிமலை ஊர் பெண் திரு குண்டியம்மாள் அவர்களின் மறைவிற்கும் சங்கத்தின் சார்பில் அனைவரும் மௌன அஞ்சலி செலுத்தினர். இயற்கை எய்திய சொந்தங்களின் ஆத்மா சாந்தியடைய சங்கம் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றது.

நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களையும் சங்கத்தின் தலைவர் திரு J. சந்திரன் அவர்கள் வரவேற்றார். சங்கத்தின் நிகழ்வுகள் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அங்கத்தினர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை சங்க வளர்ச்சிக்கு வழங்க வேண்டும் என்றும் தனது வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்.



**செயலாளர் அறிக்கை:** தொடர்ந்து செயலாளர் அறிக்கையை சங்கத்தின் இணை பொருளாளர் திரு J. கணேஷ் அவர்கள் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

- சென்ற கூட்டம் முக்கிமலை ஊரில் நடைபெற்றது ஒரு சிறந்த அனுபவமாகவே இருந்தது. இனிவரும் காலங்களில் ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு எந்த விதமான முன்னேற்பாடுகள் செய்யலாம் என்பதனை திட்டமிட திரு J. கணேஷ் அவர்களின் குடும்ப விழா இருந்தது என்று சொல்லலாம்.
- கடந்த ஒரு மாதத்தில் முக்கிமலையில் வாழ்ந்த திரு போஸ் கவுடர் அவர்களும் இத்தலார் ஊருக்கு மருமகளாக சென்று வாழ்க்கை நடத்திய முக்கிமலை பெண் திருமதி குண்டியம்மாள் அவர்களும் இயற்கை எய்தியுள்ளனர். கோவையில் வாழும் சொந்தங்கள் பெரும்பாலோர்

பெரியநாயக்கன்பாளையத்தில் நடந்த திரு குண்டியம்மாள் அவர்கள் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டது பாராட்டத்தக்க செயலாக அமைந்தது.

- டிசம்பர் மாதம் முக்கிமலையில் நிர்வாக கூட்டம் நடத்தலாம் என்ற பரிந்துரை பள்ளி குழந்தைகளின் தேர்வுகளை முன்னிறுத்தி டிசம்பர் மாதம் கடைசியிலோ அல்லது ஜனவரி மாதத்திலோ நடத்தலாம் என்று ஒத்திவைக்கப்பட்டது. அதனை பற்றி இந்த கூட்டத்தில் ஆலோசித்து தகுந்த முடிவு எடுக்கப்படும்.
- எடக்காடு மற்றும் முக்கிமலை சார்பாக நிறுவப்பட இருக்கின்ற கேஸ் மயானத்திற்கான முன்பணம் *21-11-2024* அன்று கொடுக்கப்பட்டுள்ளது. நமது சங்கம் சார்பில் புரவலர் மணி மற்றும் திரு *R.* சுகுமார் அவர்கள் இந்த கமிட்டி அங்கத்தினர்களுடன் சென்று இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.
- இதுவரை கோவையில் மற்றும் நமது ஊரில் நடந்த நல்லது அல்லது அசம்பாவித நிகழ்வுகளில் நமது சங்க உறுப்பினர்கள் பெருவாரியாக கலந்து கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய அம்சம். இதுபோன்ற பங்கேற்பு எதிர்காலத்திலும் சிறப்பாக இருக்க வேண்டும்.

**பொருளாளர் அறிக்கை:** செயலாளர் அறிக்கையைத் தொடர்ந்து சங்கத்தின் பொருளாளர் திரு *B.* சகாதேவன் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். அதன் சாராம்சம் வருமாறு.

சங்கத்தின் வங்கி கணக்கு நடைமுறைக்கு வந்த *8-8-2024* முதல் இந்த அறிக்கை தயார் செய்த *7-12-2024* வரை பெறப்பட்ட நிதி ரூபாய் *16,12,600*. இதுவரை ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் வைப்பு நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| **வைப்புத் தொகை மற்றும் செலவினங்கள்** | | |
| *ICICI* வங்கியில் இருக்கும் நிரந்தர வைப்பு தொகை | .. | *14,00,000* |
| கேஸ் மயானத்திற்கு நமது பங்களிப்பு | .. | *1,00,000* |
| செல்வி *R.* ரினிதாவுக்கு வழங்கிய கல்வி ஊக்கத்தொகை | .. | *5,000* |
| திரு *N.* ராஜன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |
| திரு *B.* பீமன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |
| திரு *K.* ராமச்சந்திரன் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |
| திரு *M.R.* சிவக்குமார் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |
| **மொத்த வைப்பு தொகையும் செலவினங்களும்** | .. | ***15,25,000*** |
| **சங்கத்தின் தற்போதைய இருப்பு தொகை** | .. | ***87,600*** |

| | | |
|---|---|---|
| **நிலுவையில் இருக்கும் செலவினங்கள்** | | |
| திரு *J.* நகுலன் மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |
| திரு *K.* சந்திர கவுடர் மருத்துவ உதவித்தொகை | .. | *5,000* |

| | | |
|---|---|---|
| திருமதி குண்டியம்மாள் இறுதிச் சடங்கிற்கு கலந்து கொள்ள ஊர் சொந்தங்கள் வந்ததற்கான வண்டி செலவு | .. | *3,500* |
| ஊரில் மயான திட்ட கூட்டங்களில் ஏற்படும் செலவுகளுக்கான நமது பங்களிப்பு | .. | *1,500* |
| **எதிர்கொள்ள வேண்டிய மொத்த செலவினங்கள்** | .. | ***15,000*** |
| **நிகர இருப்பு தொகை** | .. | ***72,600*** |

சங்கத்தின் வைப்புத் தொகை இலக்கான பதினைந்து லட்சத்தை அடைவதற்கு இன்னும் ரூபாய் *27,400* தேவைப்படுகின்றது. எதிர்பாராத அசம்பாவிதம் மற்றும் செலவினங்கள் வகையில் சங்கத்தில் ரூபாய் *50,000* இருப்பு தொகை இருப்பது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே நன்கொடை மூலமாக சங்கத்திற்கு சுமார் ரூபாய் *80,000* பெறுவது அவசியமாகின்றது. இந்த முக்கியத்துவத்தை முன்னிறுத்தி சங்கத்திற்கு நன்கொடை அளிக்காதவர்கள் அவர்களால் எவ்வளவு முடியுமோ அதனை வரும் வாரங்களில் செலுத்தினால் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

**சங்கத்தின் நிதி மேலாண்மை:** பொருளாளர் அறிக்கையில் குறிப்பிட்ட மேலும் சங்கத்திற்கான நிதி திரட்டும் பரிந்துரையை முன்னிறுத்தி சங்கத்தின் நிதி மேலாண்மை தொலைநோக்கு பற்றி புரவலர் டாக்டர் சுகுமாரன் முன்னெடுப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது.



நீண்ட விவாதங்களுக்கு பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் வருட சந்தா தவிர மற்ற செலவினங்களுக்கு சமமான வரி விதிப்பு என்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அதற்காக அங்கத்தினர்களிடம் நன்கொடை பெறுவதே சிறந்தது என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

- அனைத்து உறுப்பினர்களின் நன்கொடை என்பது ஒவ்வொரு வருடமும் ஏற்படக்கூடிய ஒரு நிகழ்வல்ல என்பதையும் சங்கத்தின் ஆரம்ப வருடமான தற்பொழுது ஒரு முறை அளிக்கும் நன்கொடை பிற்காலத்தில் சங்க வளர்ச்சிக்கு பயன்படும் என்பதால் அனைவரும் மனமுவந்து நன்கொடை அளிக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.
- "வரியில்லா இறுதியாத்திரை" திட்டத்திற்கான நிரந்தர வைப்பு நிதி இலக்கான பதினைந்து லட்சம் ரூபாய்க்கு இன்னும் சுமார் 28 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. இதை தவிர மற்ற நலத்திட்டங்களுக்கும் நிர்வாக செலவுகளுக்கும் கணிசமான தொகை வங்கிக் கணக்கில் இருப்பது அவசியம் என்பதை அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தினர். எனவே இதுவரை சந்தா தவிர மற்ற நன்கொடை அளிக்காத அங்கத்தினர்களிடம் நன்கொடை அளிப்பதற்கு வேண்டுகோள் வைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.
- அங்கத்தினர்கள் அளிக்கும் நன்கொடையானது அங்கத்தினர்களின் குடும்ப அசம்பாவித சம்பவங்களுக்கே பயன்படுத்தப்படும் என்ற கருத்தை முன்னிறுத்தி ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களது பங்களிப்பை சங்கத்திற்கு அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. சங்க உறுப்பினர்கள் நன்கொடை வகையில் குறைந்தது பத்தாயிரம் ரூபாய் அளிப்பது வரவேற்கத்தக்கது என்றும் இந்த தொகையை இரண்டு மூன்று தவணைகளில் கூட செலுத்த அங்கத்தினர்களை கேட்டு கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இன்னும் நன்கொடை அளிக்காத அங்கத்தினர்கள் எவ்வளவு நன்கொடை அளிக்க முன்வருகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டு அதனை ஜனவரி 2025 க்குள் பெறுவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**கேஸ் மயானத்திற்கான உபகரணங்கள் :** எடக்காடு மற்றும் முக்கிமலை சார்பாக நிறுவப்பட இருக்கும் கேஸ் மயானத்திற்கான உபகரணங்கள் விரைவில் அந்த கமிட்டி அங்கத்தினர்கள் முன்னிலையில் அளிக்கப்படும் என்ற தகவல் நிர்வாகக் குழு கூட்டத்தில் பகிரப்பட்டது. எனவே மயான கட்டடம் நிறுவுவதற்கு முன்பாகவே மரண அசம்பாவிதங்கள் நடைபெறும் பொழுது கேஸ் மயானம் மூலம் தகனம் செய்ய வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. விரிவான தகவல்களை வரும் கூட்டத்திலோ அல்லது அதற்கு முன்பாகவோ அங்கத்தினர்களிடம் பகிரப்படும்.

**ஊரில் நடைபெற பரிந்துரைக்கப்பட்ட நிர்வாகக்குழு கூட்டம் மற்றும் விழா:** சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் நமது ஊரில் டிசம்பரில் நடத்தலாம் என்ற பரிந்துரை குழந்தைகளின் பரீட்சை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.



சங்க உப தலைவர் திரு K. அரசு அவர்கள் முன்னெடுப்பில் அங்கத்தினர்கள் இந்த கூட்டத்தை ஜனவரி மாதம் நடத்தலாமா அல்லது பிப்ரவரி மாதத்தில் நடைபெற இருக்கும் **சிவன் ராத்திரி விழா**வோடு சேர்த்து நடத்தலாமா என்று நீண்ட கலந்துரையாடல் செய்த பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் ஜனவரி மாத கூட்டத்தை கோயம்புத்தூரில் நடத்தலாம் என்றும் பிப்ரவரி மாதத்தின் கூட்டத்தை பிப்ரவரி 26 ஆம் தேதி நிகழ உள்ள சிவன் ராத்திரியுடன் சேர்த்து நமது ஊரில் விழாவாக நடத்தலாம் என்றும் ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது. இந்த விழாவானது சங்கத்தின் சார்பாக நமது ஊரில் முதன்முறையாக நடைபெற இருப்பதால் அனைத்து அங்கத்தினர்களும் இதன் முக்கியத்துவம் கருதி விழாவில் தவறாது கலந்து கொள்வதற்காக இப்பொழுதே இந்த நாளில் வேறு நிகழ்ச்சிகள் இல்லாமல் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விழாவின் விரிவான ஏற்பாடுகள் குறித்து தனியாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்படும். இருப்பினும் விழாவின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- காலை 6 மணிக்கு கோவையில் இருந்து அனைத்து உறுப்பினர்களும் வாகனங்களில் நமது ஊருக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- சுமார் 9 மணி அளவில் ஊரை அடைந்த பிறகு சிறு தேநீர் இடைவெளிக்கு பின்பு அங்கத்தினர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் அனைவரும் நமது சிவன் கோயிலில் நேர்த்தி கடன் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- சுமார் 12 மணி வரை இந்த ஆன்மீக நிகழ்வு நடைபெறும். சுமார் 1 மணி அளவில் நம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்படும்.
- மதிய உணவு முடிந்து 5 மணி வரை அங்கத்தினர்கள் வேறு சொந்த வேலைகள் அல்லது ஓய்வு எடுக்க அவகாசம் உள்ளது.

- 5 மணிக்கு அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்று சேரும்பொழுது சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் மற்றும் சங்க செயல்களின் விளக்க உரை ஏற்பாடு செய்யப்படும். இந்த கூட்டம் சங்கத்தின் குடும்பத்தினர்கள் அனைவரும் சங்கத்தின் உன்னத நோக்கத்தை புரிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாக இருக்கும்.
- இந்த கூட்டத்தை தொடர்ந்து சுமார் 7 மணி அளவில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அந்த விருந்தினை முடித்த பிறகு இரவு 9 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை கண் விழித்து சிவன் வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகின்றது.
- அன்று இரவு நடைபெறும் வழிப்பாட்டில் பஜனை பாடல்கள், சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறும். அதற்கு வேண்டிய விரிவான ஏற்பாடுகள் வரும் நாட்களில் திட்டமிடப்படும்.
- விழாவிற்கான வாகன போக்குவரத்து, விருந்து, பூஜை செலவுகள் அனைத்தையும் சங்கமே ஏற்றுக்கொள்ளும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

சங்க உப தலைவர் திரு K. அரசு மற்றும் புரவலர் திரு B. ஜோகி அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாக குழு கூட்டம்

## *12-1-2025 ** பெரியநாயக்கன்பாளையம்

*சங்கத்தின் ஜனவரி மாத நிர்வாக குழு கூட்டம் 12-1-2025 அன்று கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.*

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

*திரு D. போஜன்*
*திரு L. பெள்ளி*
*திரு R. சுகுமாரன்*
*திரு B. சுந்தரம்*

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

*திரு J. சந்திரன் – தலைவர்*
*திரு K. அரசு - உப தலைவர்*
*திரு R. சுப்பிரமணி – செயலாளர்,*
*திரு R. சிவகுமார் - இணை செயலாளர்*
*திரு B. சகாதேவன் – பொருளாளர்*
*திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்*
*திரு M.R. சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர்*
*திரு B. ஜோகி – புரவலர்*
*திரு K. மணி - புரவலர்*
*திரு M N G மணி – புரவலர்*
*திரு N. சுகுமாரன் - புரவலர்*

*திரு K. நஞ்சுண்டன் – புரவலர், திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர் , திரு B. மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.*

மேலே குறிப்பிட்ட முக்கிமலை வாழ் சொந்தங்கள் மற்றும் சங்க நிர்வாக குழு அங்கத்தினர்களை தவிர தாய்மார்கள், பார்வையாளர்கள் என்று 40க்கும் மேற்பட்டோர் கூட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்







நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களையும் சங்கத்தின் தலைவர் திரு J. சந்திரன் அவர்கள் வரவேற்றார். அங்கத்தினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக 2025 புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த தலைவர் சங்க உறுப்பினர்கள் இப்பொழுது இருப்பது போல என்றும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்





**செயலாளர் அறிக்கை:** தொடர்ந்து செயலாளர் அறிக்கையை சங்கத்தின் செயலாளர், திரு R. சுப்பிரமணி அவர்கள் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

- எடக்காடு மற்றும் முக்கிமலை ஊர் சார்பாக நிறுவப்படும் கேஸ் மயான இயந்திரங்கள் 2024 டிசம்பர் 17ஆம் தேதி அன்று எடக்காடு பெரியவர்கள் மற்றும் புரவலர் எம் என் ஜி மணி சேர்ந்து எடக்காடு ஊருக்கு அனுப்பி வைத்தனர்.



- அன்று முதல் இன்று வரை எடக்காட்டில் மூன்று மரண நிகழ்வுகள் ஏற்பட்டு பூத உடல் தகனம் எந்திரம் மூலமாக நடத்தப்பட்டு இருக்கின்றது.
- இந்த திட்டமானது இறுதி யாத்திரை சம்பவத்தை மிகவும் எளிதாக்கி இருக்கிறது என்பதை நாக்குபெட்ட பொது ஜனங்களும் பாராட்டியிருக்கின்றனர்.
- சங்க உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் 2025 புத்தாண்டு வாழ்த்துக்களை நமது சங்க வாட்ஸ் அப் குரூப் மூலமாக பகிர்ந்து கொண்டனர்.
- பிப்ரவரி 26 ஆம் தேதி நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு நமது ஊர் சொந்தங்களும் கோவை வாழ் சொந்தங்களும் பூர்வாங்க ஆலோசனைகள் நடத்தியுள்ளனர். அதைப்பற்றி விரிவாக இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

**பொருளாளர் அறிக்கை:** செயலாளர் அறிக்கையைத் தொடர்ந்து சங்கத்தின் பொருளாளர் திரு B. சகாதேவன் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். அதன் சாராம்சம் வருமாறு.

சங்கத்தின் வங்கி கணக்கு நடைமுறைக்கு வந்த 8-8-2024 முதல் இந்த அறிக்கை தயார் செய்த 11-1-2025 வரை பெறப்பட்ட நிதி **ரூபாய் 16,34,433.** இதுவரை ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் வைப்பு நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

**வைப்புத் தொகை மற்றும் செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| ICICI வங்கியில் இருக்கும் நிரந்தர வைப்பு தொகை | .. | 14,00,000 |
| கேஸ் மயானத்திற்கு நமது பங்களிப்பு | .. | 1,00,000 |
| செல்வி R. ரினிதாவுக்கு வழங்கிய கல்வி ஊக்கத்தொகை | .. | 5,000 |
| திரு N. ராஜன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு B. பீமன் பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு K. ராமச்சந்திரன் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திரு M.R. சிவக்குமார் மனைவி பெற்ற மருத்துவ உதவித்தொகை | .. | 5,000 |
| திருமதி குண்டியம்மாள் இறுதிச் சடங்கிற்கு கலந்து கொள்ள ஊர் சொந்தங்கள் வந்ததற்கான வண்டி செலவு | .. | 3,500 |
| **மொத்த வைப்பு தொகையும் செலவினங்களும்** | .. | **15,28,500** |
| **சங்கத்தின் தற்போதைய இருப்பு தொகை** | .. | **1,05,933** |

வரும் வாரத்தில் வங்கி இருப்பு தொகையிலிருந்து மேலும் ரூபாய் 1 லட்சம் **"வரியில்லா இறுதியாத்திரை"** வைப்பு நிதிக்கு சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது இலக்கான ரூபாய் 15 லட்சத்தை 2025 வருட ஆரம்பத்திலேயே அடைந்து விட்டோம்.

**நிலுவையில் இருக்கும் செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| *திரு J. நகுலன் மருத்துவ உதவித்தொகை* | .. | *5,000* |
| *திரு K. சந்திர கவுடர் மருத்துவ உதவித்தொகை* | .. | *5,000* |
| *ஊரில் நடக்க இருக்கும் செலவுகளுக்கான முன்பணம்* | .. | *5,000* |
| *ஊரில் மயான திட்ட கூட்ட செலவுகளுக்கான நமது பங்களிப்பு* | .. | *1,500* |
| *செல்வி S. ரித்திகாவின் மருத்துவ செலவு* | .. | *5,000* |
| ***எதிர்கொள்ள வேண்டிய மொத்த செலவினங்கள்*** | .. | ***21,500*** |

*கூட்டம் நடந்த நாளன்று பல உறுப்பினர்கள் தங்கள் பங்களிப்பான நன்கொடையை சங்கத்திற்கு அளித்துள்ளனர். அந்த விபரங்கள் வாட்ஸ் அப் மூலம் அங்கத்தினர்களிடம் பகிரப்படும். மேலும் பிப்ரவரி மாத பொருளாளர் அறிக்கையில் இந்த நன்கொடைகள் சேர்க்கப்படும்.*

## *சங்க வளர்ச்சி :*

*தொடர்ந்து சங்க வளர்ச்சி மற்றும் நிகழ்வுகள் குறித்து அங்கத்தினர்கள் கலந்துரையாடினர். அதில் கீழ்க்கண்ட முக்கியமான சாராம்சங்கள் குறிப்பிடப்பட்டன.*

- *சங்கத்தின் வரியில்லா இறுதி யாத்திரை திட்டத்திற்கு ரூபாய் 15 லட்சம் வைப்பு நிதி மார்ச் 2025 க்குள் திரட்ட வேண்டும் என்ற நமது இலக்கை வருட ஆரம்பத்திலேயே அடைந்து விட்டது சிறப்பு என்று அங்கத்தினர்கள் தெரிவித்தனர். நன்கொடை அளித்த அனைத்து சொந்தங்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியறிதலை அங்கத்தினர்கள் தெரிவித்தனர்.*
- *சங்கம் ஆரம்பித்த சில மாதங்களிலேயே கேஸ் மயான திட்டம் ஏற்படுத்தப்பட்டது ஒரு வரப்பிரசாதம் என்பதை சங்க உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்தனர். வரும் காலங்களில் மரண நிகழ்வுகள் ஏற்படும்பொழுது இறுதியாத்திரை எந்தவித சிரமமும் இன்றி எளிதாக நடத்தி முடிக்கலாம் என்பதை எண்ணி அங்கத்தினர்கள் அனைவரும் பரம்பொருளுக்கு நன்றியை தெரிவித்தனர்.*

## *மகா சிவராத்திரி விழா ஏற்பாடுகள்:*

*தொடர்ந்து பிப்ரவரி 26 ஆம் தேதி நமது ஊரில் நடக்க இருக்கின்ற மகா சிவராத்திரி விழா குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. அந்த கலந்துரையாடலின் சாராம்சம் வருமாறு:*

- *பிப்ரவரி 26 ஆம் நாள் புதன் கிழமை ஆதலால் பணியில் இருப்பவர்கள் விடுப்பு எடுப்பதில் சிரமம் இருக்கலாம் என்பதை அங்கத்தினார்கள் நினைவுகூர்ந்தனர். இருப்பினும் மகா சிவராத்திரியின் முக்கியத்துவத்தை கருதியும் மேலும் நமது சங்கம் ஆரம்பித்த பின்பு ஊர் சொந்தங்களுடன் சேர்ந்து இந்த விழாவை கொண்டாட வேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்பு நமது விருப்பத்தை தெரிவித்ததை முன்னிறுத்தி மகா சிவராத்திரி விழாவில் அனைவரும் கலந்து*

கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ஊர் சொந்தங்கள் சார்பாகவும் சங்க நிர்வாக குழு சார்பாகவும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

- பணியில் இருக்கும் அங்கத்தினர்கள் சிரமம் கருதாமல் முடிந்தவரை இந்த விழாவில் கலந்து கொண்டால் சிறப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
- சிவராத்திரி விழாவிற்கான செலவினங்களை சங்க உறுப்பினர்கள் அளிக்கும் நன்கொடை மூலம் எதிர்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதற்காக சங்க உறுப்பினர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.
- பெரும்பாலான அங்கத்தினர்கள் விழா ஏற்பாட்டை கவனிப்பதற்கு பிப்ரவரி 25ஆம் தேதியே ஊருக்கு செல்வதாகவும் அறிவித்தார்கள்.
- கோயமுத்தூரில் இருந்து 26 ஆம் தேதி காலை ஊர் செல்ல விரும்பும் அன்பர்களுக்கு வாகன ஏற்பாடுகள் செய்யப்படும். ஊர் செல்லும் அதே வாகனம் நமது சொந்தங்களை மறுநாள் கோவைக்கு அழைத்து வரும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.
- காலை 6 மணிக்கு கோவையில் இருந்து புறப்பட்டு சுமார் 9 மணி அளவில் ஊரை அடைந்த பிறகு சிறு தேநீர் இடைவெளிக்கு பின்பு அங்கத்தினர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் அனைவரும் நமது சிவன் கோயிலில் நேர்த்தி கடன் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுமார் 12 மணி வரை இந்த ஆன்மீக நிகழ்வு நடைபெறும்.
- சுமார் 1 மணி அளவில் நம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் மதிய விருந்து ஏற்பாடு செய்யப்படும்.
- விருந்துக்கான சமையல் ஏற்பாடுகள், பந்தல் அமைப்பது போன்ற அத்தனை பணிகளையும் நமது ஊரில் இருக்கும் சொந்தங்கள் முன் நின்று நடத்துவதாக தெரிவித்ததை அங்கத்தினர்கள் அனைவரும் பாராட்டினர். அவர்களுக்கு எந்த விதமான ஒத்துழைப்பு தேவையோ அதை அனைத்து சங்க உறுப்பினர்களும் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.
- மதிய உணவு முடிந்து 5 மணி வரை அங்கத்தினர்கள் வேறு சொந்த வேலைகள் அல்லது ஓய்வு எடுக்க அவகாசம் உள்ளது.
- 5 மணிக்கு அங்கத்தினர்கள் அனைவரும் ஒன்று சேரும்பொழுது சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் மற்றும் சங்க செயல்களின் விளக்க உரை ஏற்பாடு செய்யப்படும். இந்த கூட்டம் சங்கத்தின் குடும்பத்தினர்கள் அனைவரும் சங்கத்தின் உன்னத நோக்கத்தை புரிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாக இருக்கும்.
- இந்த கூட்டத்தை தொடர்ந்து சுமார் 7 மணி அளவில் இரவு உணவு ஏற்பாடு செய்யப்படும்.
- அந்த விருந்தினை முடித்த பிறகு இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை கண் விழித்து சிவன் வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகின்றது.

- அன்று இரவு நடைபெறும் வழிப்பாட்டில் பஜனை பாடல்கள், சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறும். அதற்கு வேண்டிய விரிவான ஏற்பாடுகள் வரும் நாட்களில் திட்டமிடப்படும்.
- இரவு முழுவதும் அவ்வப்பொழுது தேவையான டீ, காபி மற்றும் உணவுப் பொருட்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.
- 27 ஆம் தேதி காலை பூஜை முடிந்தவுடன் அங்கத்தினர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்படும். பிறகு கோவை வரும் வாகனம் சுமார் காலை 11 மணி அளவில் புறப்படும். மகா சிவராத்திரி தொடர்பான விழா ஏற்பாடுகள் குறித்து அவ்வப்பொழுது சங்க உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்படும்.

## முக்கிமலையில் சுடுகாட்டை சுற்றியுள்ள மரம் வெட்டுதல் தொடர்பாக:



முக்கிமலை கிராமத்தில் நமது முன்னோர்கள் 40 வருடமாக சுடுகாட்டை சுற்றியுள்ள ரெவென்யு நிலத்தில் மரங்கள் நட்டு அதை பாதுகாத்து வந்த நிலையில் கிராமவாசிகளான நமக்குத் தெரிவிக்காமல் மற்றும் கலந்தோசிக்காமல் மரங்களை வெட்டும் பணி தொடங்கி இருக்கின்றது என்பதை அறிந்த அங்கத்தினர்கள் தங்களது வருத்தத்தை தெரிவித்தனர்.

இந்த மரங்கள் முக்கிமலையின் மண்சரிவையும் மண்ணரிப்பையும் தடுத்து ஊருக்கு பாதுகாப்பு கொடுத்து வருகின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது.



இந்த சூழ்நிலையில் **இப்போதைய தாசில்தார் அவர்களை தொடர்பு கொண்ட பொழுது அவர் முந்தைய தாசில்தார் மரம் வெட்டுவதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்** என்று தெரிவித்தார்.

இந்த பணி சம்பந்தமாக ஊர்வாசிகளான நமக்கு ஏன் தகுந்த தகவல்கள் தெரிவிக்கவில்லை என்றும் இது பற்றிய விரிவான **தகவல் அறியும் வரை மரம் வெட்டும் பணியை நிறுத்த தாசில்தார் பரிந்துரை செய்ய வேண்டும்** என்றும் நமது ஊர் சொந்தங்கள் சார்பில் தாசில்தாருக்கு விண்ணப்பம் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

சுடுகாட்டை சுற்றி எந்த அளவிற்கான நிலப்பகுதியில் நமது மூதையாதையர்கள் மரம் நட்டு வளர்த்திருக்கின்றனர் என்பதற்கான **சேட்டலைட் படமும்** தாசில்தாருக்கு அனுப்பப்பட்டது.



கூட்டம் நடந்து கொண்டிருக்கும் அன்றே இது போன்ற **தீர்மானம் நாங்கள் நிறைவேற்றப் போகின்றோம் என்று தாசில்தாருக்கு தொலைபேசி மூலமும் தெரிவிக்கப்பட்டது**.

தாசில்தார் **தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மாவட்ட ஆட்சியரை சங்கம் சார்பில் தொடர்பு கொள்வோம் என்ற தகவலை தாசில்தார் அவர்களுக்கு கூட்டம் நடந்த அன்றே தெரிவிக்கப்பட்டது.**

**தாசில்தார் மாவட்ட ஆட்சியரை அணுக வேண்டாம்; தானே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி** அளித்ததின் பேரில் இப்போதைக்கு ஊர் சொந்தங்கள் சார்பாக விண்ணப்பம் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு தகுந்த விண்ணப்பம் எழுதி அதில் 12-1-2025 தேதி கூட்டத்தில் கலந்து கொண்ட அத்துணை அங்கத்தினர்களும் கையொப்பமிட்டனர்.

நமது சொந்தங்கள் சார்பில் திரு ஆர் சுகுமார், டி போஜன், பி சுந்தரம், எல் பெள்ளி மற்றும் கே ராமச்சந்திரன் ஆகியோர் **தாசில்தாரை சந்தித்து மனு அளிக்க வேண்டும்** என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.



வரும் நாட்களில் தாசில்தார் மூலமாக தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நம் சொந்தங்கள் அன்னவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு சென்று நமது கோரிக்கையை தெரிவிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

***திரு ஆர் சுகுமார் அவர்கள் 10-1-2025 ஆம் தேதி தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக*** சுடுகாட்டு பகுதியில் எத்தனை மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும், மரங்கள் வெட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டதா என்றும் தகவல் கேட்டு தாசில்தாருக்கு விண்ணப்பம் அனுப்பி இருக்கின்றார்.

இந்த தகவல் அறியும் விண்ணபத்திற்கும் நமது சொந்தங்கள் சார்பாக அனுப்பப்படும் விண்ணப்பத்திற்கும் எந்தவித பதில் வருகின்றது என்பதை பொறுத்து மேற்கொண்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

இது தொடர்பாக வரும் நாட்களில் நமக்கு கிடைக்கும் செய்திகளை அங்கத்தினர்களிடம் பகிர்ந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது

## இதர தீர்மானங்கள்:

நமது ஊரிலிருந்து ஒவ்வொரு மாதமும் சங்க கூட்டங்களில் கலந்து கொள்ள வரும் சொந்தங்களின் பயண மற்றும் உணவு செலவினங்கள் அனைத்தையும் சங்கமே ஏற்கும் என்று முடிவு செய்யப்பட்டது. இதற்காக சங்கம் மூலமாக தேவையான முன் பணம் அளிக்கப்படும்.

"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற சித்தாந்தத்தின் படி முக்கிமலையின் இறையாண்மைக்கும் வளர்ச்சிக்கும் ஊறு விளைவிக்கும் எந்த காரியங்கள் எதிர்காலத்தில் நிகழ்ந்தாலும் அதனை எதிர்கொண்டு தகுந்த தீர்வுகளை காண வேண்டும் என்று ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது.

சங்க உப தலைவர் திரு K. அரசு அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம்

## *26-2-2025* * முக்கிமலை

*முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம் 26-2-2025 மகா சிவராத்திரி தினத்தன்று முக்கிமலை ஊரில் நடந்தது. இந்த கூட்டத்தில் முக்கிமலை சொந்தங்கள், முக்கிமலை பெண்கள், மருமகன்கள், குழந்தைகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.*





*கூட்டத்திற்கு ஊர் தலைவர் திரு K. சந்திர கவுடர் அவர்கள் மற்றும் சங்கத்தின் தலைவர் திரு. J. சந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினர். கூட்ட த்தில் நடத்திய உரையாடல்கள் மற்றும் தீர்மானங்களில் சாராம்சம் வருமாறு:*

1. *சங்கம் ஆரம்பித்த பின்பு முதல் மரண நிகழ்வாக சங்க உறுப்பினர் திரு N. மாதன் அவர்கள் மறைவு (25-2-2025) இருந்தது. அன்னாரின் மறைவிற்கு பொதுக்குழு உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். அவரை இழந்து வாடும் திருமதி சுபத்ரா மாதன், மகன் திரு M. ஸ்ரீபதி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அத்துணை பேருக்கும் பொதுக்குழு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து இறைவன் அவர்களுக்கு இந்த இழப்பை தாங்கும் சக்தியை தர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர்.*

2. *திரு மாதன் அவர்களின் மறைவை தொடர்ந்து அவரது புதல்வர் திரு M. ஸ்ரீபதி அவர்களை சங்கத்தின் உறுப்பினராக பதிவு செய்யும் தீர்மானம் நிறைவேறியது.*

3. திரு மாதன் அவர்களின் ஈமச்சடங்கிற்கு குறுகிய கால அவகாசமே இருந்த போதும், பெருவாரியான சொந்தங்கள் நேரில் கலந்து கொண்டு இறுதி யாத்திரையை நேர்த்தியாக நடத்திக் கொடுத்தமைக்கு பொதுக்குழு பாராட்டுதல்களை தெரிவித்தது.

4. நம் சங்க விதிமுறைகள் படி பிரேதத்தை ஊருக்கு எடுத்து செல்லும் ஆம்புலன்ஸ் கட்டணம் தவிர இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட அனைத்து செலவுகளையும் சங்கமே ஏற்று ஊர் சொந்தங்களுக்கு ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலை முன்பணமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் சங்கத்தின் பிரதான திட்டமான "வரியில்லா இறுதி யாத்திரை" நடைமுறைக்கு வந்துள்ளது என்பதையும் பொதுக்குழு பதிவு செய்தது. எல்லா செலவுகள் பட்டியல் பெறப்பட்ட பின் நிலுவை தொகை அளிக்கப்பட்டு செலவுகள் விவரம் சங்க கணக்கில் பதிவு செய்யப்படும்.

5. கேஸ் மயானத்தில் முக்கிமலையிலிருந்து தகனம் செய்யப்பட்ட முதல் சொந்தம் திரு N. மாதன் அவர்கள் என்பதும் பதிவு செய்யப்பட்டது.

6. திரு மாதன் அவர்களின் இறுதியாத்திரையை தொடர்ந்து குடும்பத்தில் நடத்தக்கூடிய சடங்குகள் அனைத்தையும், 25-2-2025 அன்றே போர்க்கால அடிப்படையில் நடத்தி முடித்த அவரது குடும்ப அங்கத்தினர்களுக்கும் நமது முக்கிமலை சொந்தங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளை பொதுக்குழு பதிவு செய்தது.

7. இந்த இறுதியாத்திரை நடத்துவதில் கிடைத்த அனுபவம் எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும்பொழுது மிக நேர்த்தியுடன் கையாள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.

8. சங்கத்தின் மருத்துவ உதவி திட்டத்தின் மூலமாக அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஊர் தலைவர் திரு K. சந்திர கவுடர், சங்க உறுப்பினர் திரு J. நகுலன் மற்றும் சங்க உறுப்பினர் திரு C. சோமசுந்தரத்தின் மகள் குமாரி S. ரித்விகா ஆகியோருக்கு தலா ரூபாய் 5,000 உதவித்தொகை வழங்கப்பட்டது.





9. 26-2-2025 காலை மகா சிவராத்திரி விழாவின் ஓர் அங்கமாக அன்னதானத்திற்கான கொடி ஏற்றப்பட்டு சிவ வழிபாடு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. மகாசிவராத்திரி சதுர்த்தசி நேரம் ஆரம்பித்த காலை 11.08க்கு பிறகு நமது சிவன் திருக்கோவிலில் விமரிசையாக பூஜைகள் செய்து அன்று இரவு நடத்த உள்ள மகா சிவராத்திரி வழிபாட்டிற்கு பரம்பொருள் ஆசிர்வாதம் அளிக்க வேண்டும் என்று சிவ ஸ்தலத்திலும் எத்தை அம்மன் சுத்துகல்லிலும் ஆத்மார்த்தமாக பிரார்த்தனை செய்தனர்.











10. நமது முக்கிமலை ஊரில் சிவன் கோவில் நிறுவிய பின்பு விமரிசையாக கொண்டாடப்படும் முதல் மகா சிவராத்திரியாக அமைய வேண்டும் என்ற பிரார்த்தனை அத்துணை சொந்தங்கள் மனதிலும் எழுந்ததை தொடர்ந்து பெருவாரியான சொந்தங்கள் இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நடக்கும் மகா சிவராத்திரி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது.

11. காலை பூஜைகளை தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சி தொடங்கி பின்பு ஆடல் பாடல் நிகழ்வுகளும் நடைபெற்றதற்கு சொந்தங்கள் பரம்பொருள் சிவபெருமானுக்கு தங்களது நன்றிகளை காணிக்கையாக்கினர்.











## மகாதேவருடன் மகா சிவராத்திரி



- மகா சிவராத்திரி இரவு (26-2-2025) நமது ஊர் சிவன் கோயிலில் வழிபாடு நடத்தியது நம்முள் ஆன்மீக அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதே நிதர்சனம். 50க்கும் மேற்பட்ட இளையவர்கள் முதல் பெரியவர்கள் வரை பஜனை, நாம சரணம், சத்சங்கம் ஆகியவற்றில் கலந்து கொண்டது மனதில் உறுதியையும் சிவபக்தியையும் அதிகரித்திருக்கிறது என்றால் மிகை ஆகாது. மகா சிவராத்திரி விழாவை மிகவும் சிறப்பாக நடத்த ஆசீர்வாதம் அளித்த மகாதேவருக்கு "நமசிவாய" நாமங்கள் கோடி சமர்ப்பணம்!

- அங்கத்தினர்களின் பிரார்த்தனைக்கு ஏற்ப முக்கிமலையில் சிவன் கோவில் கட்டியதற்கு பின்பு மிகவும் விமரிசையாக, அதிக அளவில் சொந்தங்கள் கலந்து கொண்ட,, மகா சிவராத்திரி விழாவாக 26-2-2025 இரவு தொடங்கி 27-2-2025 காலை முடிந்த விழா இருந்திருக்கும் என்று அங்கத்தினர்கள் பதிவு செய்து விழாவில் எந்த ஒரு அசம்பாவிதமும் நிகழா வண்ணம் நேர்த்தியாக நமது கைகளைப் பிடித்து மகாசிவராத்திரி விழாவை விமரிசையாக நடத்திக் கொடுத்த பரம்பொருளுக்கு கோடி நமஸ்காரங்களை காணிக்கையாக்கி வரும் காலங்களிலும் இதே போன்று மகாசிவராத்திரி விழா நடைபெற பரம்பொருள் ஆசீர்வதிக்க வேண்டும் என்று அங்கத்தினர்கள் தங்கள் பிரார்த்தனையை செலுத்தினர்.



- மகா சிவராத்திரி விழாவிற்கு மனமுவந்து நன்கொடை அளித்த அத்துணை சொந்தங்களுக்கும் மனமார்ந்த நன்றியை சங்கம் தெரிவிக்கின்றது. பூஜை மற்றும் அன்னதான நிகழ்வுகளுக்காக நமது ஊர் சொந்தங்களுக்கு ரூபாய் 55,000 முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து செலவினங்கள் விவரங்கள் பெற்ற பின் வரவு செலவு பட்டியல் தயார் செய்யப்பட்டு அங்கத்தினர்களுடன் பகிரப்படும்.

- அடுத்தடுத்த இரண்டு நாட்களில் நடந்த நிகழ்வுகளான இறுதி யாத்திரை மற்றும் மகா சிவராத்திரி விழா அங்கத்தினர்களில் தயார் நிலையை உறுதிப்படுத்துவதற்காக பரம்பொருளே ஏற்படுத்திய நிகழ்வுகள் என்பதை உணர்ந்து இனி எந்த விதமான நிகழ்வுகள் எந்த தருணத்தில்

நிகழ்ந்தாலும் மன உறுதியுடனும் சரியான திட்டமிடலுடனும் நடத்துவது சாத்தியம் என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.

***வளர்க சங்கம்!!***

***ஓம் நமசிவாய!!!***

# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *15-3-2025* * பெரியநாயக்கன்பாளையம்

சங்கத்தின் மார்ச் மாத நிர்வாக குழு கூட்டம் 15-3-2025 அன்று கோயமுத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள குன்னாமை நிலையத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

திரு K.K. ராமா கவுடர்
திரு D. போஜன்
திரு L. பெள்ளி
திரு B. சுந்தரம்
திரு N. ராஜன்
திரு R. சுகுமார்

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

திரு J. சந்திரன் – தலைவர்
திரு K. அரசு - உப தலைவர்
திரு R. சுப்பிரமணி – செயலாளர்,
திரு B. சகாதேவன் – பொருளாளர்
திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்
திரு K. நஞ்சுண்டன் – புரவலர்
திரு B. ஜோகி – புரவலர்
திரு K. மணி - புரவலர்
திரு M N G மணி – புரவலர்
திரு N. சுகுமாரன் – புரவலர்
திரு J.B. சகாதேவன் - சங்க உறுப்பினர்

திரு R. சிவகுமார் - இணை செயலாளர், திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர், திரு B. மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர், திரு M.R. சிவகுமார் - நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.



நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களையும் சங்கத்தின் தலைவர் திரு J. சந்திரன் அவர்கள் வரவேற்றார். சமீபத்தில் முக்கிமலையில் நடந்த மகாசிவராத்திரி விழாவையும் அதற்கு முன்பாக நிகழ்ந்த சங்க உறுப்பினர் திரு N. மாதன் அவர்களின் இறுதியாத்திரையையும் சிறப்பாக நடத்திக் கொடுத்த சொந்தங்கள் அனைவருக்கும் அவர் மனமார்ந்த நன்றியை தெரிவித்தார்.

தொடர்ந்து மகா சிவராத்திரி விழாவின் வரவு செலவு கணக்குகள் மற்றும் விழாவை பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது. அதன் சாராம்சம் வருமாறு

**மகா சிவராத்திரி விழா நன்கொடைகள் (ரூபாயில்)**

| | | | |
|---|---|---|---|
| 1 | N. சுகுமாரன் | .. | 26,000 |
| 2 | M.N.G. மணி | .. | 25,000 |
| 3 | டாக்டர் N.. ராஜன் | .. | 10,000 |
| 4 | N லைலா சந்திரன் | .. | 5,000 |
| 5 | R. சிவகுமார் | .. | 4,000 |
| 6 | K. சந்திரன் | .. | 3,000 |
| 7 | K. அரசு | .. | 3,000 |
| 8 | பார்வதி கணேசன் | .. | 3,000 |
| 9 | N. ராஜேந்திரன் | .. | 2,500 |

| | | | |
|---|---|---|---|
| 10 | J. சந்திரன் | .. | 2,000 |
| 11 | K. ராமச்சந்திரன் | .. | 2, 000 |
| 12 | B. ஜோதி | .. | 2,000 |
| 13 | K. மணி | .. | 2,000 |
| 14 | K. நஞ்சுண்டன் | .. | 2,000 |
| 15 | J. நகுலன் | .. | 2,000 |
| 16 | K.K. ராமன் | .. | 2,000 |
| 17 | B. பீமன் | .. | 2,000 |
| 18 | R. விக்னேஷ் | .. | 2,000 |
| 19 | M ஸ்ரீபதி (N மாதன்) | .. | 2,000 |
| 20 | B தருமன் | .. | 2,000 |
| 21 | R சுப்ரமணி | .. | 1,500 |
| 22 | R சுனில்குமார் | .. | 1,500 |
| 23 | L பெள்ளி | .. | 1,500 |
| 24 | B பிரபு | .. | 1,000 |
| 25 | B ராஜேஷ் | .. | 1,000 |
| 26 | J. B. சண்முகம் | .. | 1,000 |
| 27 | R. ராமேஷ் | .. | 1,000 |
| 28 | B. சகாதேவன் | .. | 1,000 |
| 29 | சரஸ்வதி பீமன் | .. | 1,000 |
| 30 | பார்வதி ராமன் (காங்கியம்மாள்) | .. | 1,000 |
| 31 | R. பிரதீப் | .. | 1,000 |
| 32 | M. அம்பிகா மற்றும் M. தேவிகா (K. மணி) | .. | 1,000 |
| 33 | B. முகேஷ் (B. பீமன்) | .. | 1,000 |
| 34 | B. ஜெயந்தி (L பெள்ளி) | .. | 1,000 |
| 35 | C. நிஷாந்தி (K. சந்திரன்) | .. | 1,000 |
| 36 | R. சுதா மற்றும் சுவித் (K.K. ராமன்) | .. | 1,000 |
| 37 | B. தீபா மற்றும் B. ஸ்ரீதேவி (L பெள்ளி) | .. | 1,000 |
| 38 | B. சாந்தி (B. சுந்தரம்) | .. | 1,000 |
| 39 | R. சோனா (M.R. சிவகுமார்) | .. | 1,000 |
| 40 | B. சுந்தரம் | .. | 600 |
| 41 | B. மோகன்ராஜ் | .. | 500 |
| 42 | M.R. சிவகுமார் | .. | 500 |
| 43 | B. மணிவேலன் | .. | 500 |
| 44 | J.B. சகாதேவன் | .. | 500 |
| 45 | S. நரேஷ் (J.B. சுரேஷ்) | .. | 500 |
| 46 | இத்தலார் மல்லு மம்மி (J. நகுலன்) | .. | 500 |
| 47 | S. ஸ்ருதி (J.B. சுரேஷ்) | .. | 500 |
| | **மொத்தம்** | .. | **1,28,100** |

## மகா சிவராத்திரி விழா செலவினங்கள் (ரூபாயில்)

**சொத்து வகையில் வாங்கப்பட்ட பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | தேநீர் கொள்கலன் | .. | 3,886 |
| 2 | சவுக்கு மரம் | .. | 2,800 |
| 3 | ஷாமியானா | .. | 26,000 |
| | **துணை மொத்தம்** | .. | **32,686** |

**அலங்காரப் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 4 | வண்ண காகிதம் | .. | 1,100 |
| 5 | ஆணிகள், துடைப்பம் போன்றவை | .. | 310 |
| 6 | பிளாஸ்டிக் மாலைகள் | .. | 320 |
| 7 | சீரியல் லைட் | .. | 4,500 |
| | **துணை மொத்தம்** | .. | **6,230** |

**அன்னதானப் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 8 | அவரை | .. | 2,500 |
| 9 | உருளைக்கிழங்கு | .. | 2,780 |
| 10 | காய்கறிகள் | .. | 4,850 |
| 11 | காகிதக் கோப்பை, அரிகா தட்டுகள் | .. | 1,450 |
| 12 | நெய் | .. | 1,200 |
| 13 | அரிசி மற்றும் இதர உணவு பொருட்கள் | .. | 13,245 |
| 14 | தயிர் | .. | 460 |
| 15 | மளிகை சாமான்கள் - எடக்காடு | .. | 2,000 |
| 16 | இனிப்பு -7 கிலோ | .. | 2,660 |
| 17 | உணவு இலைகள் | .. | 1,800 |
| 18 | வாழைப்பழம் | .. | 1,080 |
| | **துணை மொத்தம்** | .. | **34,025** |

**உணவு தயாரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 19 | சிலிண்டர் | .. | 2,000 |
| 20 | சமையல்காரர்கள் | .. | 17,000 |
| 21 | தொழிலாளர் கட்டணங்கள் | .. | 3,500 |
| | **துணை மொத்தம்** | .. | **22,500** |

**பொதுச் செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| 22 | காலை உணவு – உதகையில் | .. | 485 |
| 23 | பார்க்கிங் கட்டணம் | .. | 200 |

| | | | |
|---|---|---|---|
| *24* | மதிய உணவு | .. | *240* |
| *25* | தேநீர் செலவுகள் | ,, | *100* |
| *26* | விறகு கொண்டு வருவதற்கு கட்டணம் | .. | *100* |
| | **துணை மொத்தம்** | .. | ***1,125*** |

**பூஜை**

| | | | |
|---|---|---|---|
| *27* | பூஜை பொருட்கள் | .. | *1,000* |
| *28* | துணி | .. | *685* |
| *29* | பழங்கள் | .. | *400* |
| *30* | பொரி கடலை | .. | *500* |
| *31* | மாலை-*1* அடி-*10*-ரூ. *120* | .. | *1,200* |
| *32* | மாலை-*1.5* அடி-*5*-ரூ. *150* | .. | *750* |
| *33* | மாலை-*2* அடி-*5*-ரூ. *200* | .. | *1,000* |
| *34* | மாலை - நிலவு-*1* செட் | .. | *1,500* |
| *35* | வில்வம், துளசி மற்றும் மாவிலை | .. | *200* |
| | **துணை மொத்தம்** | .. | ***7,235*** |

**போக்குவரத்து**

| | | | |
|---|---|---|---|
| *36* | வாகன வாடகை - உதகை | .. | *1,700* |
| *37* | வாகன வாடகை - கோவை சொந்தங்கள் | .. | *13,000* |
| *38* | பொருட்கள் எடுத்து வர - கோவை | .. | *3,500* |
| | **துணை மொத்தம்** | .. | ***18,200*** |
| | **மொத்தம்** | .. | ***1,22,001*** |

***மகா சிவராத்திரி விழா மற்றும் செலவினங்கள் பற்றிய கலந்தாய்வு சாராம்சம்:***

- சிவபெருமானின் ஆசீர்வாதத்தில் மகாசிவராத்திரி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது என்பது வந்தவர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து.
- இனிவரும் வருடங்களிலும் தொடர்ந்து மகாசிவராத்திரி விழா கொண்டாட வேண்டும் என்பது அனைவரின் ஏகோபித்த கருத்து.
- விழாவுக்காக தாராளமாக நன்கொடை அளித்த அனைத்து சொந்தங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவர்களது ஒத்துழைப்பு வரும் வருடங்களிலும் இருக்க வேண்டும் என்பது அனைவரின் வேண்டுகோள் என்பது பதிவு செய்யப்பட்டது.
- பெறப்பட்ட நன்கொடையை விட செலவினங்கள் குறைவு என்றிருந்தாலும் பொது செலவினங்களில் இன்னும் குறைத்திருக்கலாம் என்பது அனைவரின் கருத்தாக இருந்தது. இந்த விழா நமது சங்கத்திற்கு முதல் அனுபவம் என்பதை கருத்தில் கொண்டு இந்த வருடத்தில் கிடைத்த அனுபவத்தை உபயோகப்படுத்தி

வரும் வருடங்களில் செலவினங்களை வெகுவாக குறைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- விழா ஏற்பாடுகளுக்காக அயராது உழைத்த அதனை சொந்தங்களுக்கும், குறிப்பாக நமது ஊரில் வாழும் அங்கத்தினர்களுக்கும் நன்றியை சங்கம் பதிவு செய்கிறது.
- அடுத்த வருடம் முதல் ஊர் சொந்தங்களும் முழுமையாக விழாவில் கலந்து கொள்வதற்கு வசதியாக உணவு ஏற்பாடுகள், உணவு பரிமாறுதல் போன்ற அத்தனை செயல்களுக்கும் உணவு தயார் செய்யும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

### *அமரர் N. மாதன் அவர்கள் இறுதியாத்திரை:*

*நமது சங்கம் ஆரம்பித்த பின்பு சங்க உறுப்பினர் என்ற வகையில் முதல் மரண நிகழ்வு அமரர் திரு N. மாதன் அவர்களது மறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இறுதி யாத்திரையை நடத்துவது சங்க உறுப்பினர்களுக்கும், நமது ஊர் சொந்தங்களுக்கும் சிறப்பான அனுபவமாக இருந்தது என்பதை அனைவரும் நினைவு கூர்ந்தனர். மேலும் கேஸ் மயானத்தில் முக்கிமலை ஊரிலிருந்து தகனம் செய்யப்பட்ட முதல் பிரேதம் என்பது திரு N. மாதன் அவர்களின் பூத உடல் என்பதும் குறிப்பிடத்தக்கது. திடீரென நடந்த இந்த மரண நிகழ்வினை தங்களது கடினமான உழைப்பாலும், ஒட்டுமொத்த ஒத்துழைப்பாலும், சமயோசித நடவடிக்கைகளாலும் திறம்பட நடத்திக் கொடுத்த அனைத்து சொந்தங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

### *இறுதியாத்திரைக்கான செலவினங்கள் கீழ் வருமாறு (ரூபாயில்):*

| | | |
|---|---|---|
| **உணவுப் பொருட்கள்** | | |
| *காய்கறிகள்* | .. | *1,270* |
| *அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வகையில்* | .. | *14,604* |
| *இதர உணவு பொருட்கள்* | .. | *55* |
| *எடக்காட்டில் வாங்கப்பட்ட மளிகை* | .. | *910* |
| **துணை மொத்தம்** | .. | ***16,839*** |
| **மாயனம் சம்பந்தப்பட்ட செலவுகள்** | | |
| *இறுதிசடங்கு மாலை* | .. | *600* |
| *இறுதி எரிவாயு சிலிண்டர்* | .. | *4,000* |
| *ஆம்புலன்ஸ்* | .. | *2,500* |
| **துணை மொத்தம்** | .. | ***7,100*** |
| **தொழிலாளர் கட்டணம்** | .. | *1, 600* |

**சிற்றுண்டிகள்**

| | | |
|---|---|---|
| வரிக்கி | .. | *1,000* |
| பால் | .. | *1,020* |
| பிஸ்கட் மற்றும் கூடுதல் வரிக்கி | .. | *1,100* |
| **துணை மொத்தம்** | .. | ***3,120*** |

**போக்குவரத்து**

| | | |
|---|---|---|
| மரணத்தை அறிவிக்க வாகனம் | .. | *1,500* |
| மளிகை கொண்டுவர வாகன செலவு | .. | *500* |
| கோயம்புத்தூர் வாகனம் | .. | *3,800* |
| **துணை மொத்தம்** | .. | ***5,800*** |
| **மொத்தம்** | .. | ***34,459*** |

- இறுதி யாத்திரை சம்பந்தப்பட்ட அனைத்து செலவுகளையும் விதிகளுக்கு ஏற்ப சங்கமே ஏற்றுள்ளது என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.
- சங்க உறுப்பினர்களின் தயார் நிலையை உறுதிப்படுத்தும் இறுதியாத்திரையாக திரு N. மாதன் அவர்கள் மறைவு இருந்தது என்றும் இதில் பெற்ற அனுபவம் வரும் காலங்களில் எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தேவையான அனுபவத்தை அளித்துள்ளது என்பதையும் அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.
- வரும் காலங்களில் நடைபெறும் மரண நிகழ்வுகளுக்கு ஏற்படும் செலவுகள் தற்போதைய மொத்த செலவைவிட குறைவாகவோ அதிகமாகவோ இருக்கலாம் என்பதையும் அங்கத்தினர்கள் பதிவு செய்தனர். இருப்பினும் நமது நிதி நிலை திட்டமிடலில் இறுதியாத்திரைக்கு சராசரியாக ரூபாய் 35 ஆயிரம் என்று குறிப்பிட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

## இதர தீர்மானங்கள்:

1. 2024-2025 நிதிநிலை ஆராயப்பட்டது. இறுதியாத்திரைக்கான நமது இலக்கான ரூபாய் 15 லட்சம் வைப்பு நிதியில் உள்ளது. இந்த நிதி வரும் காலங்களில் நமது சங்கத்தின் உன்னத நோக்கமான "வரியில்லா இறுதி யாத்திரைக்கு" உறுதுணையாக இருக்கும் என்பதை அனைவரும் நினைவு கூர்ந்தனர்.

2. சங்கம் வளர்ந்து வரும் நிலையில் அதன் சித்தாந்தமும் எல்லா அங்கத்தினர்களிடமும் தெளிவாக இருக்க வேண்டும் என்பதையும் அனைவரும் வலியுறுத்தினர். இறுதியாத்திரைக்கான வைப்பு நிதி வேறு எந்த காரியங்களுக்கும் எந்த காலத்திலும் பயன்படுத்தக் கூடாது என்று சங்க தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது மீண்டும் நினைவு கூறப்பட்டது.

3. பூர்வாங்க நிதிநிலைப்படி 2024-25 நிதிநிலை ஆண்டில் எதிர்பாராத மரண நிகழ்வுகள் (முக்கிமலை பெண்கள் மற்றும் திரு N. மாதன்) ஏற்பட்டதால் சங்க கணக்கில் 15-3-2025 அன்று சுமார் ரூபாய் 31,000 பற்றாக்குறை இருப்பதை உறுப்பினர்கள் பதிவு செய்தனர்.

4. இந்த நிதிநிலை ஆண்டின் இறுதிக்கு இன்னும் 15 நாட்கள் இருப்பதை கருத்தில் கொண்டு சங்கத்திற்கு நன்கொடை அளிப்பதற்கு ஏற்கனவே உறுதி அளித்தவர்களும் நன்கொடை அளிக்காதவர்களும் அவர்களால் முடிந்த நன்கொடையை 31-3-2025க்குள் அளித்தால் இந்த பற்றாக்குறையை ஈடு கட்டலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

5. 2024-25 முழு நிதிநிலை அறிக்கை ஏப்ரல் மாதத்தில் அங்கத்தினர்களிடம் பகிரப்படும்.

6. நமது சங்கத்தின் உறுப்பினர் சந்தா ஏப்ரல் 2025 முதல் அரை வருடம் மற்றும் முழு வருட சந்தாவாக மாற்றலாம் என்றும் சந்தா வகையில் இருந்து மாத சந்தா நீக்கப்படலாம் என்றும் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது. நடைபெறும் 2024-2025 நிதியாண்டில் அனைத்து உறுப்பினர்களும் முழு சந்தாவையும் அளித்திருக்கும் நிலையில் நமது அறிக்கையிலும் முழு ஆண்டு சந்தா என்றே குறிப்பிட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

7. 2025-26 ஆவது ஆண்டு முதல் வருட சந்தாவாக ரூபாய் 2,000 மற்றும் அரை வருட சந்தாவாக ரூபாய் 1,000 என்று நிர்ணயிக்கலாம் என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. நமது வைப்பு நிதிக்கு 2025 நவம்பர் மாதத்தில் இருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை வட்டி கிடைக்கும். 2025 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்வதற்கு உதவியாக அங்கத்தினர்கள் இந்த சந்தாவை 2025 ஏப்ரல் அல்லது மே மாதத்தில் செலுத்தினால் சிறப்பாக இருக்கும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

8. சங்கத்திற்கு மாதாந்திர நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற வேண்டும். ஆனால் இந்த கூட்டங்கள் நேருக்கு நேர் பங்குபெறும் கூட்டமாக இல்லாமல் ஆன்லைன் முறையிலும் நடைபெறலாம். எனவே விவாதிக்கப்படும் நிகழ்வுகள் மற்றும் செலவினங்கள் இவற்றை கருத்தில் கொண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை நேருக்கு நேர் பங்கு பெரும் கூட்டமாக நடத்தலாம் என்றும் மற்ற மாதாந்திர கூட்டங்களை ஆன்லைன் மூலமாகவும் அல்லது முக்கியத்துவம் கருதி நேருக்கு நேராகவோ கூட்டலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. நேருக்கு நேர் நடத்தப்படும் கூட்டமானது கோயம்புத்தூரில் மட்டும் அல்லாமல் வரும் காலங்களில் நமது ஊரிலும் நடைபெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

9. மகாசிவராத்திரி விழாவை தாண்டி வருடாந்திர விழா நடத்துவது சிறப்பாக இருக்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. மகாசிவராத்திரி விழா வேலை நாட்களில் வருகின்ற வாய்ப்பு இருப்பதால் அனைவருக்கும் விடுமுறையான காலகட்டத்தில் ஆண்டு விழா முன் கூட்டியே திட்டமிட்டு நடத்தலாம் என்றும், இதில் நமது சொந்தங்கள், அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. வருட ஆண்டு விழாவானது ஊரில் ஒரு முறையும் கோயமுத்தூரில் ஒரு முறையும் சுழற்சி முறையில் நடத்தினால் சிறப்பாக இருக்கும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.

சங்கத்தின் உப தலைவர் திரு *K.* அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக முடிவுற்றது.